www.padippakam.com இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O


# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 34 | 01 மாசி 1996 | விலை: ரூபா 7.00




# புலிகள் குழப்பிய இந்தியா தொடரும் வேதனை தமிழ் மக்களுக்கே!



இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் அவர்கள் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு 19.01.96இல் கொழும்பு வந்தார். இலங்கை இந்திய கூட்டுக்கமிஷனில் பங்குபற்றுவதற்காக கொழும்பு வந்த அமைச்சர் அவர்கள், ஜனாதிபதி, பிரதமர், வெளியுறவு அமைச்சர் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை பற்றியும் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் சொற்பொழிவாற்றினார்.

இவை தவிர, ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ், ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி. போன்ற தமிழ்க் கட்சிகளையும் தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தனித்தும் சந்தித்து உரையாடினார்.

ஐந்து கட்சி சார்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களும், ரெலோ சிறீகாந்தா அவர்களும். இந்திய அரசு இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டு ஓர் முழுமையான தீர்வைக் காணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை வலியுறுத்துவதில் அரசுக்கு உள்ள பலவீனம், என்ன தீர்வையும் எதிர்ப்பது என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் போக்கு, அரசியல் தீர்வே கூடாது இராணுவத் தீர்வை கொண்டு வர வேண்டும் என்ற சிங்கள வெறியர்களின் கூக்குரல், இவற்றிற்கு மேலாக, யுத்தத்தின் மேல் காதல் கொண்டுள்ள புலிகள்... இவர்கள் எல்லோருமே ஏதோ ஓர் வகையில் சமாதானத் தீர்வுக்கு குந்தகமாக இருக்கிறார்கள் என்பது விளக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த இந்திய வெளியுறவு அமைச்சர் அவர்கள், இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்தியா பல இலட்சம் துருப்புக்களை அனுப்பியது: இந்திய இலங்கை ஒப்பந்தம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. ஆனால் இறுதியில் நடந்ததென்ன? 1100 இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். அதற்கு மேலால், உங்களுக்கு உதவி 'செய்யவந்த ராஜீவ்காந்தியும் கொல்லப்பட்டார். இந்நிலையில் மேற்கொண்டு எப்படியான உதவிகளை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? என்று வினா எழுப்பினார்:



'புலிகளின் நடவடிக்கைகள் பிழையானவை, ராஜீவ்காந்தியை கொலை செய்ததையோ, இந்திய அமைதி காக்கும் படையுடன் புலிகள் யுத்தம் புரிந்ததையோ தமிழ் மகள் ஏற்றுக்கொள்ளவில்லை. நடந்து முடிந்த அச்சம்பவங்களுக்காக நாம் வெட்கப்படுகின்றோம் வேதனைப்படுகின்றோம். புலிகள் பிரேமதாசா கூட்டு நடவடிக்கையால் இந்திய இலங்கை ஒப்பந்தம் முழுமையாக நிறைவேறு முன்னரே இந்தியப் படை வெளியேறிவிட்டது.

1990 இல் இருந்து இன்று வரை 7 வருடங்களாக மீண்டும் இங்கு யுத்தம்தான் நடைபெறுகின்றது. ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகியும் நாளாந்தம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்... இந்நிலையில் யுத்தத்தை நிறுத்தவேண்டியதும் கௌரவமான தீர்வொன்றைக் காண வேண்டியதும் எத்துணை அவசியம் என்பதைத் தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தின.

இதற்குப் பதிலளித்த இந்திய வெளியுறவு அமைச்சர் அவர்கள் இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதை இந்திய மக்கள் விரும்பவில்லை எனவும், இது உள்நாட்டுவிவகாரம் இலங்கை ஓர் இறைமையுள்ள அரசு, எனவே அதன் உள்விவகாரங்களில் தலையிடுவது நாகரீகமாகாது என்றும் கூறினார்.

காலம் வரும்பொழுது அரசும் புலிகளும் தாம் விடும் தவறுகளை உணர்வார்கள் அப்பொழுது சரியான தீர்வு ஏற்படும். அதுவரையில் நீங்களும், அரசியல் தீர்வுக்காக விட்டுக்கொடுக்காமல் வலியுறுத்துங்கள் எனக் கூறினார்.

ஒரு பக்கத்தில் ராஜீவ் காந்திக்கு பின்னர் இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையில் பாரிய மாற்றங்களைச் செய்துள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நேருவும், இந்திராவும், ராஜீவும் உலகில் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தனர். காலனித்துவம், நிறபேதம், சியோனிசம் போன்றவற்றைக் கண்டித்தனர்.

ஆனால் இன்று அயல் நாடுகளுடன் நல்லுறவு என்ற அடிப்படையில் மனித உரிமை மீறல்களையே கண்டுகொள்ளாத ஒரு போக்கையே இந்தியா கடைப்பிடிக்கின்றது. இந்தியாவின் கண்ணோட்டத்தில் அயல் நாடுகளுடன் நல்லுறவு கொண்டிருக்க வேண்டும் என்பதில் தவறில்லை. ஆனால் 35 லட்சம் மக்களைக் கொண்ட ஒரு சிறுபான்மையினம் நாளாந்தம் யுத்த வெறியர்களால் கொல்லப்படுவதையும் அகதிகளாக்கப்படுவதையும் கண்டுகொள்ளாமல் இருப்பதுதான் கவலைக்குரியது.

புலிகள் இந்திய அமைதிப்படையுடன் யுத்தம் புரிந்ததும் ராஜீவ்காந்தியை கொலை செய்தமையும் இலங்கை தொடர்பான இந்தியாவின் போக்கில் பாரிய மாற்றங்கள் ஏற்படக்காரணமாய் அமைந்துள்ளது என்பதை நாம் உணரவேண்டும்.

புலிகள் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தமையால் தான் கலைஞர் கருணாநிதியின் முன்னைய ஆட்சியும் கலைக்கப்படக் காரணமாக அமைந்தது. இதனால் கலைஞர் கருணாநிதியும் கூட ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக அசட்டையாக இருப்பதையே காண முடிகின்றது.

இன்றைய இந்திய அரசின் நிலைப்பாடானது சிறீலங்கா அரசுக்கு மிகவும் சாதகமாக இருக்கலாம். ஆனால் யுத்தத்தினால் அவதிக்குள்ளாக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களுக்கு இது மிகவும் வேதனையானதே.



இலங்கையின் தொழிற்சங்க இயக்க முன்னோடியும் முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவருமான தோழர் பீட்டர் கெனமனுக்கு எங்களது அஞ்சலி!

## உள்ளே....


இந்திய அரசு உணர வேண்டும்....
என். ஆர். சோமு 02
இனிய தமிழ் மக்களே!
செயலாளர் நாயகம் மடல் 03
முகமிழந்து போன மக்கள்...
தி. சிறீதரன் 04
திருமலைக் கருத்தரங்கு 06
அன்பின் புலி நண்பனுக்கு....
பிரான்சிலிருந்து செண்பகன் கடிதம் 06
நாங்கள் செய்ய ஒன்றும் இல்லையா?
சுனந்த தேசப்பிரிய 07
அரசியல் வெற்றிடங்கள்
ஜெர்மனியிலிருந்து சாரதி 08
குறுக்கெழுத்துப் போட்டி-30 09
மன்னாரில் பொங்கல் கவியரங்கு 10
எர்னஸ்டோ செ குவேரா
தருமு சிவராம் 11
கிடுக்கிப் பிடிக்குள் கிழக்கு மக்கள்
இரா. துரைரத்தினம் 12
யாழ்ப்பாணக் கடிதம்
எஸ். அந்தோனிப்பிள்ளை 12


படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்

## தனிநாடு யாருக்கு?

1996 தை மாதத்து எமது 29வது கண்ணோட்டம் இதழில் நாம் எழுதிய எச்சரிக்கை–1 என்ற ஆசிரியர் தலையங்கத்தை இன்று மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

1990இலிருந்து 1995 வரை முழு யாழ்ப்பாணமும் மின்சாரம் இல்லாமல், புகையிரதமோ, வேறு எந்தவிதமான சரியான போக்குவரத்தும் இல்லாமல் தொலை தொடர்பு வசதிகள் இல்லாமல், யாவுமே விலையேற்றப்பட்டு மக்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாக்கப்பட்டார்கள். எடுத்த எல்லாவற்றிற்கும் வரி. அரசின் பாதுகாப்பு வரி ஒருபுறம், புலிகளின் வரி மறுபுறம் என எல்லாவற்றிற்குமே வரி அறிவிடப்பட்டது. மக்கள் சுதந்திரமாக எங்கும் போகமுடியாது. எல்லாவற்றிற்கும் பாஸ் முறை. இதனால் கல்வி, சுகாதாரம் முதற்கொண்டு அனைத்து அத்தியாவசிய தேவைகளும் பாதிக்கப்பட்டன. மாணவர்களின் கல்வித் தரத்தில் வீழ்ச்சி, இளம் சிறார்களின் ஆரோக்கியத்தில் வீழ்ச்சி என எல்லாமே வீழ்ச்சியை நோக்கிப் போனது.

வெளிநாடு போபவர்கள், புலிகளுக்கு அவர்கள் கேட்கும் பணத்தை கொடுக்க வேண்டும் என்பதுடன், வீட்டையும் புலி இயக்கத்துக்கே கொடுத்து விட வேண்டும். தங்கையின் வீட்டில் அண்ணனோ, அக்காவோ வசிக்க முடியாது. ஏனெனில் உரியவர் இல்லாவிட்டால் அவை அனைத்தும் புலிகளுக்குச் சொந்தம் என்பதே புலிகளின் சட்டமாக இருந்தது.

இதே நிலை கிழக்கில் தோன்றுகின்றது. அது மக்களை மிகவும் கொடூரமாகப் பாதிக்கும் என்பதாலேயே 1996 தை இதழில் இதனை எச்சரித்து, இப்படியான சமூக விரோதச் செயல்களில் புலிகள் ஈடுபடக்கூடாதெனவும், மக்கள் இதனை புலிகளுக்குப் புரியவைக்க வேண்டுமெனவும் கூறினோம்.

ஆனால் சரியாக ஒரு வருடத்தின் பின் நாங்கள் மீண்டும் இதனை மக்களுக்கும், புலிகளுக்கும் சொல்லியாக வேண்டியுள்ளது. 11 இலட்சம் இருந்த யாழ்ப்பாண மக்களில் இன்று நாலரை இலட்சம் மக்களே அங்கு வாழ்வதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. 1990–95 இடைப்பட்ட காலத்தில் புலிகளின் அடாவடித்தனங்களால் ஆயிரக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி, வெளிநாடுகளில் தஞ்சமடைந்தார்கள். யாழ்ப்பாணத்தின் சில கிராமங்கள், அப்படியே கிராமம் கிராமமாகவே வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டன. இன்று மிச்சம் மீதியாக உள்ளோரும் வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். இதே நிலைமை மட்டக்களப்புக்கு ஏற்பட கன காலமாகாது.

இன்று அங்கு புகையிரத சேவை இல்லை. இதனால் பெற்றோல், டீசல் தட்டுப்பாடு; பெரும்பாலான பிரதேசங்களுக்கு மின்சாரம் இல்லை. அத்தனை கடை உரிமையாளர்களும் புலிக்கு வரி கட்ட வேண்டிய சூழ்நிலை. அரச உத்தியோகத்தர்கள், விவசாயிகள், மீன்பிடியாளர்கள் சகலரும் மாதாந்தம் வரி கட்ட வேண்டும். இதனை மறுப்பவர்கள் கடத்தப்படுவர், தண்டிக்கப்படுவர் என்பதே வழமை. பல முதியவர்கள், கௌரவமான பிரஜைகள் எனப்படும் பலரும் கடத்தப்பட்டு பணம் அறவிடப்படுகின்றது. வெளிநாடுகளில் பிள்ளைகள் இருப்போர், விவசாயம் என யாரும் தப்பமுடியாது, எல்லோரும் வரி கட்ட வேண்டும். அதேபோல் வீடுகளும் பலவந்தமாகப் பறிக்கப்படுகின்றன. படுவான்கரை, துறைநீலாவணை போன்ற பல இடங்களில் இருந்து மக்கள் வெளியேறுகின்றார்கள்.

அடிப்படையில் புலிகளின் துன்புறுத்தலாலேயே இவர்கள் பாதுகாப்புத் தேடி ஓட வேண்டியுள்ளது. உள்ளவனிடம் எல்லாவற்றையும் பறித்து அவனை ஓட்டாண்டி ஆக்குவதே புலிகளின் தாரகமந்திரமாய் உள்ளது போல் உள்ளது. புலிகளின் இச்செயற்பாடு யாழ்ப்பாணத்தில் இருந்து மக்கள் வெளியேற எவ்வளவு தூரம் காரணமாக இருந்ததோ, அவ்வளவு மட்டக்களப்பில் இருந்து வெளியேறவும் காரணமாய் அமைந்துவிடும்.

கிழக்கில் உள்ள திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களில் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரமே தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள். அம்பாறை ஏற்கனவே சிங்கள மக்களின் திட்டமிட்ட குடியேற்றத்தால் தமிழ் மக்கள் மூன்றாவது சிறுபான்மை இனமாகவே இருக்கின்றார்கள். அதனைப் போலவே திருமலையிலும் அவர்கள் சிறுபான்மை இனமாக மாற்றப்படுகின்றார்கள். இந்த நிலையில் மட்டக்களப்பு மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டால் அது அரசுக்கு சாதகமாகவே இருக்கும். இதனை இன்னும் புரிந்து கொள்ளாமல், மக்களை நெருக்குவாரத்துக்குட்படுத்தி அவர்களை அங்கிருந்து விரட்டும் புலிகளின் நடவடிக்கையானது முழுத்தமிழ் சமூகத்தையுமே பாதிக்கும் என்பதை புலிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

'போராட்டத்தில் அரசுடைமைகளை தகர்ப்பது ஓர் தேவையான விடயம், இதன்மூலமே அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்கலாம், மக்களுக்கு இதனால் கொஞ்சம் பாதிப்பு ஏற்படத்தான் செய்யும், இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்' என புலிகள் பிரச்சாரம் செய்யலாம். ஆனால் இவை எவ்வளவு தூரம் முழுச் சமூகத்தையுமே பாதிக்கின்றது என்பதை அவர்கள் உணரவேண்டும். இவற்றுக்கு மேலால், ஏற்கனவே குறிப்பிட்ட பல்வேறுபட்ட நெருக்கடிகளை மக்களுக்கு உருவாக்குவது என்பது விடுதலைப் போராளிகளுக்கான செயலல்ல என்பதையும் அவர்கள் உணரவேண்டும். ஒன்று, இந்த நடவடிக்கைகளால் மக்களிடம் இருந்து இவர்கள் அந்நியப்படுகின்றார்கள். இரண்டாவது, மக்கள் தமது சொந்தப் பூமியை விட்டே விரட்டப்படுகின்றார்கள். மட்டக்களப்பு மாதிரியான மாவட்டங்களில் இது எவ்வளவு பாரிய பின்விளைவுகளை தோற்றுவிக்கும் என்பதையும் உணரவேண்டும்.

கடைசிப் புலி இருக்கும் வரை போரிடுவதென்பது புலிகளின் தாரக மந்திரமாக இருக்கலாம். தமிழன் எல்லோரையும் விரட்டியபின் யாருக்குத் தனிநாடு? ஏற்கனவே யாழில் விட்ட தவறை இனியும் விடவேண்டாம். பிழைகளில் இருந்து சிறிதளவாவது கற்றுக் கொள்ளுங்கள்.

# இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஈழத்தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் ஒரு மைல் கல்! இதை இந்திய அரசு உணர வேண்டும்!



இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் உள்நாட்டுச் சண்டையில் இந்திய அரசு தலையிடாது:அது இலங்கைஅரசுக்கும் அங்கு வாழும் தமிழ் மக்களுக்கும் இடையிலுள்ள பிரச்சினை; அவர்களே தங்களுக்குள் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும்." – இதை அமெரிக்கா சொல்லவில்லை. இந்திய அரசு இன்று சொல்லிக் கொண்டிருக்கிறது.

இந்திய அரசின் அயல்நாட்டுக் கொள்கையில் இலங்கை சம்பந்தமாக ஏன் இந்தத் தடுமாற்றம் என்பதுதான் புரியவில்லை.

- ★ 1987ம் ஆண்டு இந்திய விமானப்படை விமானம் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொட்டலங்கள் போட்டதும், அதைத் தொடர்ந்து இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டதும்,
- ★ முன்னாள் பிரதமர் மறைந்த ராஜீவ்காந்தி அவர்கள் இலங்கை வந்து, மறைந்த ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திடவைத்து தானும் கையெழுத்திட்டு, இலங்கைத் தமிழ் மக்களின் பாதுகாவலனாக இந்தியா இருக்கும் என்ற உறுதி அளித்ததும்,
- ★ இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்த உதவியாக இந்திய ராணுவத்தை இலங்கைக்கு குறிப்பாக தமிழ் மக்கள் வாழும் பிரதேசமான வடகிழக்கு மாகாணத்திற்கு அனுப்பியதும்,
- ★ அதன் பயனாக அங்கு ஒரு தமிழ் அரசாங்கத்தை தோற்றுவித்ததும்....

இப்படியாக இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் தலையீட்டையும் பங்களிப்பையும் சொல்லிக்கொண்டே போகலாம். இன்று வேண்டப்படாத, தேவையற்ற விடயங்களாக இந்திய அரசு கருதினாலும் இவைகள் யாவும் இந்திய அரசு தலையீட்டால் நடந்து முடிந்த வரலாற்று நிகழ்ச்சிகளாகும்.

ராஜீவ்காந்தி அவர்களின் மறைவுக்குப் பிறகு டெல்லியில் ஆட்சிக்கு வந்த நரசிம்மராவ் அவர்களின் அரசு ராஜீவ் காந்தியால் உருவாக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தை கண்டுகொள்ளவேயில்லை. இலங்கை அரசால் சின்னாபின்னமாக்கப்பட்டு குற்றுயிராகக் கிடந்த இந்த ஒப்பந்தத்திற்கு உயிர் கொடுக்காமல் மண்ணுக்குள் போட்டு மண்ணோடு மண்ணாகப் புதைத்த பெருமை நரசிம்மராவ் அவர்களின் அரசுக்குத்தான் என்று சொன்னால் மிகையாகாது.

அதிலும் இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படுவதற்கு ஒரு காரணியாக இருந்த நரசிம்மராவ் அவர்கள் தனது ஐந்து வருட ஆட்சிக் காலத்தில் மௌனமாக இருந்தது என்பது இந்திய அரசின் அயல் நாட்டுக் கொள்கைக்கு ஏற்பட்ட ஒரு கரும்புள்ளியாகும்.

ராஜீவ் காந்தி இறந்து விட்டதால் அவரால் உருவாக்கப்பட்ட

**என். ஆர். சோமு**

ஒப்பந்தமும் செயலற்றுப் போக வேண்டும் என்ற கட்டாயம் இல்லையே! அவரின் மறைவுக்குப் பிறகு தொடர்ந்து வந்த அரசு தனது தார்மீகக் க[illegible] நினைத்து அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியிருக்கலாமே... ஏன் செய்யவில்லை?

உதாரணத்திற்கு ஒன்றை நினைவுபடுத்தப்போனால், இந்தியாவின் பிரதமராக மறைந்த சாஸ்திரி அவர்கள் இருந்தபோது, இலங்கையில் அப்போது பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா இந்தியாவுடன் ஓர் ஒப்பந்தம் போட்டிருந்தார். அதுதான் சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தம். மலையகத் தமிழர்களை இந்தியாவுக்கு நாடு கடத்திய வரலாற்று ஒப்பந்தம்.

சாஸ்திரி அவர்கள் ரஷ்யாவில் அகால மரணம் அடைந்த பின் அந்த ஒப்பந்தம் செயலற்றுப் போய் விட்டதா? அல்லது அதை எடுத்து குப்பைத் தொட்டியில் போடு என்று யாராவது சொன்னார்களா? தொடர்ந்து வந்த அரசுகள் அந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்தாமல் கிழித்தெறிந்து விட்டார்களா? இல்லையே....

சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் ஜெயவர்த்தன ஆட்சிக்காலத்தில் அமுல்படுத்தப்பட்டது. அதேபோல் ராஜீவ், ஜெயவர்த்தனா ஆகியோரால் உருவாக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தை இன்றைய பாரதப் பிரதமர் தேவகௌடா அவர்களால் ஏன் அமுல்படுத்த முடியாது?

இந்தவிடயத்தில் இலங்கைஅரசு முரண்டுபிடித்தாலும் அதை வழிக்குக் கொண்டுவருவது இந்திய அரசின் கடமைப்பாடுஎன்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

கடந்த காலங்களில் போடப்பட்ட இந்த ஒப்பந்தங்களை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்வதிலும் சரி, மீறுவதிலும் சரி இலங்கை அரசு தந்திரமாக தனது இராஜதந்திரத்தைப் பயன்படுத்தி வெற்றியே கண்டிருக்கிறது. அதற்கு முன் உதாரணம் தான் இந்திய இலங்கை ஒப்பந்தம்.

87ம் ஆண்டு இந்தியா நேரடியாக இலங்கைப் பிரச்சினையில் தலையிடும் போது தமிழ் மக்கள் இருந்த நிலைமைக்கும், 97ம் ஆண்டு இருக்கின்ற நிலைமைக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. அன்று இலங்கைத் தமிழ் மக்கள் இந்தியாவில் தான் அகதிகளாக இருந்தார்கள். ஆனால் இன்று தொடரும் யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கி பசி, பட்டினிச்சாவு என்று தமது சொந்த மண்ணிலேயே அகதிகளாக தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களின் இன்றைய நிலைமைக்கு இந்திய அரசும் ஒரு காரணம் என்பதை மறந்துவிட முடியாது.

ஏனென்றால், பிரச்சினைகளை தீர்க்கின்றேன் என்றுசொல்லி முன்வந்தவர்கள் அந்தப் பிரச்சினைகளில் இருக்கும் சிக்கல்களைக் கண்டு ஒதுங்குவது ஒரு நாகரீகமான செயலாகாது. இன்றும் அந்த அப்பாவித் தமிழ் மக்கள் இந்தியத் தலையிட்டால் தான் எமது பிரச்சினைகளுக்கு ஒரு முடிவுகிட்டும் என்று நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக இந்திய அரசு நடந்துகொள்ளுமா என்பதுதான் இன்றுள்ள கேள்வியாகும்.

தொடர்ச்சி 10ம் பக்கம் ☞


**தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!**

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

புதிய கண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-1, மட்டக்களப்பு. ☎ 065-2398

54, மாணிக்கவாசகர் வீதி, திருகோணமலை. ☎ 026-22858

22, வெளிவட்ட வீதி, வவுனியா. ☎ 024-22724

மன்னார். ☎ 023-2370

Post Bag: 1041, Madras-17, India.

B.M.Box: 1738, London-WCIX-3NN, U.K.

E.P.I.C., Box No: 95, 95144, GargesLes, Gonnesse Cedex, France.

P.Fach: 100206, 44002 Dortmund, Germany.

P.Fach: 506, Bern-17, Switzerland.

www.padippakam.com



# இனிய தமிழ் மக்களே!...

அன்பிற்கினிய தமிழ் மக்களுக்கு,

மக்கள் முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து இரண்டு வருடங்கள் கடந்த பின்னும் சமாதானத்திற்கான ஒளி இன்னும் நீண்ட நெடுந்தொலைவில் இருப்பதாகவே தோன்றுகின்றது. தமிழ் மக்களின் அவலங்கள் நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றதே தவிர குறைந்ததாகத் தென்படவில்லை.

'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற பெயரில் மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் மக்கள் அகதிகளாகவே உள்ளார்கள். புலிகளை விரட்டவென மட்டக்களப்பில் அரசாங்கம் மேற்கொள்ளும் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் இடம் மாறுவதும் அகதிகளாவதும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன. இவர்களது இராணுவ நடவடிக்கைகளில் மக்கள் நாளாந்தம் சாவது என்பதும் இயல்பானதாகிவிட்டது.

வவுனியாவில், 8000க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் மந்தைகள் போல் எந்தவித காரணமும் இல்லாமல் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். மன்னாரில் இருந்து வருவோரை தடுத்து வைக்கவென கற்பிட்டியில் ஓர் முகாம் திறக்கப்பட்டு, அங்கும் மக்கள் மிருகங்கள் போல் நடாத்தப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் மனித உரிமை மீறல்களால் 30000க்கு மேற்பட்ட மக்கள் அங்கிருந்து வெளியேற தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

திருகோணமலையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஒருபுறம், தமது காணிகளில் குடியேறிய தமிழ் மக்கள் விரட்டப்படுகின்றனர். லிங்கநகரில் குடியேறிய மக்களை உடன் காலி செய்யுமாறு இராணுவம் அறிவுறுத்தல்கள் கொடுத்துள்ளது. திருமலையில் இருக்கும் மரக்கறிச் சந்தையை ஒரு தமிழ் குடிமகன் குத்தகைக்கு எடுத்தார் என்பதற்காக அதனை நிறுத்தும்படி இராணுவ பிரிகேடியர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவை தவிர தமிழ்மக்கள் தமது சொந்தப் பிரதேசங்களான மட்டக்களப்பு, திருமலை, வவுனியா, யாழ்ப்பாணம் எங்கு வாழ்ந்தாலும் தேசிய அடையாள அட்டையைத் தவிர, ஆங்காங்கே அப்பிராந்தியங்களுக்கான இராணுவத்தால் வழங்கப்படும் அடையாளஅட்டை எடுக்கப்பட வேண்டியுள்ளது.

மக்கள் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு போகமுடியாத அளவு இறுக்கமான கட்டுப்பாடு. வட-கிழக்கைத் தவிர ஏனைய இடங்களில் இருப்போர் பொலீசில் பதிவு செய்ய வேண்டும் என்பதுடன் அடிக்கடி பொலீசாரால் விசாரணைக்கழைக்கப்பட்டு துன்புறுத்தப்படுகின்றார்கள்.

இவ்வளவு நடந்தபோதும் கூட எமது மக்கள் இன்னும் மௌனமாகவே இருக்கின்றார்கள். ஒருவேளை தாம் தெரிவு செய்து அனுப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இவற்றை தீர்த்து வைப்பார்கள் என எண்ணுகின்றார்களோ தெரியவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர்களும் சரி, தமிழ் அரசியல் கட்சிகளும் சரி, ஜனாதிபதிக்கு கடிதம் எழுதுவது பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவது என்பதைத் தவிர வேறு எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்பவர்களாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாண மனித உரிமை மீறல்கள், வவுனியா அகதிகள் பிரச்சினை, திருமலை லிங்கநகர் மற்றும் மரக்கறிச் சந்தைப் பிரச்சினை, கற்பிட்டிக்கு வரும் மன்னார் மக்களின் பிரச்சினை என பல பிரச்சினைகள் தொடர்பாக பல தமிழ் கட்சிகள் அறிக்கைகள் விடுத்தன; ஜனாதிபதிக்கு அறிவித்தன. இதுவரை எந்த ஓர் பிரச்சினைக்காவது தீர்வு ஏற்பட்டது என்றால் இல்லை என்றே கூறலாம். அவலங்கள் அவலங்களாகவே இருக்கின்றன.

நீண்ட நெடிய பாரம்பரியத்தைக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வேலைவாய்ப்புகளுக்கு பணம் வேண்டுவதில் மிகவும் கறாராக உள்ளார்கள். சமுர்த்தி உத்தியோகம் தாம் குறிப்பிடுபவர்களுக்கே கொடுக்க வேண்டும் என்பதிலும் கறாராய் உள்ளனர். மாதாந்தம் 2000 வருமானம் வரும் அவ்வேலைக்கே 20,000 வாங்குவதாக மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

இந்த இலட்சணத்தில் மக்களின் ஏனைய பிரச்சினைகள் பற்றி ஆராய, இல்லையேல் அது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க இவர்களுக்கு நேரம் ஏது?

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் இவர்களைப் போலவே வெவ்வேறான வேலைத்திட்டங்கள் இருக்கின்றன. மந்திரிப் பதவி, இல்லையேல் இடைக்கால நிர்வாகம், இல்லையேல் தமது சொந்த சுய தேவைகளை பூர்த்தி செய்வது போன்ற பல வேலைத்திட்டங்கள் இவர்களுக்கு இருப்பதால் அரசுக்கு ஓர் அழுத்தத்தை கொடுக்கவோ நெருக்குவாரத்தை கொடுக்கவோ அஞ்சுகின்றார்கள். அழுத்தம் ஏதாவது கொடுக்க முனைந்தால் இராணுவத்துடன் பணியாற்றும் இவர்களது உறுப்பினர்களின் சம்பளம், அவர்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள் பறிமுதலாகி விடுமோ என அஞ்சுகின்றார்கள்.

மொத்தத்தில் பாராளுமன்றத்தில் இவர்களின் தேவை அரசுக்கும், அரசின் உதவி இக்கட்சிகளுக்கும் தேவைப்படுவதால் ஓர் எல்லைக்கப்பால் இவர்களால் சிந்திக்க முடியாமல் இருக்கின்றதென்பதே உண்மை.

இவர்களால் முடிந்ததெல்லாம் ஜனாதிபதிக்கோ மந்திரிக்கோ கடிதங்கள் எழுதுவது, பத்திரிகைக்கு அறிக்கைகள் விடுப்பது, பாராளுமன்றத்தில் பேசுவது என்பது மாத்திரமே. இந்த நிலையில் தற்போதைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும்வரை தமிழ் மக்களின் அவலங்கள் தீரப்போவதில்லை.

இந்த விடயங்களைப் புரிந்து கொண்டால் மாத்திரமே மக்களாகிய நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் எவ்வளவு பெரிய கடமையும் பொறுப்பும் உங்களுக்கிருக்கிறதென்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

அன்பார்ந்த தமிழ் மக்களே! உங்கள் பிரச்சினைகளை வெளியுலகுக்கு கொண்டு செல்ல வேண்டுமாயின், அதில் உங்களின் பெரும் பங்களிப்பும் உள்ளதென்பதை நீங்கள் மறந்து போகக் கூடாது. ஒருபக்கம் இராணுவம், மற்றப் பக்கம் புலிகள், இன்னொரு பக்கம் ஆயுதம் தரித்தவாறே 'ஜனநாயகத்துக்கு வந்துவிட்டோம்' என்ற ஏனைய தமிழ் அமைப்புக்கள்....

இவ்வளவுபேரும், தாம் விரும்பும் போது மாத்திரமே நீங்கள் வாய் திறக்க வேண்டும் என விரும்புகின்றார்கள். அப்படி மீறி வாய் திறந்து விட்டால் கடத்தல், அடி உதை, கடைசியில் கொலை என்ற மட்டில் இவர்களின் நடவடிக்கைகள் உள்ளது. ஆனால் இவர்கள் எல்லோருமே ஜனநாயகத்தைப் பற்றி பேசுகின்றார்கள் என்பதுதான் வேடிக்கையானது.

இவை எல்லாவற்றையும் மீறி நாம் எப்படி வாய் திறப்பது என்று நீங்கள் கேட்கமுடியும். ஆனால் இவற்றுக்கெதிராகவும் கூட நாம் போராட வேண்டியுள்ளது. அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுவதற்கான களத்தை அமைப்பதற்கு இவர்கட்கு எதிராகவும் போராட வேண்டியுள்ளது.

தடி எடுத்தவன் எல்லோரும் தண்டல்காரன் என்பது போல்தான் துவக்கு எடுத்தவர்கள் எல்லோரும் நடந்துகொள்கிறார்கள். பிழைகளில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்று யாரும் சிந்திப்பதாக இல்லை. இயக்கங்கள் பிழைவிட்டால், அது தொடர்பாக பேசுபவர்கள் கடத்தப்படுகின்றார்கள், சித்திரவதை செய்யப்படுகின்றார்கள்.

ஆனால், குட்டக் குட்டக் குனிபவனும் மடையன் குனியக் குனியக் குட்டுபவனும் மடையன் என்பதுபோல் குட்டு வேண்டிக்கொண்டே இருக்கப் போகின்றோமா என்பதைத் தீர்மானிக்கும் காலம் வந்துவிட்டது.

அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தல்கள், அதன் மூலம் சாதாரண வாழ்க்கை முறையை தோற்றுவிப்பது என பல வழிகளில் கயிறு கொடுக்கின்றதே தவிர சரியான வழியில் இனப்பிரச்சினையை தீர்ப்பதாகத் தெரியவில்லை. யுத்தத்திற்குச் செலவிடும் பணம், நேரம் ஆகியவற்றில் ஆயிரத்தில் ஒருபகுதி கூட சமாதானத்திற்கோ, தீர்வுக்கோ செலவழிக்கப்படுவதில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

எனவே எமது பொறுப்பும் கடமையும் பலபடி அதிகமானது என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

முழு மக்களும் ஓரணி திரண்டு தொடர்ச்சியாகப் போராடுவதன் மூலம் யுத்த சக்திகளை சரியான வழிக்கு கொண்டு வரமுடியும். அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்கவும், ஜனநாயகத்தை நிலைநிறுத்தவும், நாம் தொடர்ச்சியான போராட்டங்களை நடாத்த எம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக எமக்கேற்பட்டுவரும் அவலங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க நாம் ஓரணிதிரள வேண்டும். கடந்த 15 வருடத்தில் நாம் 50,000க்கு மேற்பட்ட எமது மக்களையும், வருடக்கணக்காக சேர்த்த சொத்துக்களையும் இழந்து பஞ்சைகளாய் பராரிகளாய்ப்போய் உள்ளோம், இவை தொடர நாம் அனுமதிக்கக் கூடாது.

மாணவர்கள் ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், வணிகர்கள் தொடக்கம் சகலரும் இவற்றை மனதில் கொள்ள வேண்டும். நீண்ட நெடிய சமாதானத்திற்காகவும் எமது எதிர்காலச் சந்ததியின் வாழ்வுக்காகவும் நாம் போராடியாக வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

நாம் ஆயுதங்கள் தூக்கத் தேவையில்லை, குண்டெறியத் தேவையில்லை. ஆனால் இவற்றை வைத்திருப்போருக்கெதிராக இவற்றைத் துஷ்பிரயோகம் செய்பவர்கட்கெதிராக எமது எதிர்கால வாழ்வுக்காக நாம் ஆயிரமாயிரமாய் ஒன்றுதிரள்வோம். எமது ஜனநாயகப் போராட்டங்களினூடு இழந்துபோன சர்வதேச ஆதரவை நாம் மீளப்பெறுவோம், எமது கோரிக்கைகள் நியாயமானவை என்பதை உலகறிய வைப்போம். யுத்த சக்திகளை ஒதுக்கி கௌரவமான தீர்வுக்கு வழிசமைப்போம்.

இன்று உலகமெல்லாம் பல யுத்தங்கள் நடந்தாலும், நாகரீகமான மக்கள் இதனை வெறுத்தொதுக்குகின்றார்கள். அதேசமயம் நியாயமான கோரிக்கைகளுக்கான ஜனநாயகப் போராட்டங்களுக்கு முழு உலகமுமே செவிசாய்க்கும் சூழ்நிலையே இன்று உலகமெல்லாம் உள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எப். ஐப் பொறுத்தவரை தமிழ் மக்களின் உரிமைகளை வென்றிட, அவர்களின் அவலங்களைப் போக்கிட ஜனநாயக ரீதியில் போராடத் தயாராக உள்ளது. அடக்குமுறைகள், காட்டுமிராண்டித்தனங்கள் எந்த வடிவத்தில் வந்தாலும் அதனை எதிர்த்துப் போரிட நாம் தயாராக உள்ளோம். முழு மக்களும் ஒன்றிணைந்தால் நிச்சயம் எமது கோரிக்கைகள் வெற்றி பெறும்; எமது அவலங்களுக்கு முடிவேற்படும்.

எனவே, இனிய தமிழ் மக்களே! நாம் தூங்கிக் கொண்டும் அஞ்சிக் கொண்டும் இருந்தது போதும். உறுதிகொள்வோம்! துணிவு கொள்வோம்! விடாமுயற்சியுடன் போரிடுவோம்.

அன்புடன் உங்கள்
சுரேஷ்



**நீண்ட நெடிய சமாதானத்திற்காகவும் எமது எதிர்காலச் சந்ததியின் வாழ்வுக்காகவும் நாம் போராடியாக வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.**

**நாம் ஆயுதங்கள் தூக்கத் தேவையில்லை, குண்டெறியத் தேவையில்லை. ஆனால் இவற்றை வைத்திருப்போருக்கெதிராக இவற்றைத் துஷ்பிரயோகம் செய்பவர்கட்கெதிராக எமது எதிர்கால வாழ்வுக்காக நாம் ஆயிரமாயிரமாய் ஒன்றுதிரள்வோம். எமது ஜனநாயகப் போராட்டங்களினூடு இழந்துபோன சர்வதேச ஆதரவை நாம் மீளப்பெறுவோம், எமது கோரிக்கைகள் நியாயமானவை என்பதை உலகறிய வைப்போம். யுத்த சக்திகளை ஒதுக்கி கௌரவமான தீர்வுக்கு வழிசமைப்போம்.**

.....எம்மையே நாம் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். நம் சமூகத்திற்குள்ளேயே பயங்கரவாதத்திற்கு நாம் வந்தனை செய்து நிற்பதும், எமது சந்தர்ப்பவாதமும், பெருவாரியான உட்கொலைகளின்போது கொள்கைப்பிடிப்புகளை இழந்து நின்றதும் போன்ற அதே ஆயுதங்களை வைத்தே வெளிசக்திகள் நம்மைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதை இவை இலகுவாக்கி விட்டன. எம் சமூகத்திற்குள்ளேயே ஜனநாயக விரோதப் போக்குகளை ஆட்சேபணை எதுவுமின்றி நாம் ஏற்றுக்கொண்டுவிட்ட நிலையில் ஜனநாயகத்திற்காக நாம் கூக்குரலிடுவது அர்த்தமற்ற நடவடிக்கையாகப் போய் விட்டது. அரசியல் சக்திகளுக்கு எதிராக விமர்சனக்குரல் எழுப்பிய பல தனிநபர்களும் இளைஞர்களும் பழிவாங்கப்பட்டோ, விரட்டப்பட்டோ அல்லது நாம் பார்த்துக் கொண்டிருக்க கொலை செய்யவோ பட்டனர்.

ஆகவே மக்கள் இழந்து போன தமது சுயநம்பிக்கை, பெருமைகளை மீண்டும் பெறுவதாயின் கொள்கை அடிப்படையிலான கூட்டு நடவடிக்கை என்ற வழியில் இயங்க ஆரம்பிக்க வேண்டும். அறிவுபூர்வமாயும் உணர்வுபூர்வமாயும் நாம் வரித்துக் கொண்டுவிட்ட உலகளாவிய விழுமியங்களை நாம் உயர்த்திப் பிடிக்க வேண்டும். இத்தகைய ஒரு ஈடுபாடின்மைதான் மற்றவர்களின் பிள்ளைகள் விஷயம் என்றதும் கொலையுடனும் நாம் சமரசம் செய்துகொண்டுவிட்டு, பின் அந்தப் புற்றுநோய் வளர்ந்து எமது சொந்தக் குழந்தைகளையே அச்சுறுத்தியபோது பீதியோடு அனாதரவாகப் பார்த்துக் கொண்டு நிற்க வேண்டிய நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டது. கடந்த காலங்களில் நாம் காட்டிய அக்கறையின்மைக்கான விலையைத்தான் இப்போது நாம் செலுத்திக் கொண்டிருக்கிறோம்....

அழுத்திக் கொண்டிருக்கும் பல பிரச்சினைகள் குறித்து யாருமே துணிவுடன் ஒரு நிலைப்பாட்டை எடுக்காத நிலையில் நாம் நம்மை மக்களாக வலியுறுத்துவது எவ்வாறு? எங்கள் அயலில், பணிமனைகளில், தொழிற்சங்கங்களில், சங்கங்களில் தனிநபர்களாகவும் சிறுசிறு குழுக்களாகவும் இருக்கும் நாம் நமது கடந்த காலங்களைப் பற்றிக் கேள்விகள் எழுப்பி, எங்கே தவறிழைத்திருக்கிறோம் என்பதைப் புரிந்துகொண்டு, நமது கொள்கைகளை மீட்டெடுக்க முனைய வேண்டும். மற்றவர்களுக்காய்ப் போராடும்போது நாம் நமக்கே போராடுகிறோம் என்ற கடந்தகால அனுபவம் வழங்கியிருக்கும் செய்தியினை நாம் எப்போதும் பிரக்ஞையில் கொண்டிருக்க வேண்டும். இப்பாதை துணிச்சலை வேண்டி நிற்கிறது. வேறு பாதை எதுவும் திறந்திருப்பதாகத் தெரியவில்லை....

- 1988 நவம்பர் மாகாணசபைத் தேர்தலின்போது
50 பல்கலைக்கழக ஆசிரியர்கள் வெளியிட்ட அறிக்கையிலிருந்து....

படிப்பகம்

www.padippakam.com





# முதல் உரிமை பெற்ற யுத்தமும் முகம் இழந்து போன மக்களும்



தி. சிறீதரன்

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வருவதற்கு முன் மக்களுக்களித்த பிரதான வாக்குறுதிகள் எவை?

- ★ பிரதானமாக தேசிய இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பது,
- ★ சகல அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து விடுவது,
- ★ ஜனநாயகம், மனித உரிமைகளை பேணிப் பாதுகாப்பது.

ஆனால், இன்று இந்த வாக்குறுதிகளில் எவையும் நிறைவேற்றப்படாத துரதிருஷ்ட நிலையே நிலவுகிறது.

## சமாதானம் பேச்சளவில் யுத்தம் முழு அளவில்

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென புலிகளுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை தேசிய இனப்பிரச்சினை என்ற விடயத்திற்குச் செல்லாமலே புலிகளால் முறிக்கப்பட்டது.

புலிகளால் பேச்சுவார்த்தை முறிக்கப்பட்டது சற்றும் நேர்மையில்லாததும் கபடத்தனமானதும் என்பதனை யாரும் மறுக்கப்போவதில்லை.

ஆனால் பதவிக்கு வந்தவுடனேயே எடுத்த எடுப்பில், ஆயுத தளபாடங்கள் வாங்குவதற்குச் செய்து கொண்ட ஒப்பந்தங்களையெல்லாம் ரத்துச் செய்த அரசு மீண்டும் அவற்றைப் புதுப்பிப்பதில் இறங்கியது.

படைகளை ஒரு தொடர்ச்சியான போருக்கேற்றவாறு மறுசீரமைப்பது என்ற நிலைக்கு அரசு சென்றது. இங்கு நடைமுறை, மக்களுக்களித்த வாக்குறுதிகளுடன் முரண்படுவதால் யுத்தத்திற்கு 'சமாதானத்திற்கான யுத்தம்' என்று பெயரிடப்பட்டது.

இன்று எதுவித தளம்பலும் இல்லாமல் யுத்தம் மாத்திரம் முழு அளவில் கவனத்துடன் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

தீர்வுத் திட்ட யோசனைகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிக் கொண்டிருக்கையில் இங்கு யுத்தம் மாத்திரமே எல்லாவற்றையும் மேவித் தெரியும் விடயமாகிவிட்டது.

## யுத்த வெறியை மேவாத தீர்வுப் பொதி

புலிகளைப் பொறுத்தவரை, யுத்தத்தைத் தவிர வேறெதுவும் அவர்களின் நிகழ்ச்சி நிரலில் உண்டா என்பது பெரும் ஐயத்திற்குரிய விடயமே. தமிழ் மக்களின் இக்கட்டான நிலைமையை கருத்தில் கொண்டு இதயசுத்தியுடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளுக்கு முன்வருவார்களா என்பதும் ஐயத்திற்குரிய விடயம்தான்.

அவர்கள் விசுவாசத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்கள் என்பது அவர்களின் அகராதியில் இல்லாத விடயம்.

அதேபோல் தமிழ் மக்கள் இவ்வளவு காலமும் அனுபவித்த துன்பதுயரங்கள், சிந்திய இரத்தம், போராட்டம், இழந்தவை எல்லாவற்றுக்கும் ஈடாக அவர்கள் சுயமரியாதை கௌரவமாக வாழக்கூடிய தீர்வொன்று முன்வைக்கப்பட்டதா என்றால் அதுவும் இல்லை.

சிங்களப் பேரினவாதிகள், சங்கநாயக்கர்கள், யுத்த வெறியர்களைத் தாண்டி ஒரு குறைந்தபட்ச உருப்படியான தீர்வு தான் இன்று முன்னரங்கில் இருக்க வேண்டியது.

## ஒற்றையாட்சியா? பிராந்தியங்களின் ஒன்றியமா?

1994 ஆகஸ்ட் 3இல் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்ட யோசனைகள் ஓரளவுக்கேனும் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கான ஒரு நல்ல ஆரம்பமாக இருக்கலாம் எனக் கருதப்பட்டது.

ஆனால் அந்த யோசனைகள் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத் தொடர்ச்சி, வடகிழக்கு எல்லைகள் ஆகிய அடிப்படையான விடயங்களை தெளிவுபடுத்தவில்லை.

ஆனால் ஒற்றையாட்சி அமைப்புக்குப் பதிலாக 'பிராந்தியங்களின் ஒன்றியம்' என்கிற அதிகாரப் பகிர்வுக்கு அடிநாதமான ஒரு விடயம் காணப்பட்டது.

ஆனால் தற்போது பேரினவாத சக்திகள் அதனையும் அந்த யோசனைகளிலிருந்து இல்லாதொழிப்பதில் கங்கணம் கட்டியுள்ளன.

யுத்தம் தொடர்ந்து நடக்கும் போது யுத்த சக்திகள் ஆர்வமூட்டப்படும்போது இந்தத் தீர்வுத் திட்டம் கலகலத்துப் போகும் என்பதே உண்மையாகும்.

## இனவாதத் தீயில் வாக்குப் பொறுக்கிகள்

அரசு, தான் வைத்த தீர்வுத் திட்ட யோசனைகளைப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலிருந்து பாராளுமன்றத்திற்குக் கொண்டு



செல்வதில் தற்போதே சிக்கல்களை எதிர்நோக்கி நிற்கிறது.

தீர்வுத்திட்ட யோசனைகள் பாராளுமன்றத்தில் நிறைவேறவிடாமல் தடுப்பதில் ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த கட்சிகள் வரிந்து கட்டிச் செயற்படுகின்றன.

இவர்களைப் பொறுத்த வரை நாடே அழிந்தாலும் பரவாயில்லை, தாம் இனவாதத்தில் குளிர் காய்ந்து அடுத்தமுறை பெரும்பான்மையின மக்களின் வாக்குகளைக் கவர முயல்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி பகிரங்கமாகவும் திரைமறைவிலும் தீர்வுத்திட்ட யோசனைகளுக்கெதிராக சதிநாச வேலைகளில் ஈடுபட்டுள்ளது. முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டு இப்போது ஐக்கிய தேசியக்கட்சியில் செயற்படும் 'ஹெலஉறுமய' போன்ற அமைப்புக்களுக்குப் புத்துயிருட்டும் முயற்சிகள் நடைபெறுகின்றன. பாராளுமன்றத்தில் இல்லாத இனவாத மண்ணின் மைந்தர் கட்சிகளையும் பிற்போக்குவாத பௌத்த மதக் கட்சிகளையும் தூண்டிவிடும் வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

சிங்கள தகவல் தொடர்புத் துறை - ராவய, யுக்திய, கவுண்டர் பொயின்ற் போன்றவற்றையும் ஓரளவுக்கு அரசு தொடர்புச் சாதனங்களையும் தவிர மிகுதி எல்லாவற்றிலும் பேரினவாதம் தலைவிரித்தாடுகிறது. ஆங்கிலப் பத்திரிகைகளும் அவ்வாறே.

## கொலைக் கலாசாரத்தில் இனப்பெருமை கொள்ள

மறுதலையாக, பிறநாடுகளிலும் உள்நாட்டிலும் புலிகளைத் துதிபாடும் பத்திரிகைகளும் தமிழ்க்குறுகிய இனவாதத்தைப் பரப்புகின்றன.

தகவல் தொடர்புத் துறையின் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுடன் வேகமாக இனவாதங்களைப் பரப்பும் இந்தப் போக்கு மிகப்பெரிய கேடு விளைவிக்கக் கூடியதாகும்.

எல்லைக் கிராமங்களிலும், ரயில்களிலும், காரியாலயங்களிலும் சாதாரண சிங்கள மக்களுக்கிழைக்கப்பட்ட கொடூரமான கொலைப் பாதகங்கள் தொடர்பாக இந்தப் பத்திரிகைகள் கண்டிப்பதிலும் பார்க்க மௌனம் சாதிப்பது அல்லது இனப்பெருமை கொள்வது என்பதே அதிகம் காணப்படுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தனது வாக்குறுதிகளைக் காப்பாற்ற வேண்டும். யுத்தத்தில் உற்சாகமூட்டப்பட்டு அதனுடனேயே இழுத்துச் செல்லப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சியில் இழைக்கப்பட்ட கொடூரங்கள் மீண்டும் தொடர்வதற்கே வழி ஏற்படுத்தப்படும்.

## சமாதானத்திற்கு இல்லை யுத்தம் என்ற குறுக்குவழி

எனவே, தீர்வுத்திட்ட யோசனைகள் ஐதாக்கப்படாமல் செழுமைப்படுத்தப்பட்டுத் தெளிவாக முன்வைக்கப்பட வேண்டும். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்ட யோசனைகளில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் உள்ளடங்கி இருந்த வடகிழக்கின் தற்காலிக இணைப்பு போன்ற விடயங்கள் இல்லை.

சமாதானத்திற்கு யுத்தம் என்று குறுக்குவழி கிடையாது. அதற்கு ஒரேவழி தமிழ் மக்களின் சுயமரியாதை கௌரவத்தை நிலைநாட்டும் தீர்வு.

உலகில் வெற்றிபெற்ற பிரச்சினைகள், பிரச்சினைகள் ஒப்புக் கொள்ளப்பட்டதனால் தான் அந்த நிலையை அடைந்தன. உதாரணம் தென்னாபிரிக்காவில் சமாதானம் உருவாவதற்கு அடிப்படையாக இருந்தது, அதன் பெரும்பான்மை மக்களின் உரிமைகள் மறுதரப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்டதே.

பாலஸ்தீனப் பிரச்சினை தீர்வு முற்றுப்பெறாவிட்டாலும் கூட, ஜெரிக்கோ, காசா போன்ற பாரம்பரிய பிரதேசங்களில் வாழ்விட உரிமை அங்கீகரிக்கப்பட்டதாலேயே பேசித் தீர்த்தல் என்ற நிலை தொடர்கிறது.

எனவே, புலிகளை வெல்வதென்பது கூட தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை அங்கீகரிப்பதன் மூலமே சாத்தியம்.

## தமிழ் சமுதாயத்திற்கு நாசம் விளைத்தவர்கள்

ஒடுக்கப்பட்ட தேசிய இனம் இராணுவ ரீதியாக வெற்றி கொள்ளப்பட்ட பிறகு, பெரிய இனத்துஅரசியல்வாதிகள் பரோபகாரம்பண்ணி தீர்வுகண்டதாக அல்லது ஏகாதிபத்தியமொன்று போராடும் காலனி நாட்டுப் போராட்டம் நசுக்கப்பட்ட பின் சுதந்திரத்தைக் கொடுத்ததாக சரித்திரத்திலும் இல்லை.

ஆனால் இங்கு போராடும் புலிகள் பாசிச அமைப்பாக, ஆரோக்கியமான விடுதலைப் போராட்டத்தைச் சீரழித்தவர்களாக, தமிழ் மக்கள் வென்றிருக்கக் கூடிய விடயங்கள் எல்லாவற்றையும் பாழாக்கியவர்களாகவே நின்று கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் தமிழ் மக்களின் நண்பர்களாக, இருக்கக்கூடிய அண்டை நாட்டவர்களைப் பகைவர்களாக, அண்டை இனத்தவரைப் பகைவர்களாக, சக தமிழ் அரசியல் கட்சிகளைப் பகைவர்களாக ஆக்கி தமிழ்ச் சமுதாயத்திற்கு பெருநாசம் விளைவித்திருக்கிறார்கள். இதில் யாருக்கும் எந்தவித சந்தேகமும் இருக்க முடியாது.

ஆனால் ஆண்டாண்டு காலமாக பேரினவாத சக்திகளால் போசித்து வளர்க்கப்பட்ட நாட்டின் படை என்பது சிங்களப் படைதான். இது யுத்தத்தில் வென்றால், 'வென்றவர்கள்' என்ற மனப்பாங்குடன் தான் நடந்து கொள்ளும் என்பதில் எதுவித சந்தேகமும் இருக்க முடியாது. இதனைப் பற்றிக் கூறுவதற்கு இது தமிழ் மக்களுக்கு இதுவரை இழைத்த அட்டூழியங்களே சான்று.

## யுத்தத்திற்கு ஆயிரம் நியாயங்கள்-மக்களுக்கு?

நாட்டுக்குப் பொதுவான மனுசி என்று கருதப்பட்ட சந்திரிகா அவர்கள் தற்போது போரிடும் சிங்கள இராணுவத்தின் நலன்களிலேயே கூடுதலான அக்கறை கொண்டவராக இருக்கிறார்கள்.

இந்த அரசு யந்திரத்தின் ஜனாதிபதியாக இருப்பதும் அவரை அவ்வாறு நடந்துகொள்ள நிர்ப்பந்திக்கிறது. அவர், சிங்கள இராணுவத்திற்கு நாடு கடமைப்பட்டது என்று சொல்கிறார். அது சமூகமட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. ஒரு கணிசமான பகுதி சிங்களமக்களும் அதனை ஏற்றுக் கொள்ளலாம்.

இதன் மறுதலையாக, கணிசமான தமிழ்மக்கள் புலிகளின் பின்னாலும் இருக்கிறார்கள். ஒவ்வொரு அங்குல மண்ணையும் மீட்பதற்காக உயிர் துறப்பவர்களுக்கு தமிழ்ச் சமுதாயம் கடமைப்பட்டிருக்கிறது என்று புலிகள் கூறுகிறார்கள்.

'யுத்தத்திலீடுபட்டுள்ள இராணுவத்தினர் நாட்டின் இறைமையைக் காக்கிறார்கள் ஐக்கியத்தை வளர்க்கிறார்கள்...' இது அரசினால் கூறப்படுகிறது.

புலிகள் தரப்பில், தாயக மண்ணிற்காக மரணிப்பவர்கள் பற்றிக் கூறப்படுகிறது.

ஆனால் இந்த யுத்தத்தில் சிக்கித் திணறும் ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான மக்கள் பற்றி இந்த இரண்டு தரப்பாருமே அலட்டிக்கொள்வதில்லை. மக்கள் இங்கு முக்கியத்துவம் இழந்து முகமிழந்து போகிறார்கள்.

இதனை எவ்வாறு இல்லாமல் செய்யலாம்? இந்த நாட்டில் யாரும் இரண்டாந்தரப் பிரசைகள் அல்ல. இது பல இனங்களும் சமத்துவத்துடன் வாழும் நாடு என்ற நிலை உருவாக்கப்படுமிடத்து, யுத்த சக்திகளின் முக்கியத்துவம் குறைந்து மக்களின் முக்கியத்துவம் மேலெழும்பலாம்.

## இராணுவம் வென்றால் சமாதானம் வருமா?

தம்மை ஜனநாயக அரசைச் சார்ந்தவர்கள் எனக் கூறிக்கொள்பவர்கள், இறைமையையும் ஐக்கியத்தையும் இங்குள்ள பல இனமக்களாலும் மனரீதியான ஐக்கியத்துடனேயே நிலைநிறுத்த முடியும். இல்லாமல், படைகளின் உதவியுடன் நிலைநிறுத்த முடியாது.

கோல உடைதரித்தவர்களின் முக்கியத்துவம் சகல தரப்பிலும் அதிகரித்துச் செல்லப்படுகையில், இந்த நாட்டில் ஜனநாயக, மனித உரிமைகள், இனரீதியான முரண்பாடுகள் அதிகரித்துச் செல்லுமே தவிர குறையாது என்பதனை இவர்கள் புரிந்து கொள்கிறார்களில்லை.

சந்திரிகா அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க விரும்பினார், உண்மை. அதற்காக சிங்கள மக்களது ஏகோபித்த ஆதரவையும் பெற்றார். ஆனால் தற்போது, பாரம்பரியமான அரசு யந்திரக் கட்டமைப்பிற்கும் மக்களின் தீர்ப்புக்குமிடையே ஊசலாடிக்கொண்டிருக்கிறார்.

அவர் முதலில் தமிழ் மக்களின் இதயத்தையும் மனங்களையும் வெல்ல வேண்டுமென்று குறிப்பிட்டார். மறுபுறம் யுத்தத்தின் மூலம் சமாதானம் என்று குறிப்பிடுகிறார். இனப்பிரச்சினை தொடர்பான முரண்பாடான வார்த்தைகள் இங்கு வெளிப்படுகின்றன.

இந்த முரண்பாடும் ஊசலாட்டமும் பேரினவாத சக்திகள் தலையெடுக்க வழிசமைப்பதாகவே அமையும்.

பெரும்பான்மையின இராணுவமொன்று வென்றதன் பின் சமாதானம் நிலைநாட்டப்பட்டது என்று உலக சரித்திரத்தில் ஆதாரம் எதும் உண்டா?


அதேவேளை சுதந்திரத்திற்காக போராடுவதாகக் கூறிக்கொள்ளும் அடிப்படைவாதிகள்பற்றியும் தெளிவாக இருக்க வேண்டும். இவர்கள் மக்களை தமது ஆயுதங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவே பார்க்கிறார்கள். சகலவிதமான கட்டளைகளுக்கும் மக்கள் கீழ்ப்படிய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

## ஆப்கான் தலிபானும் ஆபத்பாந்தவ புலிகளும்

உலகெங்கும் அடிப்படைவாதங்களுக்கு ஒரு பொதுத்தன்மை இருக்கிறது. புறநானூறு பேசலாம், மதப்பெருமைகளைப் பேசலாம்.ஆனால், அவர்கள் எல்லோரும் ஒரேவிதமாகவே நடந்துகொள்கிறார்கள்.

அண்மைய உதாரணம் ஒன்று. சோவியத்-ஆப்கானிய யுத்தத்தின் போது ஆப்கன் ஜனாதிபதியாக இருந்தவர் நஜிபுல்லா. நிறையவே மனித உரிமை மீறல்கள் இருந்தன, உண்மை. ஆனால் நஜிபுல்லா நவீன உலகத்தின் மனிதர். நாட்டின் எல்லைகள் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருந்த ஆப்கானிய ☞

**யுத்த யந்திரத்தை ஏற்றிப் போற்றும் போது அல்லது அதுவே சமாதானத்திற்கான ஒரேவழி என்று செயற்படும் போது மனித விழுமியங்கள் எல்லாமே அழிந்து போய்விடும்.**



www.padippakam.com



மக்களின் வாழ்வை முதன்மைப் படுத்தினார். அவர் அடிப்படைவாதிகளுக்கெதிராக ஈவிரக்கமில்லாமல் செயற்பட்டார்.

ஆனால் பல்வேறு நாடுகளால் தூண்டப்பட்ட அடிப்படைவாதக் குழுக்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? ஆப்கானில் வாழ்பவர்களை மக்களைப் போல் நடாத்துகிறார்களா?

பெண்கள் எவரும் வெளியில் தலைகாட்டக்கூடாது என்று 'தலிபான்' வெளியிட்ட உத்தரவுக்கும், எல்லோரும் கட்டாயம் மசூதிக்குச் சமூகமளிக்க வேண்டும் என்று கூறியதற்கும்–

புலிகளின் ஒரே உத்தரவின் மூலம் மக்களை யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றியதற்கும், 'ரிவிரச' இராணுவ நடவடிக்கையின் போது வலிகாமம் மக்களை ஒரேயடியாக பலாத்காரமாக வெளியேற்றியதற்கும்–

என்ன வித்தியாசம் இருக்கப் போகிறது?

இதேபோன்றதொரு நிலை எமது நாட்டிலும் ஏற்படவேண்டுமா?

ஆப்கானிஸ்தானுக்கு நல்லது செய்ய விழைந்த நஜிபுல்லா, அடைக்கலம் புகுந்திருந்த ஐ.நா. காரியாலயத்திற்கு முன்னாலேயே துரோகி முத்திரையுடன் தொங்கவிடப்பட்டார்.

எங்களுக்கும் ஒரு 'தலிபான்' தேவையா? என்பதனை படித்தவர்கள் என்று இறுமாந்திருக்கும் எமது சமூகம் சிந்திக்க வேண்டும். ஆப்கான் தலைநகர் காபூலை கைப்பற்றியிருப்பவர்கள் இவர்கள்தான். யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்கள் புலிகள். எமது அனுபவங்களிலிருந்து கற்போம்.

## யுத்தம் தரும் பரிசுகளில் சமாதானம் எங்கே?

இங்கு என்ன நடந்துகொண்டிருக்கிறது? 'ஒவ்வொரு அங்குல நிலத்தின் மீட்சிக்காகவும் சிறுவர் சிறுமியரே நீங்கள் பலியாகத் தயாராக இருங்கள்!' இந்தக் கோஷம் விரிந்து சென்றுகொண்டிருக்கிறதே

88–90 வரையிலான ஜே.வி.பிக்கெதிரான பிரேமதாசாஅரசின் யுத்தம் அப்பாவிகளுக்கு ரயர் மாலைகளைப் பரிசாகத் தரும் அளவிற்கு செல்லவில்லையா? தற்போதைய யுத்தம் வாவிகளில் பிணங்கள் மிதக்கும் நிலையை உருவாக்கவில்லையா? கிருசாந்தி, ரஜனிகளை பாலியல் படுகொலைகளுக்கு உட்படுத்தவில்லையா? வெள்ளமென வரும் அகதித் தமிழர்களுக்கு தடைமுகாம்களை உருவாக்கவில்லையா? மக்கள் தமது சொந்தப் பிரதேசங்களிலேயே திறந்தவெளிக் கைதிகள் போல் ஆகவில்லையா?

யுத்த யந்திரத்தை ஏற்றிப் போற்றும் போது அல்லது அதுவே சமாதானத்திற்கான ஒரேவழி என்று செயற்படும்போது மனித விழுமியங்கள் எல்லாமே அழிந்துபோய்விடும்.

## கிளையை வெட்டி என்ன அடியில் நழுவும் வேர்கள்

இரண்டாம் உலக யுத்தத்தில் ஹிட்லரின் பாசிச ஆட்சிக்கெதிராக பலநாடுகள் ஒன்றுசேர்ந்து யுத்தம் நடாத்த வேண்டியிருந்தது. ஏனெனில் ஹிட்லரின் ஆட்சி மனிதகுலத்தின் எதிரியாக நின்றிருந்தது. அந்த இடத்தில் யுத்தமூலம் சமாதானம் என்பது விளங்கிக் கொள்ளக்கூடிய விடயம்.

இங்கு தமிழ் மக்களின் மத்தியிலிருந்து யுத்தம் புரிவதும் பாசிசக் குழுதான். ஆனால் ஆண்டாண்டு காலமாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பழிபாவங்கள் அப்படியே இருக்க, யுத்தம் மூலம் சமாதானம் என்பது கபடத்தனமாகவே இருக்க முடியும்.

88–90 காலப்பகுதியில் ஜே.வி.பி ஜனநாயக விரோத அரசியல் இயக்கம். ஆனால் ஜே.வி.பி. தோன்றுவதற்கு சமூக பொருளாதாரக் காரணிகள் இருந்தன. அதே காரணிகள் அப்படியே இருக்க நேரடி இராணுவ நடவடிக்கைகள் மூலம் ஜே.வி.பி. யை வெல்வதென்பது ஆளும் வர்க்கத்தின் தற்திருப்தி நிலைப்பாடே. ஜே.வி.பி. யை, தாம் தோற்கடித்ததாக இன்றும் ஐக்கிய தேசியக் கட்சி திரும்பத் திரும்பக் கூறுகிறது.

கெடுபிடி யுத்தங்களில் வென்றவர்களின் நடைமுறைகள் கைப்பற்றப்பட்ட பகுதிகளின் மீது திணிக்கப்பட்டுள்ளன. ஆண்கள் கொல்லப்பட்டு பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அண்மைக் காலத்தில் பொஸ்னிய மக்கள் மீது சேர்பிய இராணுவம் இதேமாதிரி நடந்துகொண்டது.

இதே நடைமுறைகள் இன்று வடகிழக்கில் ஏதோ ஒரு அளவில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை எவரும் இலகுவில் மறுத்து விட முடியாது.

எனவேதான் யுத்த யந்திரத்தின் அசுர வளர்ச்சி கண்ணிவெடிகளும் துப்பாக்கிகளும் நிறைந்த நாடாக,

**சகலவிதமான எதிர்ப்புகளையும் புறக்கணித்து யுத்தம் ஒன்றை நடத்த முடியுமானால், ஏன் பேரினவாதிகளின் எதிர்ப்புகளை மீறி தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் தீர்வைக் காணமுடியாது.**

கும் நாட்டு மக்களே தண்டம் செலுத்த வேண்டும். இதனை மக்கள் தமது அனுபவ வாயிலாக அறிந்திருக்கிறார்கள்.

குறிப்பாக, தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் தீர்வு ஒன்றிற்கான முழுச்சக்தியும் பிரயோகிக்கப்பட வேண்டும். முதலும் முக்கியமானதுமான விடயம், முன்

படுத்துவதற்கே 1994இல் மக்கள் வாக்களித்தார்கள். பிறகு என்ன தயக்கம்?

## எல்லாவற்றையும் தின்று எஞ்சியிருப்பது யுத்தம்

ஒரு தெளிவான திட்டவட்டமான தீர்வு யோசனையை வைத்து, அதனை அமுல்படுத்துவதற்கான முயற்சியில் அதற்கெதிராக சகல இனங்களில் இருந்து உருவாகும் குறுகிய சக்திகளுக்கெதிராக ஈவிரக்கமற்றுப் போரிட வேண்டும். அதில் ஒரு தார்மீக நியாயம் இருக்கிறது.

ஆனால், எதுவுமே இல்லாத நிலையில் யுத்தம் மாத்திரம் எஞ்சியிருப்பது தான் இங்கு பிரச்சினை.

பிரச்சினை சமாதான வழியில் தான் தீர்க்கப்பட வேண்டும் என்ற கருத்து மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்பட வேண்டும். பிரச்சினை அவர்களை அழுத்துவதை அவர்களே உணர்கிறார்கள். தட்டியெழுப்புவதுதான் சமூகத் தளத்தில் செய்யப்பட வேண்டிய வேலை.

அரசில் உள்ளவர்கள், அரச இயந்திரக் கட்டமைப்பு அதற்குச் சரிப்பட்டுவராதவிடத்து, சமூகத் தளத்திலிருந்து நெருக்குவாரத்தைக் கொண்டுவர வேண்டும்.

நாளாந்தம் வடகிழக்கிலும் தெற்கிலும் கிராமங்களில் நடைபெறும் மரணச் சடங்குகள் மக்களுக்கு உண்மையில் இந்த யுத்தம் பற்றிய அருவருப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவலத்தினுள் வாழும் மக்கள் எப்போதும் அதிதீவிரவாத நிலைப்பாட்டை எடுப்பதில்லை. அவர்கள் சமாதானத்தையே விரும்புவார்கள். இரண்டு தரப்புகளுக்கும் அவர்க [illegible] பட வேண்டும்.

சர்வதேச சமூகத்திலும் சமாதான வழிதான் சாத்தியம் என்ற கருத்து தீவிரமாக உருவாகி வருகிறது. எனவே அந்த வழியூடாகவும் யுத்தம் புரிபவர்களுக்கு நெருக்குவாரம் உண்டாக்கப்பட வேண்டும்.

எல்லாவற்றையும் விட முக்கியமானது தீர்வு. அது சரியாக இருந்தால் இந்த இரண்டு தரப்பு நெருக்கடிகளும் வேகமாக அதிகரிக்கும். சமாதானத்தை நிராகரிக்கும் சக்திகளுக்கு வேறு வழி இல்லாமல் போகலாம். ●



**உலகெங்கும் அடிப்படைவாதங்களுக்கு ஒரு பொதுத்தன்மை இருக்கிறது. புறநானூறு பேசலாம், மதப் பெருமைகளைப் பேசலாம். ஆனால் அவர்கள் எல்லோரும் ஒரேவிதமாகவே நடந்துகொள்கிறார்கள்.**

மனித உயிர் மலிவடைந்த நாடாக மாறாமல் இருக்க இப்போதே துரிதமாகச் செயற்பட வேண்டிய அவசியமிருக்கிறது.

யுத்தத்தினூடாகச் சமாதானம் என்பதற்கு மாறாக யுத்தத்திற்குப் பதிலாக சமாதானம் என்ற கருத்து வலுப்படுத்தப்பட வேண்டும்.

இதுவரையிலான யுத்தம் தமிழ் மக்களை மாத்திரமல்ல முழு நாட்டையும் நரகத்தின் விளிம்பில் நிறுத்தியிருக்கிறது. யுத்தந்தான் ஜனநாயக மனித உரிமைகளைக் கேள்விக்குள்ளாக்குவதாகவும் இருக்கிறது.

ஒரு வரையறைக்குட்பட்ட அளவில் யுத்தம் தேவையாக இருந்தது உண்மை. சகல ஜனநாயக வழிகளும் அடைக்கப்பட்டிருந்த நிலையில் தமிழ் மக்களுக்கிருந்த ஒரே மார்க்கம் 80களின் நடுப்பகுதியில் ஆயுதம் ஏந்திப் போராடுவது என்றவாறே இருந்தது. அந்த யுத்தந்தான் தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் இருக்கிறது என்பதனை உலகுக்கு காட்டியது; மற்றவர்களை உணரப் பண்ணியது.

அதேபோல், தாம் ஏகபோகவாதிகள் தம்மை ஒருவரும் தோற்கடிக்கமுடியாது தாம் வைத்ததே சட்டம் என்றிருந்தவர்களை நிலத்திற்குக் கொண்டு வந்ததும் யுத்தம்தான்.

ஆனால் மாற்றுவழிகள் எதையும் நாடாத, ஜனநாயக வழிகள், மக்கள் எல்லாவற்றையும் நிராகரிப்பதாகவே இதன் மொத்தப் போக்கு அமைகிறது. போகப்போக அது ஒன்றே வேலைத்திட்டமாகி விடுகிறது. இதனால்தான் யுத்தம் தேவையில்லை என்றாகிறது.

## மனங்களை வெல்வதா? பிணங்களை எண்ணுவதா?

இனிமேல் எத்தரப்பில் யுத்தம் முன்னெடுக்கப்பட்டாலும், அது மக்களுக்குப் பேரழிவை – வரலாற்றில் இதுவரை கண்டிராத பொருளாதாரச் சரிவை ஏற்படுத்துவதாகவே அமையும்.

இராணுவத்தின் 'ரிவிரச' தொடக்கம், புலிகளின் அண்மைய யுத்தம் வரை பிணங்கள் எண்ணப்படுகின்றன. ஒருவருக்கொருர் மற்றவர்களின் பிணங்களை அதிகரித்துக் காட்டுவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

இங்கு இறப்பது மாத்திரமல்ல, ஏனைய இராணுவ இழப்புக்களுக்

வைக்கப்படும் தீர்வு தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக அமைய வேண்டும்.

சகலவிதமான எதிர்ப்புகளையும் புறக்கணித்து யுந்தம் ஒன்றை நடத்தமுடியுமானால், ஏன் பேரினவாதிகளின் எதிர்ப்புகளை மீறி தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் தீர்வைக் காணமுடியாது.

அரசு முன்வைத்திருக்கும் தீர்வுத்திட்ட யோசனைகளுக்கு பாராளுமன்ற ஆதரவு கிடைக்காதென்றால் நேரடியாக மக்களிடம் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்வதென்பது நல்லதே. ஆனால் தீர்வுத்திட்ட யோசனைகளின் உள்ளடக்கம் மிக முக்கியமானது.

ஒரு உருப்படியான தீர்வை முன்வைத்து சமாதானத்தை ஏற்



**இந்த யுத்தத்தில் சிக்கித் திணறும் ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான மக்கள் பற்றி இந்த இரண்டு தரப்பாருமே அலட்டிக்கொள்வதில்லை. இந்த நாட்டில் யாரும் இரண்டாந்தரப் பிரசைகள் அல்ல. இது பல இனங்களும் சமத்துவத்துடன் வாழும் நாடு என்ற நிலை உருவாக்கப்படுமிடத்து, யுத்த சக்திகளின் முக்கியத்துவம் குறைந்து மக்களின் முக்கியத்துவம் மேலெழும்பலாம்.**

தவிர நின்றபாடில்லை. ஆனால், அதிகாரம் கிடைத்தால் எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பதற்கு 'பொல்பொட்'டின் கம்பூச்சியா தொடக்கம் புலிகளின் தமிழீழம் உட்பட 'தலிபா'னின் ஆப்கானிஸ்தான் வரை உதாரணங்கள் இருக்கின்றன.

யுத்தத்தின் மூலம் சமாதானம் வரும் என்பது சாத்தியமில்லை என்பதற்கு இலங்கையிலும் உதாரணங்கள் 70களின் ஆரம்பம் தொடக்கம் இன்றுவரை இருக்கின்றன.

71 கிளர்ச்சியை அடக்குவதற்கு எடுத்த முயற்சிகள் 15 ஆயிரம் இளைஞர்களின் சாவுக்கு வழிவகுக்கவில்லையா? மனம்பெரியின் கற்பழிப்புக்கு வழிவகுக்கவில்லையா?

ஆனால், என்ன சமூகக் காரணிகள் ஜே.வி.பி.யின் தோற்றத்திற்குக் காரணமாய் அமைந்தனவோ அதே காரணிகள் இன்றும் சிக்கல் நிறைந்ததாக மாறிக்கொண்டிருக்கும் நிலையில் திரும்பவும் ஜே.வி.பி.யோ அல்லது அதே மாதிரியான சக்திகள் தலையெடுப்பதற்கே வழி வகுக்கும்.

## யுத்தத்தின் ஊடாக அல்ல பதிலாகவே சமாதானம்

எப்போதும் வரலாற்றைப் புரியாமல் பிரச்சினைகளின் வேர்களைத் தேடாமல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முற்படுவதே பிரச்சினைகளை புதிய பரிமாணத்திற்குக் கொண்டு செல்கின்றன.


## Happy Birthday பிரபாகரன்

கேட்டையில் பிறந்து கோட்டையைப் பிடித்து தன் சொந்த நாட்டில் மட்டுமல்லாது அண்டை அயல் நாடுகளிலும் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் தன் சொந்த மக்களிடமே கப்பம் தெண்டம் அறவிட்டு, பலரை மண்டையில் போட்டு, பலரைச் சிறைப்பிடித்து, அயல் நாட்டுப் பெண்கள் சிறுவர்களைப் பலியெடுத்து முஸ்லீம் சமயத்து மக்களை சொத்துக்களைப் பறித்து நாடு கடத்தி தமிழ் மக்களுக்கு இருக்கக் கூடிய சகல அடிப்படை உரிமைகளையும் மறுத்து நல்லாட்சி வழங்கிய கரிகால் பெருவளத்தான் பிரபாகரன் இன்று தனது 42வது பிறந்த நாளை மாவீரர்களின் துக்க நாள் நினைவுகளின் மத்தியிலும் தன் குடும்பத்துடன் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார்.

*(மக்களுக்கெல்லாம் இழவு வீடு எம் மன்னவனுக்கோ என்றும் மங்கள வீடு)*

அவரை 15 வருடங்களுக்கு மேலாக இந்தியாவில் பாதுகாப்பாக வாழ்ந்து வரும் அப்பா, அம்மா, சகோதரிகள் சிங்கப்பூரில் சிறப்பாகக் கப்பல் வியாபாரம் செய்து வரும் அண்ணன் மற்றும் மனைவி பிள்ளைகள் மூளைச் சலவை செய்யப்பட்டு கொலைக்கு ஏவப்பட்டு நாளை மாவீரர் ஆக்கப்படவுள்ள விபரமறியா இளவயதினர், வெளிநாடுகளுக்குத் தப்பி வந்து தமது வாழ்வைத் தக்கவைத்துக் கொண்ட அடிமைப் புத்தி கொண்ட புலிரசிகர்கள் ஆகியோர் எல்லா வளங்களையும் சுருட்டி, மேலும் மேலும் அப்பாவி மக்களைக் கொன்று குருதி குடித்து நிணம் புசித்து, பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

இவரால் ஈவுஇரக்கமற்ற முறையில் கொல்லப்பட்ட ராஜீவ்காந்தி, ராஜனிதிரணகம, அமிர்தலிங்கம், பத்மநாபா, சிறிசபாரட்ணம், செல்வி, சாம்தம்பிமுத்து தம்பதிகள், ஆனந்தராஜா மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அரசாங்கஅதிபர்கள், அரசஉத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வீரவுரையாளர்கள், வைத்தியர்கள், மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், அனைவரும் சொர்க்கத்திலிருந்து வாழ்த்த.

இவருடன் சேர்ந்து அடாவடித்தனங்கள் செய்து பின் இவராலேயே துரோகத்தனமாகக் கொல்லப்பட்ட புலிகளின் முதற்தலைவர் செட்டி, செல்லக்கிளி, விக்டர், ராதா, குமரப்பா, பிலேந்திரன் ஆகியோருடன் துரோகியெனக் கூறி மரணதண்டனை வழங்கப்பட்ட பிரதித்தலைவர் மாத்தையா, இஞ்சினியர் உட்பட 400 புலிகளும் நரகலோகத்திலிருந்து சபிக்கிறார்கள்.

பிரபாவின் ஆசியுடன் கிட்டன் மீது மேற்கொள்ளப்பட்ட கொலைமுயற்சி கிட்டனின் காலுடன் தவறியதால் துரோகிப்பட்டம் ஏற்க இருந்த கிட்டன் பின்னர் மாவீரன் ஆகி இப்போ அவரும் நரகலோகத்தில் இருந்து கரிகால் பெருவளத்தானை சபிக்கிறார்.

அண்ணன் தம்பி உறவு கொண்டாடி, தனக்கு வேண்டப்படாத பலரைத் தனக்காகக் கொலை செய்து உதவிய தம்பி பிரபாகரன், தன்னையும் நயவஞ்சகமாகக் கொன்றதையும் மறந்து அண்ணன் பிரேமதாச அவர்களும் ஆவி உலகத்திலிருந்து சபிக்கிறார்.

சமீபத்தில் பிரான்சில் புலிகளின் ஆயுதக் கொள்வனவு முகாமையாளர் பத்மநாதனால் கொல்லப்பட்டு மாவீரர் ஆக்கப்பட்ட நாதன், கஜன் ஆகியோரும் ஆவி உலகத்திலிருந்து பிரபாவின் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் புலிகள் இயக்கத்தில் இருந்து மாவீரர் ஆகிய பரமதேவாவின் தாயார் மாவீரர் தினத்திற்குக் கொடியேற்றியதும், அது நடந்து மறுநாள் பரமதேவாவின் சகோதரர் வாசுதேவா பேச்சுவார்த்தைக்கென அழைத்துப் புலிகளால் கொல்லப்பட்டதும், அது அறிந்து அவர்களின் தாயார் தான் ஏற்றிய புலிக்கொடியை இறக்கி கிழித்து எறிந்ததும் மாவீரர் விழாக்களில் நடந்த சிறப்பு நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

புறநானூற்றிலும் காணா வீரம் செறிந்த புலித்தலைவர் செல்வச் செழிப்போடு வளர்க்கும் தன் மகனை மாவீரனாக்கிப் புதிய புறநானூறு படைக்கும் காலத்தைப் புலி ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிரபாவின் மனைவியின் புத்திர பாசம் தடையெனத் தகவல். வெற்று வார்த்தைகளால் தமிழர் மனங்களைச் சோதித்து செத்த வீடுகளை மட்டும் பரிசாகத்தந்த பாசிசவாதியால் இன்னும் எத்தனை மாவீரர் குடும்பங்கள் உருவாகப் போகின்றதோ?

ஊமைகள் ஏங்கவும், உண்மைகள் தூங்கவும், யார் தான் பார்த்திருப்பார்.


வெளியீடு: சமாதானம் சகவாழ்வு வேண்டிநிற்கும் தமிழ்மக்கள், கனடா.

படிப்பகம்

www.padippakam.com





# திருமலையில் கருத்தரங்கு



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி திருகோணமலை கிளையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கு ஒன்று கடந்த 05.01.97 ஞாயிற்றுக்கிழமையன்று திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

எமது சமுதாயம் திசை தெரியாத இருட்டில் தள்ளப்பட்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்கள் முகம்கொடுத்து நிற்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் ஆராயும் வகையிலும், தமிழ் பேசும் மக்களின் எண்ணங்களை வெளிக்கொணரும் வகையிலும் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கருத்தரங்கில் பல்வேறுபட்ட தலைப்புக்களிலும் உரையாற்றிய பேச்சாளர்கள் தமிழ்மக்களின் அவலங்கள் பிரச்சினைகள் பற்றியும் அவற்றுக்கான தீர்வுகள் பற்றியும் தமது கருத்துக்களை முன்வைத்தனர். க.ரகுநாதன் அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கினார்.

கருத்தரங்கில் முதலில் உரையாற்றிய ஜனநாயகத்துடனான சமாதான இயக்கத்தின் முன்னோடி திரு. மனோரஞ்சன் வடகிழக்கில் ஜனநாயகத்தை மீள கட்டியெழுப்புவது எவ்வாறு என்ற தலைப்பில் உரையாற்றினார்.

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் அரசியல் செயற்பாட்டை ஜனநாயக வழிமுறைக்குக் கொண்டு வருவது அல்லது ஜனநாயக நடைமுறைகளை மீண்டும் தமிழ்மக்களின் அரசியல் கலாச்சாரத்தில் புதுப்பிப்பது எவ்வாறு?

இது மிகவும் சிக்கலானது. ஆனால் தமிழ் மக்களும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகள், இயக்கங்கள், பத்திரிகைகள், தனிநபர்கள் எல்லோரும் இதுபற்றி சிந்திக்க வேண்டியதுஅவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

எப்பொழுதும் இருக்கின்ற ஜனநாயகப் பண்புகளை பேணி வளர்க்கும் தத்துவமும் சிந்தனைப் போக்கும் அதற்கான அரசியல் முதிர்ச்சியும் ஒரு சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிற அமைப்புக்களிடையே இல்லாதவரையில் அந்த சமூகம் அவற்றைப் பேணிப்பாதுகாக்கவோ அதற்காக குரல் கொடுக்கவோ முன்வருவது வரலாற்றில் நடந்தது கிடையாது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அரசியல் அமைப்பு ரீதியாக அரசியல் அதிகாரம் பரவலாக்கப்பட்டால் மட்டுமே இந்த நாட்டில் ஒட்டுமொத்தமான ஜனநாயக சூழலுக்கு வழி பிறக்கும். அவ்வாறான சூழ்நிலை மட்டுமே தமிழ் மக்களுடைய அரசியல் சூழ்நிலையிலே ஜனநாயக உயிரோட்டத்தை ஏற்படுத்தும் எனஅவர் இறுதியாக குறிப்பட்டார்.

அடுத்து உரையாற்றிய ஈ.பி.ஆர். எல்.எஃப். மத்திய குழு உறுப்பினர் தி.சிறீதரன், யுத்தத்தின் மூலம் சமாதானம் சாத்தியமாகுமா? என்ற தலைப்பில் உரையாற்றினார்.

இந்த நாட்டில் 80களின் நடுப்பகுதியில் திட்டவட்டமான அடையாளங்களுடன் யுத்தம் ஆரம்பித்தது. தமிழ் மக்கள் எல்லாவிதமான வழிகளிலும் அடக்கப்பட்ட நிலையில் ஆயுதம் ஏந்தி யுத்தம் நடத்த நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப்பட்டார்கள் என்று குறிப்பட்ட சிறீதரன் அவர்கள், 89ம் ஆண்டில் ஜே.வி.பி.யை அழித்தவிட்டதாக பிரேமதாசா அரசாங்கம் திருப்திப்பட்டுக் கொண்டது.

ஜே.வி.பி. 71ம் ஆண்டு கிளர்ச்சியை நடாத்தியது. பின்னர் 89ல் மீண்டும் செயலுருப்பெற்றது. பின்னர் அவ்வாறே அது திரும்பவும் உருவாவதற்கான சமூகக் காரணங்கள் அழிக்கப்பட்டு விட்டனவா? என்று கேள்வி எழுப்பினார்.

அதுபோலவே இன்று தமிழ் மக்களிடையே இருந்துவரும் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதானால் மிக முக்கியமான தேவை தமிழ் மக்களுடைய பிரச்சினையின் வேரை தரிசனம் செய்ய தயாராக இருக்க வேண்டும்.

சண்டையை நடத்துவதில் காட்டப்படுகின்ற தீவிரம் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காட்டப்பட வேண்டும். யுத்தம் முதன்மைப்படுத்தப்படக் கூடாது என்றும் தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய 'யுக்திய' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சுனந்ததேசப்பிரிய, பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தபின் மனித உரிமைகள் என்ற தலைப்பில் உரையாற்றினார். அவர் சிங்களத்தில் ஆற்றிய உரையினை சபையிலிருந்த ஒருவர் முன்வந்து தமிழில் மொழிபெயர்த்தார்.

அவர் சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வந்த உடன் கூறப்பட்ட கருத்துக்களில் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது என்பது ஒன்று. அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது இருந்தது. ஆனால் இன்று அதே தடைச்சட்டத்தை பாவித்து அவர்கள் சிலரை கைது செய்ய முற்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

சந்திரிகா அவர்கள் மேல்மாகாணசபை முதலமைச்சராக இருந்த போது மிக இரகசியமாக சில முயற்சிகளை மேற்கொண்டு இரத்தினபுரி மாவட்டத்திலே புதைகுழிகளில் புதைக்கப்பட்டிருந்த ஏராளமான சடலங்களை கண்டுபிடித்து அந்தச் சம்பவத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார். இதனையும் பாவித்து பின்னர் அவர் பதவிக்கு வந்தார்.

ஆயினும் இந்தப் புதைகுழிகளில் 32 பள்ளி மாணவர்களைக் கொண்டுபோய்ப் புதைத்த அந்தச் சம்பவத்திற்கு காரணமாக இருந்த இராணுவ அதிகாரியை பிரிகேடியர் ஆக பதவி உயர்த்தி, வெலிஓயா முகாமிற்கு தலைவராக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை அவருக்கு ஏற்பட்டிருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் அனைத்து உரிமை மீறல்களுக்கும் யுத்தத்தினை காரணம் காட்டி வருவதாக குற்றம் சாட்டிய சுனந்த தேசப்பிரிய அவர்கள் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சேர்ந்து இவற்றுக்கெதிராக போராட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். ஏனெனில் முழுச் சமுதாயத்தையும் இவை பாதிக்கக் கூடியவை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் காரணத்தினால்தான் கிருஷாந்தி யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட போதும் இங்கு சிங்கள மக்கள் சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாகக் கூறிய அவர், கொழும்பில் ரயில் குண்டு வெடிப்பிலும் மத்திய வங்கி குண்டுவெடிப்பிலும் சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர். அவர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடு தமிழ் மக்களிடம் உள்ளதா? எனவும்அவர் கேள்வி எழுப்பினார்.

இறுதியாக, ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் இனப்பிரச்சினையில் இலங்கை அரசியல் சக்திகளின் ஆற்றலும் மூன்றாவது தரப்பு 'மத்தியஸ்தமும் என்ற பொருளில் கருத்துரை வழங்கினார்.

இந்த நாட்டில் ஏற்கனவே செய்யப்பட்ட டட்லி செல்வா ஒப்பந்தம், பண்டா செல்வா ஒப்பந்தம் இந்திய இலங்கை ஒப்பந்தம் போன்றவையும் இன்னும் இனப்பிரச்சினை தீர்ப்பதற்காக செய்யப்பட்ட அனைத்து முயற்சிகளும் கிழித்தெறியப்பட்டது. அல்லது செயலற்றதாக்கப்பட்டது என்ற எமது கடந்த வரலாற்றினை எடுத்து காட்டினார்.

இன்று முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டம் 13வது திருத்தச் சட்டத்தை பார்க்கினும் மேலானது என்ற அடிப்படையில் நாமும் கூட அதனை வரவேற்கிறோம்.

ஆனால் இன்றைய அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டு யு.என்.பி. பதவிக்கு வந்தாலும் நிச்சயமாக எதுவும் நடக்காது. இங்கு யாருக்கும் இந்தப் பிரச்சினையை தீர்க்கக் கூடிய வல்லமை இல்லை.

அரசாங்கம் முன்வைத்த தீர்வுத்திட்டத்தை எதிர்ப்பதில் யு.என்.பி மிகவும் முனைப்பாக இருக்கிறது என்று கூறிய அவர் யு.என்.பி.யை அம்பலப்படுத்த வேண்டும் என்பது சந்திரிகாவின் நோக்கம்; தம்மீதுள்ள விசாரணைக் கமிஷனை எடுத்தால் தான் தீர்வுத்திட்டத்தை ஆதரிப்பேன் என்பது ரணிலின் தந்திரம். இவர்கள் இனப்பிரச்சினையை தீர்ப்பார்கள் என நாம் எதிர்பார்த்தால் எவ்வாறு முடியும்? என்று கேள்வி எழுப்பினார்.




முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுத்திட்டத்திற்கு பாராளுமன்றத்தில் ஐ.தே.க.வின் ஆதரவு கிடைத்தாலும் அல்லது தப்பித்தவறி தமிழ் கட்சிகளுக்கும், புலிகள், அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையில் ஒரு உடன்பாடு ஏற்பட்டாலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய துணிச்சல் தகுதி இந்த அரசாங்கத்திற்கும் இல்லை யு.என்.பி.க்கும் இல்லை.

ஆளும்கட்சி, எதிர்க்கட்சி, புலிகள் தமிழ் கட்சிகள் என இவர்கள் எல்லோரையும் ஒரு வரிசைக்குக் கொண்டுவரவேண்டிய தேவை உள்ளது. அதை யார் செய்வார்கள் என்பதே இன்றுள்ள கேள்வி.

இதனை இலங்கைக்குள் செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை. மூன்றாவது சக்தியினால் தான் இது முடியும் என்று அவர் தெரிவித்தார்.

பல நாடுகள் அவ்வாறு மத்தியஸ்தம் செய்ய தயாராக இருப்பதாக தெரிவித்துள்ள போதும் அரசாங்கம் அதற்கு செவிசாய்த்ததாக தெரியவில்லை என கூறினார் அவர்.

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வினை எட்டுவதற்கும், அதனை அமுல்படுத்துவதற்குமென மூன்றாவது சக்தி ஒன்றின் ஒத்துழைப்பைக் கோருவதற்கும் பொதுமக்களாகிய நீங்கள் பிரபாகரனுக்கும் சரி அரசாங்கத்திற்கும் சரி ஒரு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அவரது உரையினை அடுத்து திருகோணமலை மாவட்ட செயலாளர் சிவராமனின் நன்றி உரையுடன் கருத்தரங்கு இனிதே நிறைவு பெற்றது.

# அன்பின் புலி நண்பனுக்கு,



நான் உனக்கு எழுதும் இக்கடிதம் சில வேளைகளில் கோபத்தை ஏற்படுத்தலாம். நீ இக்கடிதத்தை மக்கள் நலனை முக்கியப்படுத்தி நோக்கினால் நியாயம் விளங்கும். நீ என்ன நினைக்கிறாயோ தெரியவில்லை நான் இக்கடிதத்தை காலத்தின் கட்டாயத்தினால் எழுதுகின்றேன்.

நானும் நீயும் தமிழ் ஈழத்தாய் பிள்ளைகள் என்பதை மறந்திராய் என நினைக்கின்றேன். நாம் இருவரும் சிறுவயதில் இருந்து ஒன்றாகவே தானே பழகினோம்?

அதாவது 1983ம் ஆண்டுக்குப் பின்பு இருவரும் உடன்பிறவா சகோதரர்களாகவே பழகினோம். 1983ம் ஆண்டு நடந்த கந்தர்மட இராணுவ தாக்குதலின்பின் நடந்த இலங்கை அரசின் காட்டுமிராண்டித்தனமான யூலை கலவரத்தினால் நாம் இருவரும் மனமுடைந்து இலங்கை அரசுக்குப் பாடம் புகட்டும் நோக்கத்தில் நீ புலி இயக்கத்திலும் நான் வேறு இயக்கத்திலும் இணைந்தோம்.

அந்நேரத்தில் எங்களுக்கு இயக்கக் கொள்கை கோட்பாடு பார்க்க அவசியம் இருக்கவில்லை. தமிழ் மக்களின் மீது ஏவிவிடப்பட்ட கொலைவெறிக்குப் பதில் சொல்லும் நோக்கமே இருவரிடமும் ஒன்றாக தென்பட்டது. நாம் இருவரும் எதிரும் புதிருமான இயக்கத்தில் இணைந்துள்ளோம் என்பது பின் நாள்களிலேதான் உணர்ந்து கொண்டோம் அல்லவா?

நான் உன்னை நீண்ட நாட்களின் பின் இந்தியாவில் சந்தித்து பழைய நட்புரீதியாக அளவளாவிக் கொண்டோம். நீயும் மகிழ்ச்சியில் திகழ்ந்தாய் என்பது உனது விழிகளில் தெரிந்தது அதற்குப் பின் உன்னை நான் நீண்டகாலம் சந்திக்க முடியவில்லை.

மீண்டும் தமிழ் ஈழத்தில் தட்டா தெருச்சந்தியில் சந்தித்து இருவரும் ஐக்கிய முன்னணி கட்டியது பற்றி உனக்கு கூறினேன். அதற்கு நீ இராஜதந்திரம் எனக் கூறினாய். அப்போது அக்கருத்து விளங்கவில்லை. ஒன்றுபடுகிறோம் என்ற சந்தோஷமே எனக்கிருந்தது. மீண்டும் நட்புரீதியாக பழகிச் சென்றோம்.

கோட்டை ராணுவ வெளியேற்றம், பருத்தித்துறை ராணுவ வெளியேற்றம், நாவற்குழி ராணுவ வெளியேற்றம் போன்ற இராணுவ முகாம்களில் இருந்து இராணுவம் வெளியேறும் போது இருவரும் தோளோடு தோள் சேர்ந்திருந்தோம் என்பதை மறந்திராய் என நினைக்கின்றேன். அதற்குச் சான்றாக நீ சில துண்டுப் பிரசுரங்களையும் நன்றி எல்லாம் தெரிவித்து வெளியிட்டாய்.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்று வாதத்தியார் சொல்லித் தந்த பழமொழிக்கு அமைய எல்லோரும் ஒன்றாக நின்றபோது இலங்கை ராணுவம் யாழ் மண்ணின் ஓர் அங்குலத்தையாவது பிடித்தார்களா?

1986ம் ஆண்டு உனது இயக்கத்தின் செத்துப்போன – செத்துக் கொண்டு இருக்கும் தனிநபர் அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கு ஏதுவாக தலைவனின் கட்டளைக் கிணங்க நண்பன் யார்? எதிரி யார்

தொடர்ச்சி 9ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com






# யுத்தத்திற்கு எதிராக நாங்கள் செய்ய ஒன்றும் இல்லையா?

## - திருமலைக் கூட்டத்தில் சுனந்த தேசப்பிரிய

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக கொம்பனி வீதியில் ஒரு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தோம். அரசாங்கம் சமீபத்தில் ரி.என்.எல். தொலைக்காட்சி செய்தி ஒன்றிற்காக அதன் உத்தியோகஸ்தருக்கு எதிராக எடுத்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே அந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தோம்.

மட்டக்களப்பில் நடந்த ஒரு இராணுவ நடவடிக்கை சம்பந்தமாக ரி.என்.எல். தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட செய்தியில் இரண்டு கருத்துக்கள் பிழையாக முன் வைக்கப்பட்டுள்ளது என்று காரணம் கூறி, தொலைக்காட்சியினுடைய பணிப்பாளர், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பாவித்து கைது செய்யப்பட்டார்.

சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வந்தபோது கூறப்பட்ட கருத்துக்களில் ஒன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதென்பது ஆகும். அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இது இருந்தது.

இன்றுஅதே தடைச்சட்டத்தைப் பாவித்து அவர்கள் சிலரைக் கைது செய்வதற்கு முற்பட்டு வருகிறார்கள். இதுதான் இன்று தென்னிலங்கையில் காணப்படும் நிலையாகும்.

கடந்த வருடம் தென்னிலங்கையிலே நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி அதிகாரசபைகளின் தேர்தல்களை அரசாங்கம் பின்போட்டு வந்தது. இதற்குக் கூறப்பட்ட காரணம் என்னவென்றால், 'அவசர காலச்சட்டம் அமுலில் உள்ளது. நாட்டிலே யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே நாட்டில் தேர்தலுக்கான நல்ல சூழ்நிலை இல்லை' என்பதாகும்.

பதவிக்கு வந்த சந்திரிகா அரசாங்கத்துடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் மற்றொரு அம்சமாக அமையப் பெற்றிருந்தது: கருத்துச் சுதந்திரம், மொழிச் சுதந்திரம் வழங்கப்படும் என்பதாகும். ஆனால் தற்பொழுது அதை மறைத்து, கருத்து சுதந்திரத்தை மறுக்கக்கூடிய அளவிற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

ஜானக பெரேரா என்ற இராணுவ அதிகாரியினுடைய பெயர் உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும். ஏனென்றால் அவர்தான் தற்பொழுது யாழ் மாவட்டத்தின் நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார். இந்த அதிகாரிதான் கடந்த 71ம் ஆண்டுப் புரட்சிக் காலத்திலே குருநாகல் மாவட்டத்திலே இராணுவ நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றியவர்.

அந்நேரம், குருநாகல் மாவட்டத்திற்கு உட்பட்ட நிக்கவரட்டிய நகரத்திலே தோண்டப்பட்ட புதைகுழி ஒன்றிலே ஏராளமாக இளைஞர்களுடைய சடலங்கள் காணப்பட்டது. இதன் காரணமாக சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட 'ரிவிரெச' நடவடிக்கைக்கு முன்பு இதே அரசாங்கம் இவருக்கு எதிராக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது.

இந்த வழக்கு ஆயத்தம் மேற்கொள்ளப்பட்டபோது, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் புதைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் சார்பாக வாதிடுவதற்கு முன்வந்ததோடு மட்டுமல்லாமல், இந்த ஜானக பெரேராவுக்கு எதிராக வாதிடுவதற்கு நீதிமன்றத்திலுள்ள பெரும்பாலான சட்டத்தரணிகள் முன்வந்தனர்.

'ரிவிரெச' நடவடிக்கைக்கு பின்புதான் இவர்மீது தொடுக்கப்பட்ட வழக்கின் இரண்டாவது தவணை விதிக்கப்பட்டிருந்தது. 'ரிவிரெச' நடவடிக்கையில் அவருக்கு கிடைக்கப்பெற்றிருந்த வெற்றியின் நிமித்தமாக அவருக்கு 'ரணவிரு' பதக்கம் வழங்கப்பட்டது. இந்த ரணவிரு பதக்கம் வழங்கப்பட்ட பின்பு இவருக்கு எதிரான வழக்குத் தவணையின் போது வழக்கை விசாரித்த நீதியரசர், 'ஜானக பெரேரா ஒரு தேசியச் செல்வமாவார். இவருக்கு எதிரான இந்த வழக்கை நான் விசாரிக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது மிகவும் துரதிர்ஷ்டவசமான சம்பவம் என்றே நான் கருதுகின்றேன்'என்று கூறியபோது ஜானக பெரேராவுக்கு எதிராக வாதாட வந்திருந்த சட்டத்தரணிகள் பின்வாங்கிய நிலையும், படுகொலையான இளைஞர்கள் சார்பாக சட்டத்தரணிகள் வாதிட முன்வராத நிலையும் அங்கே காணப்பட்டது.

நான் இந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டது ஜானக பெரேரா மீது இருக்கின்ற குரோத உணர்வினாலே அல்ல. யுத்தத்தினாலே பாதிக்கப்படுகின்ற மக்கள் எதிர்நோக்க நேருகின்ற நிலையை எடுத்துக் காட்டுவதற்காகவே இந்த சம்பவத்தை நான் இங்கு குறிப்பிட்டிருக்கிறேன்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது, சந்திரிகா அவர்கள் மேல்மாகாண முதலமைச்சராக இருந்த பொழுது மிக இரகசியமாக சில முயற்சிகளை மேற்கொண்டு இரத்தினபுரி மாவட்டத்திலே புதைக்கப்பட்டிருந்த ஏராளமான சடலங்களைக் கண்டுபிடித்த அந்தச் சம்பவத்தை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தார்.

இந்த இரத்தினபுரி சவக்குழிகளைப் பற்றிய விமர்சனங்களை முன்வைத்து, அதைப் பாவித்துத் தான் அவர் பதவிக்கு வந்தார். ஆயினும் இந்த 32 பள்ளி மாணவர்களைக் கொண்டுபோய் புதைத்த சம்பவர்திற்குக் காரணமாக இருந்த இராணுவ அதிகாரியை பிரிகேடியர் ஆக பதவி உயர்த்தி வெலிஓயா முகாமிற்குத் தலைவராக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

இந்த யுத்தத்தை காரணம் காட்டியே தென்பகுதியில் சமூகத்தில் உள்ள பிரச்சினைகள் அனைத்தையும் மூடிமறைத்து வருகிறார்கள். யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போது உங்களுடைய சில[illegible]களை வழங்க முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம் என்று பிரச்சாரம் செய்து வருகின்றார்கள்.

கடந்த காலங்களிலே மின்சார சபை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த சமயம், வடக்கிலே யுத்தம் புரிகின்ற இராணுவத்தினரைக் கஸ்டத்திற்கு உள்ளாக்கும் நோக்கமாகவே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதென்று பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்கள்.

இப்போது சமீபகாலமாக சுகாதாரத்துறை ஊழியர்களுடைய வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்குரிய காரணங்கள் தொழில்ரீதியான காரணங்களாகும். இருந்தும் அரசாங்கம் கூறுவது என்னவென்றால், 'இந்த வேலை நிறுத்தம் இராணுவ நடவடிக்கைகளுக்கு - அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்தம்' என்பதாகும்.

சமீபத்தில் ஒரு இராணுவ வீரரை எக்ஸ்ரே எடுக்கத் தவறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்போவதாக தெரிவித்திருக்கிறார்கள்.

தென்பகுதியில் உள்ள சிங்கள மக்களுக்கு அரசாங்கம் கூறி வருகிற காரணங்கள் இவைதான். முன்னைய அரசாங்கம் யுத்தம் புரிந்ததினால் ஜனநாயக ஆன்மாக்கள் அழிக்கப்பட்டதாகக் கூறி பதவிக்கு வந்த சந்திரிகா அவர்கள், இப்பொழுது வழங்கியிருக்கும் ஜனநாயகத்தை நாங்கள் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் ஒரு இறாத்தல் பாணின் விலையை 3.50 சதமாக்கினார். இப்பொழுது ஓர் இறாத்தல் பாண் 7.00ருபாவிற்கு விற்கப்பட்டு வருகிறது. பாணின் விலையை குறைப்பதானால் அதற்கு கொடுக்கப்படும் மானியம் கூட்டப்பட வேண்டும். இந்த மானியத்தைக் கொண்டு இராணுவ வீரருடைய சம்பளத்தினை 15 ஆயிரம் வரை கொடுக்க முடியுமென குறிப்பிட்டிருந்தார்.

1982ம் ஆண்டளவில் யுத்தத்திற்காக ஒரு மில்லியனுக்குக் குறைவான பணமே செலவிடப்பட்டு வந்தது. இன்று அதுபோல் 50 மடங்கு அதிகமான பணம் செலவிடப்பட்டு வருகிறது. யுத்தத்திற்காக இந்த நாட்டினுடைய் தேசிய வருமானத்தில் 25வீதத்திற்கு அதிகமாக செலவிடப்பட்டு வருவதாக பொருளாதார அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இந்த யுத்தத்தினால் இலங்கைக்கு ஏற்பட்ட பொருளாதார நஷ்டம் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். 81ம் ஆண்டளவில் மீன்பிடித்துறை 57 வீத லாபம் கிடைக்கப்பெற்றது. இப்பொழுது 29 வீதமே கிடைக்கப்பெறுகிறது. இலங்கையின் ஆசிரியர்களின் எண்ணிக்கையளவு இராணுவ வீரர்களும் இருக்கிறார்கள்.

நாட்டினுடைய அபிவிருத்தியைப் பற்றி நாங்கள் கவனிக்கும் பொழுது குறிப்பாக இந்நாட்டில் எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள், எத்தனை வைத்தியர்கள் இருக்கிறார்கள், எத்தனை ஆராய்ச்சியாளர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கணித்தே நாங்கள் அந்த நாட்டினுடைய வளர்ச்சியைப் பற்றி கணிக்க முடிகிறது.

அபிவிருத்தியடைந்த ஜப்பான் போன்ற நாடுகளிலே விஞ்ஞானிகள் 360பேர் இருக்கிறார்கள். இலங்கையில் 5 விஞ்ஞானிகள் மாத்திரமே இருக்கிறார்கள். இவ்வாறான விடயங்கள் தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, சிங்கள மக்களுக்கு மாத்திரமல்ல, இது முழுச் சமுதாயத்தையும் பாதிக்கக் கூடிய விஷயமாகும்.

இந்த காரணத்தினாலேதான் கிருஷாந்தி யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டபோது கொழும்பிலே அதற்கு எதிராக நாங்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் நிகழ்த்தி வருகின்றோம். ஏனென்றால் இது நாட்டைப் பொறுத்தவரை முக்கியமான பிரச்சினையாகும்.

இதைப்போல் எல்லைக் கிராமங்களிலே சிங்கள சமூகத்தைச் சார்ந்த ஆயிரக்கணக்கான பிள்ளைகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி தமிழ் சமூகத்தினர் என்ன நினைக்கின்றனர் என்று நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன். இதேபோல் தெஹிவளை ரயில் குண்டு வெடிப்பில் அல்லது புறக்கோட்டை குண்டுவெடிப்பில் இழக்கப்பட்ட உயிர்களுக்காக இந்தப் படுகொலைகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடு தமிழ் மக்கள் மத்தியில் உள்ளதா என்று அறிய விரும்புகின்றேன்.

14 வருடங்கள் நடந்த யுத்தத்தினால் சிங்கள சமூக மக்கள் மத்தியிலே ஒரு பெரிய மாற்றம் காணப்படுகின்றது.

'ரிவிரெச' இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்பு அரசாங்கம் ஏறத்தாழ 10 ஆயிரம் இராணுவ வீரர்களை சேர்த்துக் கொள்வதற்கு உத்தேசித்து இருந்தும், அரசாங்கத்திற்கு ஒரு 5 ஆயிரம் இராணுவ வீரர்களைச் சேர்த்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

சமுர்த்தித் திட்டத்திற்கான இளைஞர்கள் மத்தியிலிருந்து இராணுவத்திற்குச் சேர்த்துக் கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதற்கு எதிராக கோஷங்கள் எழும்பியதோடு, கொழும்பில் மட்டும் 85 இளைஞர்கள் சமுர்த்தியினூடாக இராணுவத்தில் சேர்ந்தனர். இராணுவத்திற்குச் சேர்ந்து கொண்டு இருக்கின்ற இளைஞர்களுடைய எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது சிங்கள மக்கள் யுத்தத்தை வரவேற்கிறார்களா என்பதை உணரமுடிகிறது.

125000 பேரைக் கொண்ட இராணுவத்திலே இருபத்தேழாயிரம் பேர்வரை இன்று காணாமல் போயுள்ளார்கள்; அல்லது தலைமறைவாகியுள்ளார்கள். இன்று இந்த நாட்டிலே நடக்கின்ற கொள்ளை கொலை போன்ற சம்பவங்களிலே ஈடுபடுகின்ற இளைஞர்களில் பெரும்பாலும் 40 வீதத்திற்கு அதிகமானோர் இராணுவத்திலிருந்து தப்பியோடி வருபவர்கள்தான் என்று பொலிஸ் திணைக்களத்தின் அறிக்கையினூடாக தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோ போயிருந்தேன். ரொறன்ரோ நகரில் ஒரு இலட்சத்திற்கு அதிகமான தமிழ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடன் நான் கதைத்தபொழுது, பாரம்பரிய பிரதேசம் என்ற அடிப்படையில் ஏற்பட்ட யுத்தத்தினால் இன்று 5 இலட்சத்திற்கு அதிகமான மக்கள் பாரம்பரிய பிரதேசத்தைக் கைவிட்டு இங்கு வந்து வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாக அவர்கள் கூறியதைக் கேட்டேன்.

> "கிருஷாந்தி யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டபோது கொழும்பிலே அதற்கு எதிராக நாங்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் நிகழ்த்தி வருகின்றோம். ஏனென்றால் இது நாட்டைப் பொறுத்தவரை முக்கியமான பிரச்சினையாகும். இதைப்போல் எல்லைக் கிராமங்களிலே சிங்கள சமூகத்தைச் சார்ந்த ஆயிரக்கணக்கான பிள்ளைகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி தமிழ் சமூகத்தினர் என்ன நினைக்கின்றனர் என்று நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன்."

கடந்த மாவீரர் தினத்தன்று புலிகளின் இயக்கத்தினால் வெளியிடப்பட்ட செய்திகளிலேயே 11800 இளைஞர்கள் தங்கள் சார்பில் வீர மரணம் அடைந்தார்கள் என்று கூறப்பட்டது. ஸ்ரீலங்கா இராணுவத்தில் 82ம் ஆண்டு 19 சிங்கள இராணுவத்தினரே மரணித்தார்கள். 1995ம் ஆண்டு 5036 இராணுவத்தினர் இறந்தனர்; 11800 பேர் காயமடைந்துள்ளனர். கால்களை இழந்து நடக்கமுடியாதவர்களாக 6000 இராணுவத்தினர் இலங்கையிலே இருக்கிறார்கள்.

எங்கள் ஊரில் லால் என்ற இளைஞர் இராணுவத்தில் சேர்ந்திருந்தார். ஒருநாள்இரவு அதிகாலை 2 மணியளிவில் அவரது பிரேதப் பெட்டி அவரது வீட்டில் ஒப்படைக்கப்பட்டது. இறந்த இளைஞருடைய சவப்பெட்டியை வைத்துக் கொள்வதற்குக் கூட அவர்களது வீட்டிலே இடம் இருந்ததாகத் தெரியவில்லை.

இது சிங்கள மக்கள் மத்தியில் மாத்திரம் நடைபெற்றுவரும் நிகழ்ச்சியல்ல. வடக்கிலும் தெற்கிலும் யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் வறியவர்கள். சந்திரிகாவினுடைய பிள்ளைகள் கொழும்பிலுள்ள உயர்தர பாடசாலைகளில் கல்வி கற்று வருகிறார்கள். அதைப்போல் இந்த யுத்தத்தை ஊக்குவிப்பவர்களின் பிள்ளைகளும் எந்த யுத்தத்திலும் ஈடுபடுவதில்லை. அவர்களும் அவர்களுடைய பிள்ளைகளை வேறு துறையில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த யுத்தத்திலே ஈடுபட்டு வருபவர்கள் ஏழை மக்களுடைய பிள்ளைகளாகும். எங்களுடைய சமூகத்தில் உள்ள மக்கள் நூற்றுக்கு இருபத்தைந்து வீதமானவருடைய நாளாந்த வருமானம் ரூபா இருபத்தைந்தாக இருக்கிறது. இந்த குறைந்த வருமானம் உடைய குடும்பத்தைச் சார்ந்த பிள்ளைகள் தான் யாழ்ப்பாணத்தில் யுத்தத்திலே இறந்துவருகிறார்கள். அதேபோல் வெலிஓயாவிலும் இறந்து வருபவர்கள் இந்த குறைந்த வருமானமுடைய குடும்பத்தைச் சார்ந்த பிள்ளைகளேயாகும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன அதிகாரத்தில் இருக்கும்போது கூறினார். 'இந்த யுத்தத்தை 1981 டிசம்பர் 31ம் திகதி முடித்து வைப்பேன்' என்று. விஜயதுங்கா ஜனாதிபதி அவர்கள் கூறினார்கள். '1993 நவம்பர் 31ம் திகதியளவில் இந்த யுத்தத்தை முடித்துவைப்பேன்' என்று. அவர் சிசில் வைத்தியரட்னா அவர்களுக்கு முழு அதிகாரத்தைக் கொடுத்து வடக்கேஅனுப்பிவிட்டு இந்த வார்த்தையைக் கூறினார்.

நாங்கள் தெரிவு செய்த ஜனாதிபதி அவர்களும் '97ம் ஆண்டு யூன் மாதம் யுத்தத்தை நிறுத்திக் காட்டுவேன் அல்லது முடித்துக் காட்டுவேன்' என்று கூறுகிறார்கள்.

பொதுமக்களாகிய நாங்கள், ஜே.ஆர்.ஜெயவர்த்தன கூறியதையும், விஜயதுங்கா அவர்கள் கூறியதையும், சந்திரிகா அவர்கள் கூறியதையும், பிரபாகரன் அவர்கள் கூறுவதையும் கேட்டுக்கொண்டு வாழாவிருக்கப் போகிறோமா அல்லது இந்த யுத்தத்தைப் பற்றி பொதுமக்களாகிய நாம் ஏதாவது கூறவேண்டிய கடமை இருக்கிறதா என்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன்.

யுத்தத்தை நிறுத்துவதற்கு அல்லது சமாதானத் தீர்வைக் கொண்டு வருவதற்கு புலிகள் இயக்கமும் அரசாங்கமும் இணங்க வேண்டும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

இந்த இருபகுதியையும் சாராது பொதுமனிதன் என்ற ரீதியிலே இங்கே நடக்கின்ற யுத்தத்தை பற்றி நாங்கள் கூறுவதற்கு ஒன்றும் இல்லையா, நாங்கள் கூறக் கூடாதா? இந்த யுத்தம் இயல்பாக அல்லது தானாகவே நிற்கும் வரைக்கும் நாங்கள் காத்திருக்கத்தான் வேண்டுமா? அல்லது 'இதற்குப் பொறுப்பாக நாங்கள் ஏதும் செய்ய வேண்டாமா? செய்ய உரிமை இல்லையா என நான் உங்களை கேட்க விரும்புகின்றேன்.

இதைப்பற்றி நீங்கள் ஆழமாகச் சிந்திப்பீர்களானால் நான் இவ்வளவு தூரம் வந்து உங்கள் மத்தியிலே சில கருத்துக்களை கூறியதற்கு நல்ல பலன் கிடைத்ததாக கருதுவேன்.

படிப்பகம்

www.padippakam.com



ஜெர்மனியிலிருந்து, சாரதி

# அரசியல் வெற்றிடங்கள்

இலங்கையில் இனப்பிரச்சினையேயில்லை. வெறும் பயங்கரவாதம்தான் உண்டு. இதற்கு இராணுவரீதியில்தான் தீர்வு காணப்பட வேண்டும்... நாங்கள் மரம், சிறுபான்மையினர் மரத்தைச் சுற்றிப்படரும் ஒட்டுண்ணிகள் என்றெல்லாம் சொல்லி, ஐக்கிய தேசியக்கட்சி அரசு சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து அரசியல் நடத்திக் கொண்டிருந்தது. இந்த வகையாக வளர்க்கப்பட்ட இனவெறித் தீ கொழுந்துவிட்டெரிய ஏனைய இனவாத சக்திகள் எண்ணெய் வார்த்துக் கொண்டிருந்தன.

இலங்கையில் ஆட்சிக்கு வந்தவர்கள் எல்லோரும் இனவாதத்தை முதலாக வைத்தே காலங்கடத்தியிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த வரலாறுதான். கடந்த சுமார் பதினைந்து வருடங்களில் நாட்டில் இத்தனை ஆயிரம் உயிரிழப்புக்கள், கோடிக்கணக்கான சொத்திழப்புக்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழ் போய்க் கொண்டிருக்கும் நாடுதழுவிய பொருளாதார நெருக்கடிச்சூழ்நிலைகள், வேலையில்லாத் திண்டாட்டம் என்ற மோசமான நிலை ஏற்பட்டிருக்கிறது.

## சந்திரிகா வரவும் சமாதான எதிர்பார்ப்பும்

இத்தனை மோசமான நிலைக்குப் பின்பும் இதற்குக் காரணமான இனப்பிரச்சினைக்கு ஒரு சரியான தீர்வை முன்வைத்து நாட்டில் அமைதி சமாதானத்தை ஏற்படுத்தி மக்களுக்கு ஒரு சுபிட்சமான வாழ்வை ஏற்படுத்த இந்த ஆட்சியாளர்கள் முன்வருகிறார்கள் இல்லையே... தமது இருப்புக்களைப் காப்பாற்றிக் கொள்ள அநியாயமாக தமிழ், சிங்கள இளைஞர்களைப் பலியாக்குகிறார்களே என்று இந்த நாட்டில் பலர் தமக்குள்ளே இரத்தக் கண்ணீர் வடித்ததுண்டு. இவர்களின் அரசியல் நேர்மையின்மையையும், துணிச்சலுடன் இதனைச் செய்து முடிக்கக் கூடிய அரசியல் வலுவுள்ள ஒரு அரசியல் தலைவரின் வெற்றிடம் நீண்ட காலமாக நிரப்பப்படாமல்இருப்பதையும் எண்ணிப் பலர் சொந்தமாக நொந்து கொண்டதுண்டு.

இந்த நேரத்தில்தான் இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பது போல் சந்திரிகாவின் அரசியல் பிரவேசம் காணப்பட்டதாகப் பலர் உணர்ந்தனர். இந்தநாட்டில் இனப்பிரச்சினை உண்டு; அதற்கு அரசியல் ரீதியில்தான் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற சந்திரிகாவின் கூற்று ஒரு தெம்பை ஏற்படுத்தியது. அத்துடன், தான் சந்தித்த முதல் தேர்தலான மாகாணசபைத் தேர்தலில் இந்தச் செய்தியை சிங்கள மக்கள் மத்தியில் துணிச்சலுடன் எடுத்துச் சொன்னார்.

## சப்புக் கொட்டலும் சந்தேகக் கேள்வியும்

அந்த மாகாணசபைத் தேர்தல் இவருக்குப் பெருவெற்றியை ஈட்டிக் கொடுத்ததென்பதனை விட, சிங்கள மக்கள் மத்தியில் தூவிவிடப்பட்ட இனவெறியை அளக்கும் ஒரு தேர்தல் மானியாக இருந்ததென்பதே உண்மை. "இவருடைய வெற்றி ஒரு விபத்து. தற்செயலாக ஏற்பட்டது. சிங்கள மக்கள் மத்தியில் இனவாதம் இன்னும் அதிகரித்துள்ளதே தவிர குறையவில்லை. சந்திரிகாவும் எல்லா அரசியல்வாதிகள் போலத்தான். இவரும் எதனையும் பெரிதாகச் சாதிக்க மாட்டார்" என்று கடந்தகால கசப்பான வரலாற்றிலிருந்து பலர் சப்புக்கொட்டிக்கொண்டனர்.

இவர்களின் சப்புக் கொட்டலை சந்தேகக் கேள்வியாக்குவது போல் 1994 ஆகஸ்டில் நடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் சந்திரிகா அமைத்துக் கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியது. தொடர்ந்து நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் இதுவரை யாரும் பெற்றிருக்காத அளவுக்கு 42 லட்சம் வாக்குகளைப் பெற்று சந்திரிகா பெரு வெற்றியீட்டினார்.

இந்தத் தேர்தல்களில் சந்திரிகா இலங்கை மக்களுக்கு குறிப்பாக சிங்கள மக்களுக்கு கூறிய செய்தி, 'இந்த நாட்டில் இனப்பிரச்சினை உண்டு. அது அரசியல் ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் அழிவுகளை தடுத்து நிறுத்த முடியும்; நாட்டில் அமைதியை, சமாதானத்தை ஏற்படுத்த முடியும்; பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியும்' என்பதாகும்.

## இனவாதிகளை வீழ்த்திய தென்னிலங்கை எழுச்சி

'பதினேழுவருடங்களாக இருந்த யு.என்.பி. ஆட்சியை வெறுத்த மக்கள் ஒரு வடிகாலாக, சந்திரிகா ஆட்சியைத் தெரிவு செய்தனர் என்கின்ற ஒரு கண்ணோட்டமும், சந்திரிகா பெற்ற வெற்றி பற்றி அரசியல் அவதானிகளிடம் இருந்தது.

ஆனால் சந்திரிகா அறிவித்த, 'நாட்டில் அமைதி சமாதானத்துக்கான வழி, கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண்பதுதான்' என்ற செய்திதான் தொடர்ந்து மூன்று தேர்தல்களிலும் அவரைப் பெரும் வெற்றி பெறச் செய்தது.







சிங்கள மக்களில், குறிப்பாக இளைய தலைமுறையின் சிந்தனைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்கள் இந்த நாட்டில் அமைதி ஏற்படுவதை விரும்புகிறார்கள். அதற்கு சந்திரிகா தெரிவித்த அரசியல் தீர்வு என்பதனை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதனையே இத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. இனவாதத்தைத் தூக்கிப் பிடித்தவர்களை மக்கள் புறந்தள்ளியுள்ளார்கள் என்ற கண்ணோட்டமே அதிகமானவர்களிடம் காணப்பட்டது.

சந்திரிகா ஒரு நம்பிக்கை நட்சத்திரமானார். அவர் இளைய தலைமுறையின் புதிய தலைவர்; இன்றைய உலக அரசியல் அரங்கை தெரிந்து கொண்டவர்; வெளிநாடுகளில் கல்வி கற்றவரென அவரிடம் பலத்த எதிர்பார்ப்பு சர்வதேசமெங்கும் காணப்பட்டது.

## ஆட்டத்தில் தோற்றனர் களத்தைக் கொடுத்தனர்

அரசியல் சதுரங்க ஆட்டத்தில் தனது பக்க நியாயாதிக்கங்களை நாகரீகமாக நிறுவுவதென்பதானது சர்வதேசஅங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு பெருவெற்றியாகும். அரசியலில் ஈடுபடும் ஒவ்வொரு தலைவரும் அதனை நிறுவும் தகைமையை வெளிப்படுத்துவதனைக் கொண்டுதான் அந்த அங்கீகாரத்தைப் பெற்றவராகிறார்.

பேச்சுவார்த்தை என்ற சதுரங்க ஆட்டத்துக்கு புலிகளை சந்திரிகா மேடைக்கழைத்தார். அரசியல் வறுமை காரணமாக சதுரங்கத்தில் புலிகளால் ஆட முடியவில்லை.

ஆனாலும் பொறுமை காத்த சந்திரிகா, புலிகளே பேச்சுவார்த்தையை குழப்ப வைத்து வெற்றியை தனதாக்கிக் கொண்டார். இது அவருக்குக் கிடைத்த சர்வதேச அங்கீகாரம். இராணுவ நடவடிக்கையை தொடர, சிங்கள குடியேற்றங்களை வலுப்படுத்த, அடுத்து வரும் தேர்தலில் வடக்கு கிழக்கில் இன்னும் அதிகமான சிங்கள எம்.பி.க்களை உருவாக்க புலிகள் ஏற்படுத்திக் கொடுத்துள்ள களம்.

## பழைய மொந்தையில் புதிய கள்

இதனைத் தொடர்ந்து, 1995 ஒகஸ்டில் சந்திரிகா அரசால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசியல் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டது. அண்மைக் காலத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு அரசியல் ஆலோசனையை முன்வைத்த ஆட்சியாளர் என்கின்ற வகையில் சந்திரிகா பாராட்டப்பட வேண்டியவர். ஆனால் பழைய மொந்தையில் புதிய கள் என்பதுதான் வேதனைக்கிடமனது.

அரசியல் தீர்வு என்பது அல்லது அதற்கான ஆலோசனைகள் என்பது தமிழ்பேசும்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கவேண்டும். தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை நிராகரித்ததன் காரணமாகத்தான் கடந்தகாலத்தில் பல ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தன; முறிவடைந்தன.

இலங்கை இந்திய ஒப்பந்தமானது அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான முட்டுக்கட்டையை ஏற்படுத்தியதால் அது நிறைவு பெற முடியவில்லை. ஆனால் வடக்கு கிழக்கு இணைப்பு, தமிழ் மொழிக்கான தேசிய அந்தஸ்து போன்ற முன்னேற்றகரமான விடயங்கள் அதில் காணப்பட்டது. இவைதான் இன்று சந்திரிகா அரசு முன்வைத்துள்ள அரசியல் ஆலோசனைகளுக்கு முன்னோடியாகவும் அமைந்தது.

ஆனால் இலங்கை இந்திய ஒப்பந்தம் மேலும் செழுமைப்படுத்தப்படுவதற்குப் பதிலாக பிரேமதாசாவின் மூன்றாந்தர அரசியலாலும், தம்மை மட்டுமே அங்கீகரிக்க வேண்டும் என்ற புலிகளின் கோட்பாட்டாலும், இருவரும் கைகோர்த்து இந்திய எதிர்ப்பு வாதத்தை முன்னிறுத்தி இலங்கை இந்திய ஒப்பந்தத்தை இல்லாதொழித்தனர்.

## திருத்திய தீர்வு திருப்தி தருவதாயில்லை

இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு அரசியல் தீர்வே சரியான வழி. அனைவரும் ஏற்கக் கூடிய ஒரு அரசியல் தீர்வு மூலம் ஆயுத அனர்த்தங்களுக்கு முடிவுகட்ட முடியும்; தமிழ், சிங்கள இனவாதிகளைப் புறந்தள்ள முடியும்; இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும்; அமைதி சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

ஆகவே இனப்பிரச்சினைத் தீர்வுக்காக ஒரு அரசியல் தீர்வோ அல்லது அரசியல் ஆலாசனைகளோ முன்வைக்கப்படும்போது, அது கடந்தகாலங்களில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள், அரசியல் ஆலோசனைகளை விட முன்னேற்றகரமானதாக, பழையனவற்றிலிருந்து திருத்தியமைக்கப்பட்டதாக, செழுமைப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். அப்போதுதான் அது தீர்வுக்கு வழிசமைக்கும் கால்கோளாக அமையும்.

ஆனால் சந்திரிகா அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள ஒகஸ்ட் ஆலோசனைகள் அந்த வகையில் அமையவில்லை. ஏற்கனவே நடைமுறையில் இருப்பனவற்றையே நிராகரித்துக் கொண்டு முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

வடக்கு கிழக்கு இணைப்பு பற்றிய மௌனம், ஒற்றையாட்சிமுறை பற்றிய குழப்பம், பிராந்திய சபைகளைக் கலைக்கும் அதிகாரம் தொடர்பான இறுக்கம், பிராந்திய முதலமைச்சர் மற்றும் மந்திரிசபையை விட அதிகாரம்கொண்ட ஆணைக் குழுக்களுக்கு மத்திய அரசுடனான நெருக்கம் போன்ற அதிமுக்கிய குறைபாடுகளை ஒகஸ்ட் ஆலோசனைகளும் அதன் பின்னால் திருத்தியமைக்கப்பட்ட அரசியல் நகல் திட்டமும் கொண்டுள்ளன. ஆக, இவை தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கப் போவதில்லை. இதன்மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படப் போவதில்லை.

## சிங்கள இனமும் சிம்மாசனமும்

ஒகஸ்ட் அரசியல் ஆலோசனைகளை செழுமைப்படுத்துவதன் மூலம் அதன் இலக்கை அடைய வைக்க முடியும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும், நாட்டு மக்களின் சுபிட்சமான எதிர்காலத்தில் அக்கறையுள்ளவர்கள் அனைவரிடமும் காணப்பட்டது. அரசியல் ஆலோசனைகள் அரசியல் நகல்திட்டமாகும்போது அது இன்னும் செழுமைப்படுத்தப்படும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.

ஆனால், ஆலோசனைகளை விட அரசியல் நகல்திட்டம் செழுமைப்படுத்தப்படுவதற்குப் பதிலாக மேலும் பலவீனமாக்கப்பட்டது. இதன் உள்நோக்கம் இனப்பிரச்சினையை வைத்து அரசியல் நடத்துவதை, மக்களின் அழிவின் மீது தமது சிம்மாசனத்தை தக்கவைத்துக் கொள்ளுதலையே இன்றைய அரசும் நோக்கமாகக் கொண்டுள்ளது புலனாகிறது.

இதுவரையில் அரசியல் ஆலோசனைகள் முன்வைக்கப்படாமல் இராணுவ நடவடிக்கைகளையும், இழுத்தடிப்பு அரசியலையும் நடாத்தியவர்கள் மத்தியில் ஒரு அரசியல் ஆலோசனையை முன்வைத்தவர் என்கின்ற அடிப்படையில் சந்திரிகா சர்வதேச அரங்கில் வித்தியாசமானவராக இனங் காணப்பட்டார். புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து அவர்களை வைத்தே குழப்பியதன் மூலம் மேலும் பிரகாசித்தார். இராணுவத் தீர்வின் மூலமான சமாதானம் என்ற கோஷத்தின் மூலம் சர்வதேச உதவிகளைப் பெற்றார். ஆனால் சிங்கள இனவாதிகள் குழப்புகிறார்கள். நான் சிங்கள மக்களையும் திருப்திப்படுத்த கடமைப்பட்டுள்ளேன் என்கிற பாணியில் நடந்து கொள்கிறார்.

## வரலாற்றைப் படைப்பதா? பதவியைப் பிடிப்பதா?

சிங்கள மக்களில் பெரும்பான்மையானவர்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர் இனவாதிகளின் ஒப்பாரிகளை ஓரங்கட்டிவிட்டு, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம் நாட்டில் அமைதி சமாதானத்தை ஏற்படுத்தல் என்பதற்காக ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்து ஜனநாயக ஆணையை வழங்கி இருக்கிறார்கள்.அப்படியிருக்க இனவாதிகளைக் காரணம் காட்டுவது நியாயமானதல்ல.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதுதான் மக்களுக்குத் திருப்தியானது என்பதனை சந்திரிகா குமாரதுங்க புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையில் இனவாதத்தை அழித்து,. இனப்பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய, அரசியல் தீர்வை முன்வைக்கவல்ல, ஒரு துணிச்சலான அரசியல் திராணியுள்ள தலைவராகத்தான் சந்திரிகாவை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அவர் வரலாற்று நாயகியாகச் சாதிப்பாரா? அல்லது ஏனையோரைப்போல் வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயங்களையே எழுதுவாரா என்பதனை அவர் தீர்மானிக்க வேண்டிய காலகட்டமிது.

கோரமில்லாததால் கூடமுடியாத பாராளுமன்றத் தெரிவுக்குழுவுடன் கட்டி அழுவதை விடுத்து தமிழ் முஸ்லீம் அரசியல் கட்சிகளுடனும், ஒற்றையாட்சி முறையற்ற ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்க விரும்பும் தென்னிலங்கை கட்சிகளுடனும் சந்திரிகா நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த இதய சுத்தியுடன் முன்வரவேண்டும்.

ஆயிரத்து தொளாயிரம் கோடி ரூபா 1997ம் ஆண்டுக்கான பாதுகாப்பு நிதியாக ஒதுக்குவதை விட அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வாக தனது ஒகஸ்ட் ஆலோசனைகளை திருத்தி அமைப்பதன் மூலமே தனக்குக் கிடைத்துள்ள மக்கள் அங்கீகாரம் மற்றும் சர்வதேச அங்கீகாரத்தை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள முடியும்.

## எப்போதும் சொதப்பும் எதிர்க் கட்சி ஏமாற்று

ஒரு நாட்டின் இக்கட்டான காலகட்டத்தில் தாம் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்பதனை மறந்து பொறுப்பான தேசியத் தலைவர்கள் என்பதனை நிரூபிக்கும் வகையில் நடந்து கொள்ளும் பண்பு அரசியல் தலைவர்களுக்கு வேண்டும். அப்போதுதான் அந்த நாடு சுபிட்சமடையும்.

ஆனால் ஆளுங்கட்சி கொண்டுவரும் எந்த நடவடிக்கைகளையும் (அது நல்லதோ கெட்டதோ) கண்ணை மூடிக்கொண்டு எதிர்ப்பதுதான் எதிர்க்கட்சி என்னும் அரசியல் பாரம்பரியத்தை இலங்கை கொண்டுள்ளது எமது அரசியல் நாகரீகத்தை படம்பிடித்துக் காட்டுகிறது.

ஆளுங்கட்சியிலிருப்பவர்களின் நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவு அளித்தால் அவர்களையே மக்கள் ஆட்சியில் அமர்த்துவார்கள். இதனால் நாம் நாட்டை ஆளமுடியாமல்போய்விடும் என்ற தப்பான பய உணர்வு அரசியல் தலைவர்களிடம் ஆழமாகப் பதிந்து உள்ளதனாலேயே இந்த நாட்டில் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது.

இன்றுகூட இத்தனை இழப்புக்களுக்குப் பின்பும் நேர்மைத் திறன் இன்றி, தமது ஆதரவாளர்கள் அரசாங்கத்தால் தாக்கப்படுகிறார்கள் என்று அர்த்தமற்ற காரணத்திற்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவிலிருந்து விலகுகிறோம் என பூச்சாண்டி காட்டி தமது தேசியக் கடமையை

> "அரசியல் சதுரங்க ஆட்டத்தில் தனது பக்க நியாயாதிக்கங்களை நாகரீகமாக நிறுவுவதென்பதானது சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு பெருவெற்றியாகும். அரசியலில் ஈடுபடும் ஒவ்வொரு தலைவரும் அதனை நிறுவும் தகைமையை வெளிப்படுத்துவதனைக் கொண்டுதான் அரசியல் அங்கீகாரத்தைப் பெற்றவராகிறார்."

படிப்பகம்

www.padippakam.com



கைகழுவி விடுவது என்பது ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் பொறுப்பற்ற மாபெரும் வரலாற்றுத் துரோகமாகும். இத்தனைக்குப் பின்பும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தமிழ் பேசும் மக்களுக்காக உழைக்கிறோம் என்று கூறிக்கொள்ளும் தமிழ், முஸ்லீம் உறுப்பினர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளப் போகிறார்களா??

## என்றும் மறக்க முடியாத ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஐம்பதாவது ஆண்டு விழாவில் ரணில் விக்கிரமசிங்க பலருக்கு விருதுகள் வழங்கினார். அதில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனாவுக்கு அளிக்கப்பட்ட விருது சாலவும் பொருத்தமானதாகும். ஏனெனில், இந்த நாட்டில் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் காரணமாயிருக்க ஜே.ஆர். காரணமானவர்.

27.5.1970இல் நடைபெற்ற ஏழாவது பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி 1876956 வாக்குகளைப் பெற்று 17 ஆசனங்களையே பெற்றது. ஆனால் ஸ்ரீ.ல. சு.கட்சி 1812849 வாக்குகளைப் பெற்று 90 ஆசனங்களைப் பெற்றதோடு ஐக்கிய சோசலிசமுன்னணி என்னும் கூட்டமைப்பின் மூலம் ஆட்சி அமைத்தது.

இதனால் துவண்டு போன ஜே.ஆர். ஏழாண்டுகளும் அல்லும் பகலும்அயராது தனது கட்சிக்காக உழைத்தார். பஞ்சசீலக் கொள்கை ஒன்றை முன்வைத்து வீடு வீடாக ஏறி இறங்கினார். அதன் பலன் 21.07.1977இல் நடைபெற்ற எட்டாவது பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 3179221 வாக்குகள் பெற்று 140 ஆசனங்களைக் கைப்பற்றியது.

தனது தலைமையில் 1970இல் பெற்ற தோல்வியை ஐக்கிய தேசியக் கட்சி இனிவருங் காலங்களில் எப்போதுமே பெறக்கூடாது என்பதற்காக தனது ஆட்சிக் காலத்தில் பெரும்பான்மைத் தேர்தல் முறையை (தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம்) நீக்கி விகிதாசாரத் தேர்தல் முறையைக் கொண்டு வந்தார்.

இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சியாக இருந்தாலும் அதிக பலத்தைக் கொண்டிருக்கும். ஆகவே இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசியல் அமைப்பை மாற்றும் தேவை பாராளுமன்றத்துக்கு வரும்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு தேவை. ஐக்கிய தேசியக்கட்சி எதிர்த்து வாக்களித்தால் இனப்பிரச்சினை தீராது.

சுதந்திரக்கட்சி எதிர்க்கட்சியாக இருந்தாலும் எதிர்த்தே வாக்களிக்கும். அல்லது தனது எதிர்ப்பைக் காட்டும். (1987இல் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்த மாகாணசபையை சுதந்திரக்கட்சி எதிர்த்தது.)

ஆக, இனிவரும் காலங்களில் பாராளுமன்றத்தினூடாக இனப்பிரச்சினை தீர்த்துவைக்கப்படும் வாய்ப்புகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

தென்னிலங்கை தேசியக் கட்சிகளுக்கு இனப்பிரச்சினையை தீர்ப்பதில் எந்தஅளவு பொறுப்பு உள்ளதோ-அதனைவிட நூறு மடங்கு வரலாற்றுப் பொறுப்பும், நெஞ்சுறுதியும் நேர்மைத் திறனும் தமிழ், முஸ்லீம் அரசியல் கட்சிகளுக்கு வேண்டும். அவர்களின் ஒற்றுமையற்ற தன்மையும், உதட்டில் ஒற்றுமையும் உள்ளத்தில் இந்த ஆட்சியில் எந்த அளவு சம்பாதிக்கலாம் அல்லது எப்படி எமது கட்சியை முதன்மைப்படுத்தலாம் என்னும் சுயநலப்போக்கும் தமிழ் பேசும் மக்களை இன்னும் இன்னும் அழிவுக்கே கொண்டு செல்லும்.


## இரண்டு பக்கத்திலும்... தேவை சிறந்த தலைமை

இனப்பிரச்சினையைத் தீர்க்க வல்ல துணிச்சலுள்ள ஒரு அரசியல் தலைவர் எப்படி இந்த நாட்டுக்குத் தேவையோ அதேபோல் தேசியக் கடமையை நிறைவேற்ற அரசுக்க நிபந்தனையற்ற ஆதரவு வழங்க முன்வரும் ஒரு எதிர்க்கட்சித் தலைவரும் இந்த நாட்டுக்கு தேவை. அதேபோல் தமிழ் பேசும் மக்களை வழிநடத்தக் கூடிய, இனவாதிகளை எதிர்த்து நிற்கக் கூடிய, நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு வழங்கி நியாயமற்றவைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடிய, இனப்பிரச்சினையை சரியாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒரு சரியான தமிழ் தலைமை தேவை.

பாராளுமன்றத்தை நல்லதோர் அரசியல் களமாகப் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களின் நியாயாதிக்கங்களை நிறுவ வல்ல செல்வநாயகம், அமிர்தலிங்கம், யோகசங்கரி, பிரேமச்சந்திரன் போன்ற தமிழ் பாராளுமன்றவாதிகள் தேவை.

இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு இந்த அரசியல் வெற்றிடங்களே காரணமாகின்றன. இந்த அரசியல் வெற்றிடங்கள் ஒருமித்து நிரப்பப்படாதவரை இனப்பிரச்சினை தீர்க்கப்படப் போவதில்லை. நாட்டில் அமைதி சமாதானமும் சகஜவாழ்வும் ஏற்படப் போவதில்லை என்பதே வரலாறு எமக்கு உணர்த்தியுள்ள உண்மையாகும்.

# குறுக்கெழுத்துப் போட்டி-30



### இடமிருந்து வலம்

1. இலங்கை வந்து சென்ற அயல்நாட்டு வெளியுறவு அமைச்சர்.
4. பிரிக்கப்படக் கூடிய சொல்.
8. உயிரற்ற பொருள்.
9. பூமி. (தலைகீழ்)
10. ராகம் பாடாதே.... இது கலாசாரம்.
11. காலை எழுந்து பலரும் அலுத்துக்கொண்டே செல்லுமிடம். சிலசமயம் வேலை செய்யவும் ஏற்பட்ட இடம்.
13. கிராமமும் அதைவிடச் சிறிய ஊரும். இங்கெல்லாம் புகழ் பெற்றுவிட்டால் அவர் பிரபலம்தான். (குழம்பி)
15. வீடுவரை உறவு, வீதிவரை மனைவி, காடுவரை பிள்ளை, ---வரை யாரோ? (தலைகீழ்)
16. வெற்றியா? மரமா?
17. சோளப்பொரி மத்தியிலே சுட்டு வச்ச தோசையைப் போல் தோணுதிந்தச் சோதி --.
18. பொங்கலுக்கு முதல் நாள் கொண்டாடும் பண்டிகை.
19. 'ம்' சேர்த்தால் தரையாகும்; 'ர்' சேர்த்தால் நெகிழ்வாகும்; 'பதி' சேர்த்தால் படைத் தலைவர்.
20. யானை.
21. மரத்தில் பொருள்கள் செய்யும் வேலை.
22. ரகுபதி ராகவ ராஜா--.
23. கடையெழுத்தில்லையேல்-வாயில்; நடு எழுத்தில்லையேல்-சாவில்; மூன்றெழுத்தில் இவர்-சுவரில். (த.கீ)
24. தண்டனைக்குப் பயன்படுத்தும் சவுக்கு.
25. கூட்டாக இல்லாமல் பிரிந்து. (தலைகீழ்)
27. திடீர்த் தாக்குதல்களுக்கென விசேடமாகப் பயிற்சி அளிக்கப்பட்ட குழு.
30. விக்கிரகம். கவிதையில் காட்சிப்படுத்தும் உத்தி.
31. கூசாமல் பொய் சொல்பவன்.

### மேலிருந்து கீழ்

1. குடம்; குவியல்; பதினோராவது ராசி.
2. அரசர்கள் செல்லும் வீதி.
3. சரியான அளவும் திண்மையுமான தேகம். (தலைகீழ்)
5. எட்டுத்தொகை நூல்களில் ஒன்று; குறுகிய பாடல்களின் தொகுப்பு.
6. அச்சம் ---. ஆண்மை தவறேல்.
7. முன்னால் 'வ' சேர்த்தால் வீண் தகராறு.
11. இலக்கின்றிப் பாய்ந்தது குதிரையின் குற்றமானாலும் இதைப் போடாதது நமது குற்றமே.
12. ஒரு ராகம். நாதஸ்வரத்தில் ராஜரத்தினம்பிள்ளை வாசித்துக் கேட்க வேண்டும் என்பார்கள்.
14. மற்றுமொரு ராகம்.
15. மருத்துவம்.
17. "இதை நீ தொடருகிற வரையில் இது உன் முன்னால் தான் போய்க் கொண்டிருக்கும்! திரும்பி விடு. இது உன்னைத் [illegible]
18. உபதேசம் செய்பவர்.
19. குறைநிறைகளின் அடிப்படையிலான மதிப்பு.
20. நம்மைப் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொள்பவர்கள், நமது அழிவுக்குக் காரணமாகி விடும்போது, பயிரை மேய்ந்த இதன் கதைதான் ஞாபகத்தில் வரும்.
25. அண்ணி. (தலைகீழ்)
26. குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டியதும்; எந்தக் காரியத்தையும் செய்துமுடிக்கத் தேவையானதும்; எச்சிலை வெளியே தள்ளவும்.
27. இது உதவுகிறது போல அண்ணன் தம்பியாலும் உதவ முடியாது.
28. சுமை.
29. பல பொருட்களும் விற்கப்படும் நிலையம். '-- விரித்தேன் கொள்வாரில்லை' என்று வருத்தப்பட்டார் இராமலிங்க வள்ளலார். (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப் போட்டி-29 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. முல்லைத்தீவு | 1. முசலி |
| 5. பரிசு | 2. வால் |
| 8. சவால் | 3. எல்லை |
| 9. சோழகம் | 4. தீபகற்பம் |
| 10. எமகண்டம் | 5. பழம் |
| 14. கற்பனை | 6. கரி |
| 15. ஆடு | 7. சும்மாடு |
| 16. பத்திரிகை | 9. சோடனை |
| 17. நாசி | 11. மகத்துவம் |
| 18. காலி | 12. பண் |
| 19. தும்மல் | 13. பரிகாசம் |
| 22. பரி 24. வசதி | 15. ஆசிரியர் |
| 26. திரவியம் | 16. கைலி |
| 28. அம்மம்மா | 20. மதி 21. விரல் |
| 30. வியர்வை | 23. வைபவம் |
| 31. துறை | 25. நிம்மதி |
| 33. சந்நிதி | 27. வியப்பு 28. அசதி |
| 34. அம்புலி | 29. மாது 32. அறை |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**பவானி ராஜசுந்தரம், கிஜம்பட்டா தெரு, கொழும்பு 13.**

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:**

1. ப. ரிசிகுலசிங்கம், 61, சிவன்கோவில் வீதி, தோணிக்கல்.
2. மூர்த்தி சுகிலாசனா, மங்கிகட்டு, நாவற்காடு, மட்டக்களப்பு.
3. பிரசாந்தினி வசந்தானந்தம், 55, கண்டி வீதி, திருகோணமலை.
4. வி. ஞானமுருகன், 93, பஸ் நிலையம், வவுனியா.
5. எஸ். ரஞ்சனி, 881/1, ஸ்டேசன் ரோட், ஹுனுப்பிட்டிய.
6. த. சிறீதரன், வெயிலி குறுக்கு வீதி, மட்டக்களப்பு.
7. கு. நமணி, பண்டாரி குளம், வவுனியா.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 20ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

# அன்புடன் புலி நண்பனுக்கு....

(6ம் பக்கத் தொடர்ச்சி)

என்று எடைபோட மறந்து உடன்பிறப்புக்களையே ஈவிரக்கம் இல்லாமல் தமிழ் ஈழ வீதியில் சுட்டு அரை உயிருடன் கொளுத்துவதை தலைமை தாங்கி நடத்தினாய். உனது உள்ளூர் இயக்க சண்டியர்கள் வானொலிக் கருவியை கையில் ஏந்தி ரம்போ பாணியில் தெருச்சந்திகளில் நின்றார்கள். அவர்களுக்கு துணையாகச் சிலர் சந்திகளில் நின்று சிற்றுண்டிகளையும் வழங்கி சண்டியர்களை உற்சாகப்படுத்தினார்கள். நீ அன்று நினைத்து இருப்பாய், இயக்க அழிப்புக்கு மக்கள் எங்களுக்குத் துணை நிற்கிறார்கள் என்று மகிழ்ந்திருப்பாய்.

எனக்கு பெரும் அதிர்ச்சி என்னவென்றால் அந்நேரம் உனது தலைமையிலேயே என்னைத் தேடி விடுவது எனக்கு முன்பு அறியாத குற்றச்சாட்டுக்களை தெரிவித்துச் சென்றது. உனது தலைமை எவ்வளவு தூரம் மூளைச்சலவை செய்து இருக்கிறது என்பது விளங்கியது. உனது இயக்கத்தின் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளால் எத்தனை போராளிகள் கொழும்பிலும் இந்தியாவிலும் எதிர்காலம் என்ன என்று தெரியாது திரிந்தார்கள் என்பது உனக்கு அறிந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்திராது.

உன் இயக்கம் தனித்து நிற்பதைக்கண்ட இலங்கை அரசு நல்ல தருணத்தை நழுவவிடாமல் பெருந்தொகை இராணுவத்துடன் மும்முனைத் தாக்குதல் நடாத்தி வடமராட்சியைப் பிடித்துவிட்டார்கள். மக்கள் வடமராட்சியைவிட்டுவெளியேறினார்கள். அந்நேரம் இந்தியா வராதா என்றே நீ உட்பட மக்கள் எல்லோரும் எதிர்பார்த்தோம்.

இந்தியாவை எதிர்ப்பது உனது இயக்கத்துக்கும் ஆபத்து என உனது தலைமை உணர்ந்துகொண்டு இந்தியன் ஆமி காமண்டர்களை மாலையிட்டு ஆரத்தி எடுத்து வரவேற்றார்கள். பின்னர் நடைமுறைக்கு ஒவ்வாத கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கினீர்கள். இந்தியன் ஆமியை தாக்கி அமைதிப்படையை எதிரிப்படை ஆக்கினீர்கள். பிறகு படுகொலை செய்யும் படையாகவும் மாற்றிவிட்டீர்கள்.

உலகில் எமக்காகக் குரல் கொடுக்கும் நாடான இந்தியாவின்தலைவரைக் கொன்று, தமிழ்மக்களை கேட்பதற்குஆளில்லாத நிலைமை உண்டுபண்ணினீர்கள். யாழ்ப்பாண தனியார்சிக்கலத்தில் என்ன செய்தீர்கள்? எதுக்கெடுத்தாலும் அடி உதை போதாததுக்கு வரி, பாஸ், இப்படி காட்டாட்சி செய்தீர்கள்.

உங்களை இந்த நிலைமைக்கு கொண்டுவந்தமைக்கு வெளிநாட்டு ஆதரவாளர்களையும் குறிப்பிட்டேயாக வேண்டும். இவர்களுக்கு நாட்டு பிரச்சினையோ, சமாதானமோ, ஏற்படுவது இதயபூர்வமான விருப்பம் கிடையாது, அப்படி ஏற்பட்டால் தங்களை அந்த நாடு விசேட சட்டம் இயற்றி வெளியேற்றி விடுவார்கள் என்ற பயத்தினால் உனது இயக்கத்தை வளர்ப்பதற்கு பெருந்தொகை பணம் தருவார்கள். இவர்கள் எரிகிற வீட்டில் கொள்ளிபிடுங்கும் கூட்டத்தினர். வெளிநாட்டு தமிழ் பத்திரிகையாளர்களையும் குறிப்பிட்டேயாக வேண்டும். தங்கள் பிள்ளைகள் வீடுகளில் நவீன கம்யூட்டர் முறையில் விளையாட தமிழ் ஈழ பிள்ளைகள் சயிக்கிள் டைனமோவில் ரேடியோ கேட்பதையும் மெழுகுதிரியில் படிப்பதையும் பனங்களியில் உடுப்பு தோய்ப்பதையும் புகழ்ந்து எழுதி தங்கள் அறிவு மேதாவித்தனத்தை தெரிவித்து பத்திரிகை சுதந்திரத்தை குழிதோண்டி புதைக்கிறார்கள். செய்திகளை திரித்து வெளியிடுகிறார்கள்.

எனது தவறாக போராட்ட நடவடிக்கைகளினால் எத்தனை தமிழ்மக்கள் உலகின் தெருவீதிகளில் அலைந்து திரிகிறார்கள் முன்பு அறியாத கலை கலாசாரத்துடனும், வெளிநாட்டவரின் மிரட்டல்களினாலும் வதிவிட அனுமதிப்பத்திரம் மறுக்கப்பட்டவர்கள், விமான கடத்தலில் அகப்பட்டு இறந்தவர்கள், ஆள்கடத்தல் ஏஜென்சிகளின் காமவெறிக்கு பலியான இளம் பெண்கள்.... இப்படி எத்தனை சம்பவங்கள்....

நான் மேலே சொன்னவை வேதவாக்கு அல்ல நடைமுறையில் அனுபவித்தவை. இவ்வளவு கால போராட்ட வெற்றி தோல்விகள் உனக்குப் பாடமாக அமைந்து இருக்கும் என நம்புகின்றேன். உனது இயக்கம் இவ்வளவு காலம் சிந்திய ரத்தம் வரலாற்றில் எழுதப்பட வேண்டும் என்றால், மேலும் உனது இறந்த போராளிகள் நாமம் நிலைக்க வேண்டும் என்றால் நீ சிந்திய வியர்வை பிரயோசனப்பட வேண்டும் என்றால் போராட்டத்தில் மாறுதல் நடவடிக்கை ஏற்படுத்த உன் தலைமையிடம் வற்புறுத்த வேண்டும். இல்லையேல் வரலாறு உன்னையும் உன் இயக்கத்தையும் மன்னிக்க மாட்டாது.


இக்கடிதத்தை படிக்கும்சந்தர்ப்பம் உனக்கு கிடைக்குமோ தெரியவில்லை. உனது நண்பர்களில் யாராவது பார்த்துக் கருத்தில் எடுத்துக் கொண்டாலும் போதும் என்று கருதுகிறேன்.

*- அன்புடன், செண்பகன், பிரான்ஸ்*

படிப்பகம்

www.padippakam.com






# சுவைத்திரளின் பொங்கல் கவியரங்கு

கடந்த சில வருடங்களாக கலை இலக்கியத் துறையில் குறிப்பாக மன்னாரில் ஒரு தேக்க நிலை இருந்து வந்தது. சமீப காலங்களில் பல கலை நிகழ்வுகளும் கவியரங்குகளும் நடைபெற்று வருவது ஓரளவு அமைதியைத் தருகின்றது. கடந்தவாரம் மட்டக்களப்பில் இருந்து வெளிவரும் 'சுவைத்திரள்' நகைச்சுவை ஏடு 'பொங்குமா இந்தப் பொங்கல்?' என்ற தலைப்பில் ஒரு கவியரங்கு ஒன்றினை மன்னார் நகர மண்டபத்தில் நடத்தியது. எட்டுக் கவிஞர்கள் கலந்துகொண்டனர். 'சுவைத்திரள்' ஆசிரியர் 'திக்கவயல் தர்மு'வின் தலைமையில் நடைபெற்ற இக் கவியரங்கில் கவிஞர்கள் மரியதாஸ், மாந்தையூர் தாஸ், ரத்தினசிங்கம், புலவர் திருநாவுக்கரசு, மன்னார் மயூரி, செல்வக்குமரன், மிராண்டா கதிர்காமத்தம்பி, நடராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கவியரங்கில் கலந்து கொண்ட திக்கவயல் தர்முவின் கவிதையை இங்கு தருகின்றோம்.

## பொங்குமோ இந்தப் பொங்கல்?

குண்டுசி தானும் செய்ய வழியறியோம்
சுட இருப்போரைக் கொன்றிடுவோம்
கடல்நடுவே இருந்து கொண்டு
டின்மீன்கள் இறக்கிடுவோம்...
ஐம்பது பேர் ரயில் மோதி இறந்த பின்பு
கேற் கடவை சாத்திடுவோம்...
ரயில் அமைச்சர் யார் என்று கேட்டு
விசாரணைக்கு ஆள் பிடிப்போம்
பாதாளமலையில் நூற்றொருவர்
இறந்த பின்னால்
விசாரணைகள் நடாத்தி
'ஓவர்லோட்' இது என்போம்.
மகாவலியை ஓட வைத்து
வடிகட்டிய நீரையும் போத்திலில்
இறக்கி வைப்போம்...
பொங்கல் பானை பொங்கையிலே
'ஷெல்' அடித்து விழுத்திடுவோம்
உலகத்தின் முழுமூடர் நாம் என்று
உலகினுக்கு உரைத்து வைப்போம்
போனது பார்... 96
வந்ததடா... 97

கற்பிட்டி வழியாக மன்னார்க்கு
ஒரு சேவை...
போகவர 400
மரக்காயர் லொட்சுக்கு
வேறு பணம்
கச்சேரி நலன்புரியும்
அங்கு ஓர் கொட்டில் வைத்து
ஆள் பிடிக்கும் 50 ரூபா
நாம் வெந்து மாண்டாலும்
பல நாட்கள் போக வழியின்றிக்
குந்தி இருந்தாலும் கடன் இல்லை!
இப்படியும் ஒரு நிலை எங்களுக்கு!



அல்விஸ் ஐயா மறித்து விட்டால்
அடுத்த ஊர்க்குப் பயணம் இல்லை.
போகும் வழி தூரம் என்றால்
மயில் காசு பறந்துபோகம்.
சமாளிக்க என்ன வழி?
நண்பனையே கேட்டு வைத்தேன்!

2 போத்தில் சாராயம் மடக்கி வைத்துக்
கொண்டு போனால்
இறங்குமிடம் நல்ல விலை
இருநூறு பறந்து வரும்!
போற காசு சும்மா வரும்
என்று அவர் சொல்லி வைத்தார்

விலை கூட்டி விற்றால்
பிடிக்கும் ஒரு உத்தியோகம்
நானும் அதைச் செய்துவிட்டால்
நாலு சனம் ஊர் சிரிக்கும்
இந்த வேலை எனக்கு வேண்டாம்
வேறு வழி சொல்லு என
நண்பனையே கேட்டு வைத்தேன்!

பத்துக் கிலோ வெங்காயம்
பாங்காகக் கட்டிவைத்தால்
முத்தாக முன்னூறு மன்னாரில்
தேறிவரும்...
ஆனைமடுத் தேசிக்காய்
கப்பலிலே போட்டுவிட்டால்
நேவிக்காரன் பேசமாட்டான்
போட்டிடுவாய் என்றுரைத்தான்
அப்பாவி நண்பனவன்...!

பாரம் அது அதிகமானால்
பார்த்த மக்கள் சிரித்திடுவார்
கச்சேரி ஐயாவும் கமக்கட்டு பிஸ்னசோ?
என்றுரைத்துக் கேலி செய்வான்
வேறுவழி உண்டானால்
சொல்லென்று கூறி வைத்தேன்!

Shopping Bag கொண்டுபோனால்
கொள்ளைலாபம் அடித்திடலாம்
போறவாற செலவு போக
மிச்சக் காசும் புரண்டு வரும்
என்று சொன்னான்
அப்பாவி மகன்...!

பிரிகேடியர் பாஸ் இன்றி இதுவும்
ஒரு பிஸ்னசோ?
கம்பி எண்ணி முடிஞ்சு போச்சு!
இனியும் ஏன் கம்பி எண்ணல்?
வேறு வழி சொல்லென்று
பொங்கல் போலச் சிரித்து நின்றேன்.

கொல் என்று சிரித்துவிட்டு
நண்பன் அவன் சொல்லி வைத்தான்
தங்கூசி, தூண்டில் கப்பலில்
கொண்டு சென்றால்
குதிரைமலை வந்தபோது
வீசியே பிடித்திடலாம்
அருட்டாமல் அதிகலாபம்
புரட்டாமல் பிடித்திடலாம்
மேல் 'டெக்'கில் இருந்துவிட்டால்
சனங்களுக்கும் தெரியாது
என்றுரைத்துச் சிரிக்கையிலே
பொங்கல் பானை கவிழ்வது
போல் மனம்உடைந்து சிரித்து விட்டேன்!
பொங்குமா இந்தப் பொங்கல்
படித்த நீங்கள் எண்ணிப் பாரீர்!

நாற்பது சென்றி தாண்டி
மட்டுநகர் அடையும்போது
வீட்டருகில் ஒரு சென்றி
அவன் கேட்பான் அடையாளம்
இப்படியும் ஒரு பொங்கல்
பொங்கிடுவோம் இந்தப் பொங்கல்.

## இந்திய-இலங்கை ஒப்பந்தம்....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பாலஸ்தீன-இஸ்ரேல் ஒப்பந்தம் சேர்பிய-பொஸ்னிய பிரச்சினைக்கான தீர்வு, இவற்றிற்கு மத்தியஸ்தம் வகித்த அதாவது பொறுப்பு ஏற்றுக்கொண்ட அமெரிக்காவின் பலத்தில்தான் இன்னும் இந்த ஒப்பந்தங்கள் தாக்குப்பிடித்துக் கொண்டிருக்கின்றன. சீர்குலைப்பதற்கு ஆங்காங்கே வன்செயல்கள் முட்டுக்கட்டையாக இருந்தாலும் அமெரிக்காவின் உறுதிப்பாட்டில் பாதுகாக்கப்படுகின்றன.

அமெரிக்காவின் அயல்நாட்டுக் கொள்கையில் குறைபாடுகள் இருந்தாலும் அவர்கள் எடுக்கும் உறுதியான சில முடிவுகளால் சிக்கல்கள் நிறைந்த சில நாட்டுப் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. உதாரணத்திற்கு இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினை.

ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடும்போது விரும்பத்தகாத விபரீதங்களும், சங்கடங்களும் மத்தியஸ்தம் வகிக்கும் நாடு எதிர்நோக்க வேண்டிவரும் என்பது உண்மை. அந்த எதிர்விளைவுகளை சமாளித்து இடையில் கைகழுவி விடாமல் ஏற்றுக்கொண்ட பொறுப்பைச் சரியாக செய்து முடித்து வெற்றி கண்டால்தான் மத்தியஸ்தம் என்பதற்கு ஒரு மதிப்பும் அந்த மதிப்பில் அந்த நாட்டிற்குப் பெருமையும் தேடிவரும்.

ராஜீவ்காந்தி இந்திய நாட்டின் பிரதமராக இருந்தபோது அவரால் இந்திய இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. இந்திய தேசத்தின் மத்தியஸ்தம் உலகெங்கும் அறிவிக்கப்பட்டது. உலகின் பெரும்பான்மை நாடுகள் இதை ஏற்றுக் கொண்டன. இந்தியாவுக்கும் உலக அரங்கில் பெருமை கிடைத்தது.

இந்தியாவின் அயல்நாடடுக் கொள்கையில் இந்திய இலங்கை ஒப்பந்தம் ஒரு மைல்கல் என்று பத்திரிகைகளாலும் படித்தவர்களாலும் பாராட்டப்பட்டது. ஆனால் ராஜீவ் காந்தியின் மறைவிற்குப் பிறகு இந்திய தேசத்தின் ஆட்சியாளர்கள் இந்த ஒப்பந்தத்தை மறந்தே விட்டார்கள்.

ராஜீவ் காந்தி அவர்கள் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட காரணத்திற்காக அவரால் உருவாக்கப்பட்ட ஒப்பந்தத்தை இந்திய அரசு கண்டு கொள்ளாமல் கைவிட்டது என்பது இலங்கைப் பிரச்சினையில் இந்திய இராஜதந்திரத்தின் தோல்வியும், உலக அரங்கில் அதன் மதிப்பும் இழக்கப்பட்டது என்பதே உண்மை.

இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசின் இயலாமையும், இரண்டு வருடங்களின் முன் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றமும் இலங்கைத் தமிழர்களைக் குறிப்பாக வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களை இன்னும் மோசமான நிலைக்கே கொண்டுபோய் விட்டிருக்கிறது.

இலங்கையின் ஆட்சி மாற்றத்தில் பதவிக்குவந்த சந்திரிகா அவர்கள் நடந்து முடிந்த இந்திய இலங்கை ஒப்பந்தம் சம்பந்தமாக இந்திய அரசிடம் ஒரு வார்த்தை கலந்து ஆலோசிக்காமல் தமிழ் மக்களின் பிரச்சினையை தானே பேசித் தீர்க்கப் போவதாக உலகுக்கு அறிவித்தார். இதன் அடிப்படையில், அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்று ஒரு பொதியைக் (Package) கொண்டு வந்தார். அதுவும் இரண்டு வருடங்களாகக் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது.

Package என்றால் ஆங்கிலத்தில் இன்னும் பல அர்த்தங்கள் உண்டு. பண்டல். புரியவில்லை! அதுதான் (சிப்பம், காகிதக் கட்டு, பார்சல், மூட்டை) அந்த அரசியல் தீர்வென்ற காகிதக் கட்டைப் பார்சலாக மூட்டையில் கட்டிவைத்து ரொம்ப நாளாகிவிட்டது.

வடகிழக்கில் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இராணுவ வெற்றிகள் கிடைக்கும் போது சந்திரிகா அவர்களுக்கு இந்த Package இன் ஞாபகம் வந்துவிடும். "எனது அரசுக்கு இராணுவத் தீர்வில் நம்பிக்கையில்லை. அரசியல் தீர்வே சாத்தியமானது" என்று அவ்வப்போது இந்த பக்கேஜை தூசி தட்டி அடுத்த ஜனாதிபதி தேர்தல்வரை இழுத்துக்கொண்டு போனால், சிங்கள மக்களை திருப்திப் படுத்தின மாதிரியும், தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க தனது பதவிக்காலம் வரை போராடின மாதிரியும் இருக்கும். தமிழ் மக்களின் தீர்விற்கு ஒரு Pact (ஒப்பந்தம்)ஐ கொண்டுவராமல் Package (காகிதக்கட்டு)ஐக் கொண்டு வந்ததன் அர்த்தம் இந்தியாவுக்கும் மற்றும் உலக நாடுகளுக்கும் புரிந்தால் சரி.

வடகிழக்கில் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இராணுவ வெற்றிகள் கிடைக்கும்போது சந்திரிகா அவர்களுக்கு இந்த Package ஞாபகம் வந்துவிடும். "எனது அரசுக்கு இராணுவத் தீர்வில் நம்பிக்கையில்லை. அரசியல் தீர்வே சாத்தியமானது" என்று அவ்வப்போது இந்த பக்கேஜை தூசி தட்டி அடுத்த ஜனாதிபதி தேர்தல்வரை இழுத்துக்கொண்டு போனால், சிங்கள மக்களை திருப்திப்படுத்தின மாதிரியும், தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க தனது பதவிக்காலம் வரை போராடின மாதிரியும் இருக்கும்.... பிறகென்ன?



வடகிழக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் கொடூரமானதும் மிகவும் கீழ்த்தரமானதுமான பெண்களுக்கு எதிரான இராணுவ அத்துமீறல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கிருசாந்தி சம்பவம் போல இன்று யாழ்ப்பாணத்தில் சாதாரணமாக நடந்துகொண்டிருக்கும் இந்த கொடூர சம்பவங்களால் அதிகமாகப் பாதிக்கப்படுவது பெண்களாகத்தான் இருக்கிறார்கள்.

யாழ்குடாநாட்டின் பெரும்பகுதி இராணுவச் சிறைச்சாலை போல் இருக்கும்போது அவர்களால் கட்டவிழ்த்து விடப்படும் கொலை, கற்பழிப்பு, ஆட்கடத்தல், அடையாளம் தெரியாமல் உடல்களை அழித்தல் போன்ற சம்பவங்களைத் தடுத்து நிறுத்த முடியாது. தமிழர்களுக்கு எதிரான எண்ணத்துடன் திரட்டப்படும் இந்த சிங்கள இராணுவத்திடமிருந்து தர்மத்தை எதிர்பார்க்க முடியாது.

ஆகவேதான் இந்த மனித உரிமை மீறல்களை உடினடி வேலையாகத் தடுத்து நிறுத்த இந்தியாவும் உலகநாடுகளும் முன்வர வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிடவும் வேண்டும்.




## தருமு சிவராம்

*"நான் என்னையே தேடிச் செல்கிறேன். இந்த தேடலில்தான் என்னுடைய சாராம்சம் உள்ளது. தேடலின்போது நான் நடந்து செல்லும் பாதை கவிதையினுடையது"* – பிருமிள்.

அஜித் ராம் பிரேமிள். தர்மோ ஜீவராமு என்றெல்லாம் பெயர்களை வைத்துக்கொண்ட தருமு சிவராமு தமிழின் முதல் படிமக் கவிஞர் என்று பேர் பெற்றவர். "பிரமிளின் படிமவியல் 2000 வருட தமிழ்க் கவிதைச் சரித்திரத்தில் புதுமையானது" என்கிறார் சி.சு.செல்லப்பா. பிரமிளைத் தமிழிலக்கியத்தில் ஒரு மாமேதை என்று குறிப்பிட்டிருக்கிறார் தி.ஜானகிராமன். கண்ணாடியுள்ளிருந்து, கைப்பிடியளவு கடல், மேல்நோக்கிய பயணம் ஆகிய இவரது கவிதைத் தொகுப்புகள் வெளிவந்திருக்கின்றன. சிறந்த தொரு மொழிபெயர்ப்பாளரும் கூட. அறிவுலக ஆய்விலும் அக உலக ஆய்விலும் இவர் கொண்டிருந்த தீவிரமும் கவனத்துக்குரியதுதான். இவரது 'ஊனம்' என்ற கவிதை இப்படிச் சொல்கிறது:

*"மனிதரின் பேச்சு அவனுக்குப் / பிடிபடாது*
*பேசாத வேளையில் ஊமையாகின்றன / பாஷைகள்*
*நட்சத்திரங்களை விட / நிறையவே பேசுவது*
*அவற்றின் இடையுள்ள / இருள்."*

சென்ற மாதம் 7ம் திகதி பிருமிள் சென்னையில் காலமானார். ஐ. லவ்ரெட்ஸ்கியின் 'செ குவேரா வரலாறு' நூலை மொழிபெயர்த்த தருமு சிவராம், அந்நூலுக்கு எழுதிய அறிமுகவுரை அடுத்த பக்கத்தில் தரப்பட்டிருக்கிறது.

www.padippakam.com





# எர்னஸ்டோ செ குவேரா

கிறிஸ்தோபர் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்ததிலிருந்து அதன் சரித்திரம் நவீன கதியைஅடைகிறது. வடஅமெரிக்காவின் கனடாவை பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் காலனிகளாக்கினர். ஐக்கிய அமெரிக்கா (யு.எஸ்) ஆங்கிலக் காலனி ஆயிற்று. மத்திய, தென் அமெரிக்கா பெருமளவு போர்ச்சுக்கீஸ், ஸ்பானிஷ் என்ற மொழிகளைப் பேசிய ஐபீரியர்களின் காலனிகளாகிக் கூறு பட்ட பல்வேறு அரசியல் அமைப்புகளாக உருவாயிற்று. மத்திய, தென் அமெரிக்காவிலுள்ள கரிபியன் கடலில் உள்ள கியூபா, போர்ட்டோ ரிக்கோ, டிரினிடாட் ஹெயிட்டி, சக டொமினிக்கன் ரிபப்ளிக் போன்ற பெரிய தீவுகளும், கிரனடா போன்று பெரிய தீவுகளும், பஹாமாஸ் தீவுக் குழுவும் அடங்கும். மத்திய அமெரிக்கா என்பது மெக்ஸிக்கோவுக்கும் பனாமாவுக்கும் இடைப்பட்டது. பனாமாக் கால்வாய்க்குக் கீழே உள்ள பிரமாண்ட நிலப்பரப்பு தென் அமெரிக்கா. இதில் உள்ள கினியும், கரிபியனில் உள்ள தீவுகளில் பலவும் ஆங்கில, பிரஞ்சுக் காலனிகளாக இருந்தவை. போர்ட்டோரிக்கோ இப்போது யு.எஸ். பிரஜாமண்டலமாகிவிட்டது. குறிப்பாக கரிபியனின் மிகப்பெரிய தீவான கியூபா, ஸ்பானிய ஆதிக்கத்தின்கீழ் இருந்தமை கவனிக்கத்தக்கது.

ஐபீரியர்களது போர்ச்சுக்கீஸ், ஸ்பானிஷ் இரண்டும் லத்தீன் மொழியின் நெருங்கிய கிளைகளாதலால் பெருமளவுக்கு இவர்கள் ஆளுமை கொண்ட மத்திய, தென் அமெரிக்காவை லத்தீன் அமெரிக்கா என்று வழங்குவர்.

இந்தியாவை மேற்றிசை மார்க்கம் ஒன்றின் மூலம் அடையத் தேடிப் புறப்பட்டவர் கொலம்பஸ். எதிர்பாராது குறுக்கிட்ட இந்தக் கண்டத்தை இந்தியா என நம்பி அவரது மாலுமிகளினால் இதன் பூர்வகுடிகள் முதலில் இந்தியர் என அழைக்கப்பட்டு பின்பு செவ்விந்தியர் என விசேஷிக்கப்பட்டனர். இவர்களது இனவிசேஷமாக, ஆண்களுக்கும் முக ரோமம் வளர்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கலாசார ரீதியாக இந்தியாவின் வேத காலத்திய இயற்கை வழிபாட்டையும், தத்துவ வளர்ச்சியற்ற ஆன்மீக திருஷ்டியையும் இவர்களது சமூகங்கள் அடைந்திருக்கின்றன. தர்சனக் கிளர்ச்சிக்காக வேதகாலத்தில் 'ஸோம' என்ற பானம் உபயோகிக்கப்பட்டதைப் போலவே இவர்களும் கொக்கேயினின் மூலிகையான கொக்கோ போன்ற செடிகளை உட்கொண்டிருக்கின்றனர். இவர்களது சரித்திர வீழ்ச்சியின் பின், வெளியுலகினையும் தங்கள் சரித்திரத்தையும் மறக்கவே இவர்கள் இந்த மூலிகையை நாடினர்.

வெனிஸுலாவினல் கொலம்பஸ் 1498ல் இறங்கிய பின்பு ஐரோப்பியரது காலனீயம் அமெரிக்காவில் ஆரம்பிக்கிறது. மத்திய தென் அமெரிக்கர்களுக்கு போர்ச்சுக்கல், ஸ்பெயின் இரண்டிலுமிருந்து வந்த ஐபீரியர்கள், கிறிஸ்துவத்தின் புரடஸ்தாந்த, கத்தோலிக்க வடிவங்களையும், தங்கள் மொழிகளையும் கலாச்சாரங்களையும் கொண்டுவந்தனர். அன்றைய ஐரோப்பாவின் உணவுப்பற்றாக்குறையும் வறுமையும் ஐரோப்பியர்களை அமெரிக்காவுக்கு விரட்ட, போர்ச்சுக்கீஸ், ஸ்பானிஷ் அரசுகளை மத்திய,தென்அமெரிக்காக்களின் கனிப்பொருள்கள் ஈர்த்தன. தங்கம் வெள்ளி, செம்பு, தகரம், அலுமினியக் கனியான பவுக்ஸைட் போன்றவை இவை.

கியூபா முக்கியமாக சர்க்கரைக்கு அவசியமான கரும்புக் காடுகளைக் கொண்டிருந்தது. சீக்கிரமே ஐரோப்பாவின் நவீன சக்திகள் செவ்விந்திய பூர்வக்குடிகளிடமிருந்து கானகங்களை அபகரித்தன. செவ்விந்தியர்களை நோய்களும் ஐரோப்பியரும் பெருமளவு கொன்று குவித்துவிட்டாலும் நவீன காலங்களினூடே கூட இவர்களது சமூகங்கள் ஜீவித்திருக்கின்றன.

வெனிஸுலா போன்ற இடங்களிலும் இதர நாடுகளினது குறிப்பான பிராந்தியங்களிலும் இவர்களது தொகை பெரும்பான்மையானது. ஐரோப்பியர்களினால் ஆரம்பத்தில் தாழ்த்தி ஒதுக்கப்பட்ட இவர்களிடமிருந்தே ஐரோப்பியரின் லத்தீன் அமெரிக்க வழித்தோன்றல்கள், தங்கள் லத்தீன் அமெரிக்கத் தேசிய வாதத்தினது ரிஷிமூலத்தைப் பெறுகின்றனர். விசேஷமாக நவீன லத்தீன்அமெரிக்காவின்உன்னத மைந்தரான எர்னஸ்டோ செ குவேராவின் பிரக்ஞா விசேஷத்துக்கு மார்க்ஸீய சித்தாந்தம் மட்டுமல்ல, ஒரு உன்னத நாகரிகத்திலிருந்து வீழ்த்தப்பட்டவர்களாக லத்தீன் அமெரிக்காவின் மண்ணோடு மண்ணாகக் கிடந்த இந்தச் செவ்விந்தியர்களை அவர் நேசித்தமையும் ஒரு காரணமாகும். இவர்களது குஷ்டரோக காலனிகளில் சிகிச்சை இயக்கத்தை ஒரு காலகட்டத்தில் செய்து, அதற்காகவே தம்மை அர்ப்பணிக்க விரும்பியவர் செ.

செவ்விந்தியர்கள், ஐரோப்பியர்களையும் இந்தியர்களையும் போன்று இனங்களாகவும் மொழிவாரியாகவும் பிரிக்கப்பட்டிருந்தவர்கள். இவர்களது மொழிகளில் ஆழமான மனோபாவங்களுக்கு நிருபணங்கள் உள்ளன. ரிக் வேதப் பாடல்களின் சாயல்களை செவ்விந்தியரது பூர்வ கவிதைகளிலே காணலாம். இவர்களது கலாசாரங்கள், லோங்ஃபெலோவின் 'ஹயவாதா' காவியத்திலும் டி.எச்.லோரன்ஸின் 'புளும்ட் ஸர்ப்பெண்ட்' நாவலிலும் சிறப்பிக்கப்படுகிறது. கொன்ராட் ஃபிளெட்சரின் 'லைட் இன் த ஃபோரஸ்ட்' நாவலில் செவ்விந்தியர்களால் வளர்க்கப்பட்ட ஒரு ஐரோப்பிய சிறுவன் நாகரீக உலகுக்குத் திரும்பி வந்து, அதை மறுத்து எழுப்பும் செவ்விந்திய மதிப்பீடுகள் அற்புதமானவை. சர்ச்சின் அடைப்புக்குள் அல்ல பரந்துபட்ட வெளியிலேயே கடவுள் இருக்க முடியும் என்று கூறுகிற இவன், ஆங்கிலத்தில் கடவுளுக்கு ஒரே ஒரு சொல்தான் என்றும், தனது செவ்விந்தியமொழியிலோ நாற்பதுஅர்த்தச் சாயல்களில் கடவுளைக் குறிக்கச் சொற்கள் உள்ளன என்றும் கூறுகிறான். செவ்விந்திய நாகரீகத் தடயங்கள் அவர்களது மொழிகளில் மட்டுமல்ல.

மத்திய அமெரிக்காவின் மெக்ஸிக்கோ, குவாத்தமாலா, ஹொண்டூராஸ் ஆகிய தேசங்களில் இவர்களது இனப்பிரிவுகளான மாயா, ஸப்பட்டெக், மிக்ஸ்டெக், டொல்டெக், அஸ்டெக் என்ற புராதன செவ்விந்திய நாகரீகச் சின்னங்களை கட்டிடச் சிதைவுகளாகக் காணலாம். இதனால் இந்தப் பகுதிகளை 'கலாசாரங்களின் பின்னல்' என்றும், 'சாம்ராஜ்யங்களின் காட்சிக் கூட்டம்' என்றும் சொல்வதுண்டு.

தென் அமெரிக்காவில் பெரூ, சிலி, பொலீவியா ஆகிய நாடுகளைத் தொகுக்கும் பிரமாண்ட முதுகெலும்புத் தொடர் போன்ற அன்டீஸ் மலைத்தொடரில் பெரூவை மையமாகக் கொண்டு பரந்திருந்தது செவ்விந்தியரின் இன்கா சாம்ராஜ்யம். பதினாறாம்நூற்றாண்டில் இது பத்து லட்சமளவு பிரஜைகளைக் கொண்டு, கொலம்பஸுக்கு முந்திய அமெரிக்காவின் மிக முன்னேறிய பகுதியாகத் திகழ்ந்திருக்கிறது. பின்னாடி பிரதேச ஆய்வாளர்களினால் அன்டீஸின் சிகரங்களுள் ஒன்றான மச்சுப்பிச்சுவில் கண்டுபிடிக்கப்பட்ட புராதன செவ்விந்திய நகரத்தின் சிதைந்த பகுதிகள் 16ம் நூற்றாண்டில் இருந்ததை விடவும் பிரமாண்டமான ஒரு இன்கா சாம்ராஜ்யத்தின் தடயமாகும். சிலி நாட்டு ஸ்பானிஷ் மொழிக் கவியான பாப்லோ நெருடா, இந்த நகரின் மீது தான் தமது மகா காவியத்தை இயற்றினார். இந்தக் காவியத்தின் பகுதிகள் எர்னஸ்டோ சே குவேராவின் மனத்தில் குடிகொண்டிருந்ததை அவரது வரலாறு கூறும்.

காலனியாளர்களுள் போர்ச்சுக்கீஸர்கள் லத்தீன் அமெரிக்காவிலேயே பெரிய நாடான பிரேஸிலை உருவாக்கினார்கள். ஸ்பானியர்கள் தாங்கள் பிடித்த பகுதிகளை மெக்ஸிக்கோவிலிருந்து ஆர்ஜன்டினா வரை வெவ்வேறு தலைமைகளினுள் தனித்தனிப் பிராந்தியங்களாக்கினார்கள். சுரங்கங்களிலும், கியூபா, ஆர்ஜன்டைனா போன்ற நாடுகளின் தோட்டங்களிலும் வேலை செய்ய ஆப்ரிக்கர்களையும் சீனர்களையும் அடிமைகளாகப் பிடித்து வந்தன காலனீயக் கப்பல்கள். இது காலகதியில் ஒரு கூட்டுக்கலப்பான சமூகத்தை உருவாக்கிற்று. உதாரணமாக பிரேஸிலின் சமூக அமைப்பை எடுத்தால், முதலில் தோட்டங்களிலும் பிறகு சுரங்கங்களிலும் வேலை செய்யக் கொண்டு வரப்பட்ட ஆபிரிக்கர்கள் போர்ச்சுக்கீஸருடனும் செவ்விந்தியருடனும் கலந்தனர். இவர்களது வழித் தோன்றல்கள் சமீபகாலத்தில் இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து குடிவந்தவர்களுடன் கலந்தனர்.

போகப்போக காலனியர்கள் லத்தீன் அமெரிக்கத் தேசீயவாதிகளாக மாறினார்கள். போர்ச்சுக்கீஸ, ஸ்பானிய மேலாதிக்கத்துக்கு எதிராக இவர்களது கிளர்ச்சிகள் ஆரம்பித்தன.

ஸ்பெயினின் தலைநகரான மெட்ரிட், போர்ச்சுக்கல்லின் லிஸ்பன் ஆகியவற்றை 1808ல் நெப்போலியன் கைப்பற்றியதும், அவற்றின் அரசுகளுக்கு லத்தீன் அமெரிக்கா மீது இருந்த ஆதிக்கம் தளர்ந்தது. சைமன் பொலிவார் 1821ல் வெனிஸுலா, கொலம்பியா, ஈக்குவடோர் ஆகிய இடங்களை விடுவித்து, தெற்கே திரும்பிஆர்ஜன்டினிய விடுதலை வீரரான ஜோஸே டி சான்மார்ட்டின் உடன் இணைந்தார். சான்மார்ட்டினின் படைகள் ஏற்கனவே ஆர்ஜன்டைனா, சிலி, பெரு ஆகியவற்றை விடுவித்துவிட்டன. இவர்களது இணைப்பு குறுகிய காலத்தியதாக இருந்தாலும் லத்தீன் அமெரிக்காவிலிருந்த ஸ்பானிய மேலாதிக்கத்தை இவர்கள் வெளியேற்றிவிட்டனர். 1822இல் பிரேஸில் போர்ச்சுக்கல்லிடமிருந்து விடுபட்டது.

தொடர்ந்து இராணுவ அடக்குமுறைகள், குடும்பங்களின் பரம்பரை ஆட்சிகள், இவற்றிலிருந்து விடுதலை தருவித்த இயக்கங்களுடைய அரசியல் பரிசோதனைகள் ஆகியவற்றுக்கு லத்தீன் அமெரிக்க நாடுகள் ஆளாகின. இவற்றினூடே யு.எஸ். ஸின் அரசியல் பொருளாதார சக்தி ஊடுருவலாயிற்று. தோட்டங்கள், சுரங்கங்கள், பிறகு எண்ணெய்க் கிணறுகள் ஆகிய பிரமாண்ட தொழில்களுக்கு பணக்கார யு.எஸ். முதலீட்டின் அவசியம் இருந்திருக்கிறது. மேலும் லத்தீன் அமெரிக்காவின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு யு.எஸ் ஒரு முக்கிய சந்தை. உதாரணமாக 1959 வரை கியூபாவின்முக்கியஏற்றுமதியான சீனியை வாங்கிய நாடு யு.எஸ். தான். இது பொருளாதாரரீதியாக யு.எஸ் மீது லத்தீன் அமெரிக்கா தங்கி இருக்க வேண்டிய நிலையை உருவாக்கிற்று. இதன் விளைவுகள் பாரதூரமானவை.

உலக வல்லரசாக துரிதகதியில் வளர்ந்து கொண்டிருந்த யு.எஸ்., லத்தீன்அமெரிக்கா விஷயத்தில் தன்னைக் கேட்பாரின்மையினால் தனது நலனை மட்டுமே லத்தீன் அமெரிக்கக் கொள்கையில் கடைப்பிடிக்கலாயிற்று. பெரும்பாலும் யு.எஸ். கம்பெனிகளே லத்தீன் அமெரிக்கத் தொழிலாளர்களை லத்தீன் அமெரிக்காவில் வேலைக்கு வைத்திருந்தமை லத்தீன் அமெரிக்க அரசியலை வெகுவாக பாதித்தது. தொழிலாளர்கள் இப்போது அடிமைகளாக இல்லாவிட்டாலும், மனித வாழ்வுத் தரங்களை எட்டிவிடாமலே வைக்கப்பட்டிருந்தனர். கல்வியின்மை, மருத்துவ வசதியின்மை, குடிப்பதற்கும் சீரழிவிற்கும் ஊக்குவிக்கப்பட்டமை இவைதான் லத்தீன் அமெரிக்கத் தொழிலாளர்களது நிலைமை. இந்த நிலைமைகளை தொழிலாளர்கள் ஆலோசனைக்கும் இணங்க இவர்களது லத்தீன் அமெரிக்க அரசுகளே இவர்களைத் தண்டித்தன. தலைவர்கள் சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர். குடும்பங்கள் சீரழிக்கப்பட்டன. இந்நிலை தொழிலாளர் நலனை லட்சியமாக்கிய கம்யூனிஸ இயக்கங்களினது உலகளாவிய சக்திப் பெருக்கத்துக்குப்பின்பு யு.எஸ். ஸினால் கம்யூனிஸ எதிர்ப்பாக நியாயப்படுத்தப்பட்டது.

ஆர்ஜென்டைனாவில் எர்னஸ்டோ குவேரா சேர்னாவாகப் பிறந்து, டாக்டராகி, கியூபாவின் மேஜர் எர்னஸ்டோ செ குவேராவாக மாறி, 'செ' யாக அமரத்துவமடைந்தவரது சரித்திர பொருளாதார அரசியல் களம் இது தான். லத்தீன் அமெரிக்கா அடைந்த பொருளாதார லாபம், மிராசுதார- ராணுவ வர்க்கம் ஒன்றின் குறுகிய வட்டத்துக்கே இரையாவதையும், இதன் தீர்க்கமான வர்க்க வேறுபாட்டு விளைவையும் மார்க்ஸீயக் கோணத்திலிருந்து கணித்தவர்களுள் ஒருவர் எர்னஸ்டோ குவேரா. யு.எஸ்.ஸின் தனிநபர் பொருளாதாரமும், திறந்த சந்தையும், யு.எஸ்.ஸின் தனிநபர்களுக்கும் சந்தைக்குமே உதவின. லத்தீன் அமெரிக்காவில் பூர்ஷுவா அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் யு.எஸ். எறிந்த எச்சில் காசுகளையும், ராஜீயரீதியான லஞ்சங்களையும் பெறுமுகமாகவே அரசியல்பகடையை உருட்டினர். அத்துடன் ஆட்சியை பிடிப்பவர், சட்டவிரோதமாக நிலங்களை அபகரிக்கவும் முற்பட்டனர். நாட்டு மக்களிடமிருந்து ஆட்சிக்கு ஆபத்து வராதபடி யு.எஸ்.ஸின் குறுக்கீடு இவர்களைக் காப்பாற்றியதால், இவர்கள் தங்கள் நாட்டு நலனை உதாசீனம் செய்துகூட சுயலாபம் சம்பாதிக்க முன் வந்தனர். நாட்டு மக்களினால் அன்றி அன்னிய சக்திகளினால் நிர்ணயிக்கப்படும் ஆட்சியினரது இயற்கை இது.

இந்த அரசியல் அவலத்துக்கு மாற்றாக லத்தீன் அமெரிக்காவில் மார்க்ஸீய சிந்தனை பரவிற்று. லத்தீன்அமெரிக்க ஆட்சிகளும் யு.எஸ்.ஸும் மனிதாய ரீதியில் பொருளாதார சக்திகளைக் கையாண்டு உழைக்கும் மக்களுடைய நன்மைகளை முன்னிறுத்திச் செயல்பட்டிருந்தால் உலக நிலைமையே வேறுவிதமாக வளர்ந்திருக்கும்.

சோவியத் ரஷ்யாவுக்கும் யு.எஸ்.ஸிற்கும் ஆயுதபலப் போட்டி ஏற்பட்டு, தீவிரமடைந்து வந்த நிலையில் மனிதாய மார்க்கத்தை தேர்ந்து கொள்ளாவிட்டால் யு.எஸ்.ஸிற்கே பேராபத்து நேரிடும் என்ற நிலை ஏற்பட்டது. கியூபாவில் 1959-ல் கடும்போரின் பிறகு ஃபிடல் காஸ்ட்ரோவினாலும் எர்னஸ்டோ செ குவேராவினாலும் சிருஷ்டிக்கப்பட்ட புரட்சிகர அரசினது சோவியத் தொடர்பின் விளைவு இது. லத்தீன் அமெரிக்காவுடன் தனது தொடர்பு மனிதத் தன்மையற்றதாகுமாயின், கியூபாவின் உதாரணம் இதர லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் பரவி, தனது விரோதியான சோவியத் ரஷ்யாவின் ஆயுத வியூகத்தினுள் தன்னை முடக்கி விடும் என்பதுதான் யு.எஸ்.ஸிற்கு ஏற்பட்ட பேராபத்து. இந்தஅரசியல்மனோபாவத்தை உருவாக்கிய கொந்தளிப்பின் மையம் எர்னஸ்டோ செ குவேரா.

கியூப அமைப்பை கியூபாவினுள்ளேயே பரவாமல் தடுத்துவிடலாம் என யு.எஸ். நம்பிற்று. ஆனால், பத்து வருஷத்துக்குள்ளேயே பொலீவியாவில் செ குவேராவின் புதிய புரட்சி இயக்கம் ஒன்று ஆரம்பித்து, லத்தீன் அமெரிக்கா முழுவதும் தீ பரவும் நிலை எற்பட்டது. செ குவேராவைக் கொன்றுவிட்டால் இதை அணைத்துவிலாம் என நம்பி, அவரை எல்லாவித மனித தர்மங்களுக்கும் முரணாக கொலை செய்த யு.எஸ். சக்திகள் மீண்டும் ஏமாற்றமடைந்தன.

"எங்களுக்கு கற்பனாவாதம்-ரொமான்டிஸிஸம்-வேண்டும். அதிகப்படியாகவே அது எங்களுக்கு வேண்டியிருக்கிறது." என்று லெனின் கூறியது இவ்விடத்தில்தான் பொருந்தும். ஒரு புதிய செகுவேரா, அவரது மரணத்தின் பின் கற்பனாவாத ரொமான்டிக் பிரதிமையாக லத்தீன் அமெரிக்காவின் மனசாட்சி மீது விஸ்வரூபம் பெற்று எழுந்தார். எங்கும் கொந்தளிப்பை இது ஏற்படுத்திற்று. இதுவரை யு.எஸ்.ஸின் முகம் கோணாமல் நடந்துவந்த லத்தீன்அமெரிக்கத் தலைமைகள் கூட வேறுபட்ட விதங்களில் [illegible] இவ்வளவும் அஸ்திவாரமற்ற வெற்றுக் கற்பனாவாதத்தின் விளைவு அல்ல. எர்னஸ்டோ செகுவேராவின் வரலாறு அவரது விஸ்வரூபம் என்ற வெளிப்படை விருட்சத்தின் அளவுக்குப் பரந்துபட்ட சரித்திர வேரோட்டங்களை எங்களுக்கு உணர்த்துகிறது. ரொமாண்டிஸிஸம் அத்தபூர்வமாவது சரித்திர வேரோட்டங்களின் மூலம்தானேயன்றி வெறும் வாய்ச்சிலம்பத்தினால் அல்ல.

மெக்ஸிக்கோவில் 1950ல் உருவாகிய ஒரு புரட்சிகர அமைப்பினை இவ்விடத்தில் நாம் பின் நோக்கிப் பார்க்க வேண்டும். லத்தீன் அமெரிக்க புரட்சிவாதிகளை மட்டுமன்றி இந்தியாவின் எம்.என்.ராய் என்ற உயர்தர மார்க்ஸீய வாதியையும் கூட மெக்ஸிக்கோ ஈர்த்திருக்கிறது. (உலகில் முதன் முதலாக ஒரு இயக்க ரீதியான கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பை எம்.என்.ராய் மெக்ஸிக்கோவில் ஆரம்பித்திருக்கிறார். அதுவும் சோவியத் ரஷ்யா உருவாகு முன்பே) 1910ல் மெக்ஸிக்கோவில் ஏற்பட்ட அரசின் புரட்சிகரமான நிலச்சீர்திருத்தங்கள் தமது இயற்கையான வளர்ச்சியை அடைய முடியாதபடி யு.எஸ்.ஸின் அமைப்பு திசை திருப்பி இருக்கிறது. சமதர்மரீதியானஅமைப்பு எதுவும் தியாகப் பண்பினால் ஊக்குவிக்கப்படாவிட்டால் தோல்வியையே அடையும். இந்த தியாகப் பண்பு அதிகாரக் கட்டுமானங்களுக்கும் அப்பாற்பட்ட சுதந்திரமான ஹ்ருதய மலர்ச்சியாகவே சம்பவிக்க வேண்டும்.

ஜனநாயக மந்திரத்தை உச்சரிக்கும் முதலாளித்துவம், தனிமனிதனது லாபவேட்கையே பொருளாதார அபிவிருத்தியை விளைவிக்கவல்லது என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. இங்கே சுதந்திரம் என்ற வார்த்தை, ஹிருதய மலர்ச்சியின் தியாக வடிவங்களை மலினப்படுத்துகிற சுயநல வடிவம்பெறுகிறது. இந்த சுநயலத்தைச் சுற்றி அரண் அமைக்கிறது வர்க்கம். எனவே முதலாளீய சமூகங்கள் வாய்மொழியும் சதந்திரம், எர்னஸ்டோ செ குவேரா போன்றவர்களது சுதந்திர பூர்வமான தியாகப் பிழம்புகளின் முன்னால் எலும்புக் கூடுகளாக நிற்கின்றன. வெறும் சிந்தாந்தத்தையும் அரசியல் கட்டுமானத்தையும் மீறிய பரிபூரணமான சுதந்திரமே செகுவேராவினது தியாக புருஷத்வத்துக்கு ஆதாரம். தமது பார்வையிலிருந்து, வேறுபட்ட பார்வைகளுடன் அவர் ஒரு சமூக பாவத்துக்காகக் கூட ஒத்துப் போகாதவர். செ ஒரு கம்யூனிஸ்ட் என்று சொல்லும் போது இது நினைவில் இருக்க வேண்டும். இதற்கு ஒரு உதாரணத்தைக் காட்டலாம்.

சோவியத் ரஷ்யாவுடன் கியூபாவின் உறவுகள் ஆரம்பித்ததை ஒட்டி ரஷ்ய அமைச்சரவையின் பிரதம உதவிச் செயலாளரான மிக்கோயனும் செ யும் சந்தித்துப் பழகி இருக்கிறார்கள். கியூபாவின் பாதுகாப்புக்கு அவசியமான ஒரு வல்லரசின் இந்த பிரதிநிதியுடன் பழகும்போது கூட செ தமது பார்வைகளை சுமுகபாவத்துக்காக விட்டுக் கொடுக்கவில்லை. அடிக்கடி செ தம்மை மறுப்பதைக் கவனித்த மிக்கோயன், "உங்கள் பெயரும் பொருத்தமாகத்தான் இருக்கிறது. செ என்றால் ஆர்மேனியன் மொழியில் 'அல்ல' என்று அர்த்தம்" என்றார். செ வாய் விட்டுச் சிரித்தார்.

கியூபா 1959ல் மார்க்ஸீய அரசு முறைக்கு மாறியபோது அதை அந்த அமைப்பிலிருந்து பிய்த்து எடுத்துவிட யு.எஸ். வன்முறை, நாசவேலை, பொருளாதார சூன்யம் போன்ற சகல வழி முறைகளையும் கையாண்டது. முதன்மையாக கியூபன் சர்க்கரையை யு.எஸ். வாங்க மறுத்தது. உடனே சோவியத் ரஷ்யா முன்வந்து கியூபாச் சர்க்கரையை தானும் இதர சோவியத் அணியினது நாடுகளும் வாங்க ஏற்பாடு செய்தது. இந்த ஏற்பாட்டை கியூபன் கோணத்தில் நிர்வகித்தவர் செ.

கியூபாவின் மார்க்ஸீய அமைப்பு பொருளாதாரத் தோல்வியடைந்துள்ளது என்றும், இதைக் காப்பது சோவியத் ரஷ்யாவுக்கு உபயோகமாக, யு.எஸ்.ஸிற்கு எதிராக கியூபா இருப்பதுதான் என்றும் கூறப்படுகிறது. கியூபாவுக்காக தினசரி எண்பது லட்சம் (80,00,000) டொலர்களை ரஷ்யா செலவு செய்கிறது என்பதை இவ்விடத்தில் நாம் கவனிக்க வேண்டும். இதன் எதிர்விளைவாகவும் செ குவேராவினது விஸ்வரூபப் பிரதிமையின் அழுத்தத்தினாலும், லத்தீன் அமெரிக்காவில் யு.எஸ் தனது கொள்கை அடிப்படைகளை மாற்றிற்று என்பதுதான் இங்கே மிக முக்கியமான விஷயம். உதாரணமாக, லத்தீன் அமெரிக்காவின் பிரமாண்ட நாடாகிய பிரேஸில், யு.எஸ்.ஸின் செல்லப்பிள்ளை ஆகி இருக்கிறது என்றால் இதன் நேரடிக் காரணம் செகுவேராவின் தியாக புருஷத்வம்தான். இது லத்தீன் அமெரிக்காவில் மட்டுமல்ல யு.எஸ்.ஸாலேயே உணரவும் ஆராயவும் போற்றவும் படுகிற விஷயம். அவரைப்பற்றி ஏராளமான வரலாற்றுப் பார்வைகள் பிறந்துள்ளன என்பது ஒருபுறமிருக்க, கவிதைகள் நாடகங்கள் நாவல்கள் ஆகியவற்றையும் அவரது சொரூபம் ஊக்குவித்திருக்கிறது.

'கியூபாவின் தலைவிதியை நிர்ணயித்த அரசியல் தலைவராகவும், அமைச்சராகவும் இருந்த சௌகர்ய நிலையைத் துறந்து, ஒவ்வொரு கணமும் உயிருக்கு ஆபத்தைத் தருகிற கெரில்லா வாழ்க்கையை லத்தீன் அமெரிக்க மக்களுக்காக மேற்கொண்டு மடிந்தவர் செ.' என்ற ஒருவரி வரலாறே பிரமிப்பை தந்துவிடும். உலக சரித்திரத்தில் செகுவேராவின் துறவுக்குச் சமமாக இரண்டாயிரத்து ஐநூறு வருஷங்களுக்கு முந்திய சித்தார்த்த கோதமரின் துறவைத்தான் சொல்ல வேண்டும். நவீன மனிதவாழ்வினது பாலைவெளியில் தமது வாழ்வுக்கு ஊட்டம் தேடுகிறவர்களுக்கு, ஒரு அற்புத நீரூற்று செயின் வரலாறு. முதுகெலும்பு இற்று வீழ்ந்துகொண்டிருக்கும் பழைய மதிப்பீடுகள், வாயளவில் பேசும் சுயநலமின்மை, செ யின் சொரூபமாக பழைய மதிப்பீடுகள் யாவற்றையும் தகர்த்து பீறிட்டு எழுகிறது. அரசியலிலிருந்து அகதர்சனம் வரை எவ்வித மார்க்கத்துக்கும் ஒரு நவீன கலங்கரை விளக்கம் செ வாழ்ந்து காட்டிய தியாக புருஷத்வம். தியாகிகள் சிந்தும் ஒவ்வொரு துளி உதிரமும் ஒரு புதிய உலகத்தைச் சிருஷ்டிக்க வல்லது என்பதற்கான சாட்சியம் செ யினது தியாகத்தின் விளைவுகள்.

வெறும் பொருளாதார வளர்ச்சி, போகங்களுடன் முடிந்துவிட முடியும். மனிதாய உணர்வுடன் சமதர்மப் பார்வைகளிலிருந்துபிறக்கும் வளர்ச்சி, ஒரு சிறிய வெற்றி காட்டினால்கூட, மனிதத்துவத்தின் பரிணாம வெற்றியாக அதை நாம் கொள்ள வேண்டும். செ குவேரா போகங்களுக்கு இட்டுச் செல்லும் பொருளாதார வளர்ச்சியினை லட்சியமாக்கியவரல்லர். மனிதஜீவனது உன்னத குணங்கள் வெளிப்பட வேண்டும் என்பதே அவரது லட்சியம். இதற்குத் தடையான அறிவீனங்கள் களையப்பட வேண்டும். எனவே முதல் படியாக கல்வியறிவு பெருக வேண்டும். செகுவேராவுக்கு ஒரு நிரந்தர அஞ்சலியாக கியூபா இதைச் சாதித்துள்ளது. அங்கே 96 சதத்துக்கும் மேற்பட்ட மக்கள் இன்று கல்வியறிவு பெற்றவர்கள். ●

> 'கியூபாவின் தலைவிதியை நிர்ணயித்த அரசியல் தலைவராகவும், அமைச்சராகவும் இருந்த சௌகர்ய நிலையைத் துறந்து, ஒவ்வொரு கணமும் உயிருக்கு ஆபத்தைத் தருகிற கெரில்லா வாழ்க்கையை லத்தீன் அமெரிக்க மக்களுக்காக மேற்கொண்டு மடிந்தவர் செ.' என்ற ஒருவரி வரலாறே பிரமிப்பைத் தந்துவிடும். — பிரமிள்


www.padippakam.com



# கிடுக்கிப் பிடிக்குள் தவிக்கும் கிழக்கு மக்கள்



இரா. துரைரத்தினம்




பல புதுவருடங்கள் பிறந்தும் எமது மக்களுக்கான புதுமையான வாழ்க்கை ஆரம்பிக்கப்படவில்லை. குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை எடுத்துக்கொண்டால் பலதரப்பினராலும் அப்பாவிமக்கள் நெருக்கடிக்குள்ளாக்கப்படுகின்றனர்.

இராணுவ முகாம்களை எடுத்துக் கொண்டால், மட்டக்களப்பில் தெற்கே பாணமை முதல் வடக்கே வெலிக்கந்தைவரை அமைந்துள்ள பிரதான வீதியிலேயே பெரும்பாலானவை அமைந்துள்ளது. இப் பிரதான வீதியின் இரு பக்கங்களிலும் அதிகமான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பிரதான வீதிக்கும் வங்காளவிரிகுடா கடல் அமைந்துள்ள இடத்துக்கும் இடையேயான தூரம் அண்ணளவாக அரை கிலோமீற்றர் முதல் இரண்டு கிலோ மீற்றர் வரை இருக்கும்.

இதேபோல் பிரதான வீதிக்கு மேற்கு பக்கமாக அமைந்துள்ளது வயல் நிலங்களாகும். இது சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. பொத்துவிலில் இருந்து வெலிக்கந்தைவரை தொடர்ச்சியான நீரோடையும் (மட்டக்களப்பு வாவியும், அதனைத் தொடர்ந்த நீரோடைகளும்) அமைந்துள்ளது. இந் நீரோடைஅமைந்துள்ள பகுதிக்கும் கடல் அமைந்துள்ள பகுதிக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில் முஸ்லீம் மக்கள் செறிந்து வாழ்கின்றனர்.

பாணமை இருந்து வெலிக்கந்தை வரை அமைந்துள்ள நீரோடைக்கு அப்பால் உள்ள காட்டுப் பகுதிகளிலேயே புலிகளின் முகாம்கள் அமைந்துள்ளன. (இதனைப் புலிகள் 'பெய்ரூட்' என அழைப்பர்)

இவ்விரு மாவட்டங்களிலும் வாழ்கின்ற முதலாளிகள், போடிமார், செல்வந்தர்கள் போன்றோரிடம் சுமார் பத்துவருடங்களாக 90 சதவீதமானவர்களிடம் இருந்து புலிகள் பணம் பறித்துக் கொண்டிருந்தமையினால் இவர்கள் பெரும் பொருளாதார கஷ்டத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர். தங்களது வாழ்க்கையை நடாத்த முடியாமல் வங்கிகளிலும் ஏனையவர்களிடமும் கை நீட்டி நிற்க வேண்டியவர்களாக மாறிவிட்டனர்.

இவர்களில் பெரும்பான்மையோர் புலிகளின் பணவசூலினால் வீடுவாசல்களை விற்றும் உழவுயந்திரம், லொறி, மோட்டார் வண்டி என்பனவற்றையும் கால்நடைகளை விற்றும், தங்களிடம் உள்ள அசையும் அசையா சொத்துக்களை விற்றும், பாதிப்புகளுக்காக அரசிடம் இருந்து பெறப்பட்ட நஷ்டஈட்டுப் பணம், அறுவடை செய்த நெல், தானியம், தாலிக்கொடி என்பவைகளை விற்றும் பணம் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பணம் வழங்காத, வழங்கமுடியாத பலர் புலிகளானால் கைது செய்யப்பட்டு அவர்களது சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர். சிலர் அவகாசம் பேசியும் விடுதலையாகி வருகின்றனர்.

இம் மாவட்டங்களில் உள்ள முக்கிய பிரச்சினை பணம் பறிப்பு பிரச்சினையாகும். பல வருடங்களாக இது நடந்துவருவதால் நூற்றுக்கணக்கான உற்பத்தியாளர்கள் பொருளாதார கஷ்டத்தை எதிர்நோக்குவதோடு உற்பத்தி அதிகரிப்பும் தடைப்பட்டு போயுள்ளது. இதனால் வறுமை பஞ்சம் பசி பட்டினி போன்ற அவலங்கள் நிறைந்துள்ளன.

உற்பத்தி செய்வதில் ஈடுபடுத்தும் பணத்தைப் பறித்து புலிகள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதால் ஒருபுறத்தில் உற்பத்தி வீழ்ச்சி ஏற்படுகின்றது. மறுபுறத்தில் புலிகள் இதனைத் தங்கள் நடவடிக்கைகளுக்குச் சாதகமாக பயன்படுத்தி வருகின்றனர்.

பணம் கேட்டு, மறுப்பவர்களுக்குப் புலிகள் திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

1. மரணதண்டனை.
2. அசையும், அசையா சொத்துக்கள் பறிமுதல்.
3 மறுப்பவர் குடும்பத்தில் ஒருவரைக் கட்டாயப் பயிற்சிக்கு அழைத்தல்.
4 கைதிகளாய் சிறையில் அடைத்தல்.
5 பணம் கேட்டவர் ஓடிமறைந்தால் அவர் குடும்பத்தில் ஒருவரைப் பிடித்து வதைமுகாமில் அடைத்தல்.
6 வாகனங்கள், வயல்நிலங்கள், கால்நடைகள் பறித்தல்.
7 அடையாள அட்டை, அத்தாட்சிப் பத்திரங்களைப் பறித்தல்.
8 காணி உறுதிகளைப் பறிமுதல் செய்தல்.
9 எச்சரிக்கைக் கடிதம் அனுப்புதல்.
10 காணி உடைமைகளை எழுதி வாங்குதல்....

இம்மாவட்டங்களில் புலிகளினால் பணம் பறிக்கப்பட்டவர்களில் சிலர் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு புத்தி சுவாதீனம் அற்றும், தலைமறைவாகியும், தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டும், சிலர் வெளிநாடு தப்பியோடியும். சிலர் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் மறைந்து வாழ்கின்றனர். இதனால் அவர்களுக்கு சாதகமானதும் பாதகமானதுமான விடயங்கள் அமைந்து விடுகின்றன.

புலிகளின் சில இராணுவ நடவடிக்கைகள் பொதுமக்களுக்கும் இராணுவத்துக்குமிடையிலான உறவைத் தடுக்குமுகமாகவே மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே பிரதானவீதியில் அமைந்துள்ள செங்கலடி, கொம்மாந்துறை, வந்தாறுமூலை, சித்தாண்டி, மொறக்கொட்டாஞ்சேனை, சந்திவெளி, கிரான், கோரகல்லிமடு போன்ற பகுதிகளில் திட்டமிட்ட உதிரியான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

அரசபடையினருக்கு ஏற்படுகின்ற இழப்புக்களை பாதுகாக்குமுகமாக படையினர் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளும் அத்துமீறல்களும் அவர்களுக்கும் பொதுமக்களுக்கம் இடையே முரண்பாடுகளை தோற்றுவிக்கும் என்பது புலிகளின் தந்திரோபாயமாகும்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் செயல்படுகின்ற பொதுஸ்தாபனங்கள், அரச நிறுவனங்கள், ஏனைய கட்சியின் சில குடும்ப அங்கத்தவர்களை புலிகள் தங்களது தேவைகளை நிறைவேற்றப் பயன்படுத்துகின்றனர்.


அதுமட்டுமன்றி மேற்குறிப்பிட்ட அமைப்புகள், அங்கத்தவர்கள் எல்லாம் புலிகளின் அனுமதியுடனேயே செயல்பட வேண்டும்.

இராணுவ முகாம்கள் அமைந்திருக்கும் கிராமங்களில் புலிகளின் உதிரியான நடவடிக்கைகள் குறைந்தே காணப்படும்.

பொதுமக்களுக்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களை அடிக்கடி மாற்றுவதால் புலிகளின் உதிரி நடவடிக்கைகள் அதிகரிக்கும். அதுமட்டுமன்றி, அப்பகுதிகளில் மக்கள் நிலையான ஒரு முடிவை எடுக்கமாட்டாமல் திணறுவார்கள். புலிகளுக்கும் இராணுவத்துக்கும் மாறி மாறி தலை அசைக்க வேண்டும்.

மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் நிரந்தரமாக முகாம் அமைக்கப்பட்டிருந்தால், அக்கிராம மக்களுக்கும் படையினருக்கும் ஒரு சுமுகமான உறவு ஏற்படுகிறது. இப்படியான உறவுகள் மக்கள் நிலையான முடிவுகளை எடுத்துக் கொள்ளத் தூண்டும்.

புலிகளின் பணப்பறிப்பு மிரட்டல்களுக்கு பயந்து, மக்கள் தங்களது பாதுகாப்புக்காக இதனைச் சாதகமாகவும் பயன்படுத்துவர். சில இடங்களில் அவர்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்படும். நடைமுறையில் பல கஷ்டங்களும் ஏற்படும். முகாம்களை அமைப்பதும் எடுப்பதுமாக இருந்தால் அப்பகுதியில் வாழும் மக்கள் ஒரு முடிவை எடுப்பதில் பல சிரமங்கள் ஏற்படும். சில முகாம்கள்அகற்றப்பட்ட பகுதிகளில் உள்ள குடும்பங்கள் தலைமறைவு வாழ்க்கையில் தற்சமயம் ஈடுபட்டு வருகின்றனர். ●




யுத்தக் களைப்பு மக்களின் முகங்களிலிருந்து இன்னும் மாறவில்லை இது தான் யாழ்ப்பாணத்தின் உண்மை நிலை. விமானத் தாக்குதல், ஷெல் தாக்குதல் மற்றும் புலிகளின் கெடுபிடிகளில் இருந்து விடுபட்ட தென்பு மக்களிடையே தென்பட்டபோதும் நிரந்தர அமைதி வருமா என்பதே குடாநாட்டு மக்களின் ஏக்கமாக உள்ளது.

யாழ்ப்பாணப் பாடசாலைகள் மீண்டும் ஒரு உத்வேகத்துடன் செயல்பட ஆரம்பித்திருக்கின்றன. ஆசிரியர்கள் நிர்ப்பந்தம் இன்றி தங்கள் கடமைகளை செய்கிறார்கள். அதேபோல் மாணவர்கள் படிப்பை பயமின்றித் தொடர்கின்றனர்.

வீதிச் சோதனைகள், தேடுதல்கள் விசாரணைகளால் ஆசிரியர்கள், மாணவர்கள் தொந்தரவுக்கு இலக்கானபோதும் புலிகள் அதிகாரத்தில் இருந்தபோது, இன்று இருக்கின்ற நிலை கூட இருக்கவில்லை என்பதே பொதுவானஅபிப்பிராயம்.

அரசாங்க ஊழியர்கள் தங்கள் ஊதியத்தில் வாழ்க்கைநடத்துகிறார்கள், மற்றவர்கள் தொழில் வாய்ப்பு எதுவும் இல்லாத நிலையில் அரச நிவாரணத்திலேயே வாழ்நாளைக் கழிக்கிறார்கள். கடற்றொழில் பெரிய எவில் உயரப்போய் செய்வதற்கு அனுமதி வழங்கப்படாவிட்டாலும் அனுமதி வழங்கப்பட்ட பகுதிகளில் மீன்பிடித் தொழில் நடைபெறுகிறது. கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே அவர்களும் தமது வாழ்க்கையை ஓட்டுகிறார்கள்.

கடற்கரைப் பிரதேசங்களில் ஒரு கிலோ மீன் 80 ரூபாவிலிருந்து 150 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. பிற இடங்களுக்கு சைக்கிள்களில் எடுத்து வருபவர்களிடம் இருந்து ஒரு கிலோ 300 ரூபாவிற்கும் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இராணுவ நடவடிக்கையின் போது இங்கு வாழ்ந்த மக்கள் அனைவருமே இடம்பெயர்க்கப்பட்டதால் ஆடு, மாடு, கோழி, போன்றவற்றின் தொகை மிகவும் குறைந்து போயுள்ளது. இதனால் ஒரு கோழி முட்டை 14 ரூபாவிற்கு விற்கப்படுகிறது.

இங்கு அனைத்துப் பொருள்களுமே தனிப்பட்ட வணிகர்கள் திருகோணமலையில் இருந்து கடல் வழியாக கொண்டு வருகிறார்கள். இராணுவத்திடம் இருந்தும் கொள்வனவு செய்கிறார்கள். இதனால் நாட்டின் ஏனைய பகுதிகளைக் காட்டிலும் பொருள்களின் விலை அதிகமாகவே உள்ளது.

யாழ்குடாநாட்டிற்குள் பிரயாண வசதிகள் ஓரளவு சீராக இருந்த போதிலும் குடாநாட்டிற்கு வெளியே போய் வரும் பயணிகள் மிகுந்த கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தொலைத்தொடர்பு வசதிகள் சீர் செய்யப்பட்டு வெளிநாட்டில் இருந்துவரும் பணத்தை யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்தும் வரையிலும் பெரும் தொகையான மக்கள் கொழும்புப் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை உருவாவது தவிர்க்கப்பட முடியாது.

"முந்தி, காசு வாறது அவைக்கு (புலிகள்) தெரிஞ்சால் பங்கு கேட்பினம் எண்டதாலை கொழும்புக்குப் போய் இரகசியமாக வாங்கி கொண்டுவர வேண்டியிருந்தது இப்ப இஞ்சையே அலுவல் பார்க்கலாம் என்றால் நாங்கள் ஏன் கொழும்புக்குப் போகப் போறம்?" என்று யாழ் மத்திய கல்லூரி மைதானத்திற்கு அருகில் சந்தித்த ஒரு பெண் கூறினார்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறிவந்த புலிகள், இன்று குடாநாட்டு மக்களின் கணிசமான வெறுப்பைச் சம்பாதித்துள்ளார்கள். 'புலி நாய்களை விட ஆமிப் பேய்கள் பரவாயில்லை' என்று யாழ்ப்பாணத்தில் பேசிக் கொள்வதைக் கேட்கமுடிகிறது.

இங்குள்ள மக்கள் இன்று புலிகளை வெறுப்பதற்கும் காட்டிக் கொடுப்பதற்கும் பிரதான காரணம் புலிகளின் கொடுங்கோன்மை. புலிகள் அதிகாரங்களைப் பயன்படுத்தி வசதியானவர்கள் கஷ்டப்பட்டவர்கள்என்ற பேதமின்றி சாத்தியமான எல்லா வழிகளிலும் குடாநாட்டு மக்களைக் கசக்கிப் பிழிந்தார்கள். அவர்களது சொத்துக்களை மண் மீட்பு நிதி என்ற பேரில் பிடுங்கிக் கொண்டபின்னர் சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியாமல் கையை விரித்து மக்களை நிர்க்கதியான நிலைக்குத் தள்ளியமை, புலிகளின் தலைவர்களது சுகபோக வாழ்க்கை முறை வெளிப்பட்டமை, கடைசி நேரத்தில் திட்டமில்லாத பின்வாங்கலால் மக்களை மேலும் துன்பத்திற்குள்ளாக்கியமை... இவை யாவுமே இந்த மக்களின் கொதிப்பிற்கு காரணம்.

புலிகளின் முன்னால் கூனிக் குறுகி நின்ற இந்த மக்கள் நாவற்குழிப் பாலத்தில் சனநெரிசலின் மத்தியில் புலிகளின் காவல்துறையினருடன் மோதலில் ஈடுபடவும் துணிந்ததிலிருந்து அவர்கள் பட்ட துன்பத்தை கஷ்டத்தை விளங்கிக் கொள்ளலாம்.

யாழ்நகர் நோக்கிப் படை எடுத்திருக்கும் இதர தமிழ் இயக்கங்கள் இந்த மக்களின் அவலங்களை நெருக்கடிகளைப் புரிந்துகொண்டு நிதானத்துடன் செயற்படப் போகிறார்களா? அல்லது கடந்தகாலச் செயற்பாடுகளுக்காகப் பழிவாங்கலில் ஈடுபடுவார்களா? என்ற பயம் கலந்த எதிர்பார்ப்பு இந்த மக்களிடையே காணப்படுகிறது. கடந்த கால கசப்பான அனுபவங்கள் அவர்களது நெஞ்சைவிட்டு அகலவில்லை. ●

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்